விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 04 திங்கட்கிழமை (21.09.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 276

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# விசாரணை அறிக்கையை ஐ.நாவிடம் சமர்ப்பிக்குக

## ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

**காணாமல் போனோர் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் இரண்டாவது அறிக்கையை ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு அமர்வில் சமர்ப்பிக்குமாறு கோரி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

ஜெனிவாவின் முன்னாள் இலங்கையின் பிரதிநிதிகளான பேராசிரியர் தயான் ஜயதிலக்க, தமரா குணநாயகம், பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ரஜீவ் வீஜேசிங்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி மற்றும சட்ட ஆலோசகர் மனோஹரா. டி சில்வா உட்பட 29 பேரின் கையொப்பம் அடங்கிய கடிதம் ஒன்றே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16-ம் திகதி ஐ.நா மனித உரிமை ஆணையாளரினால் முன வைக்கப்பட்ட யோசனைக்கு பதிலளிக்கும் வகையிலேயே குறித்த அறிக்கையை வழங்க அவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறு

23ஆம் பக்கம் பார்க்க....

## புதிய தீர்மானத்துக்கு சீனா, ரஷ்யா ஆதரவு

(கொழும்பு)

ஜெனிவாவில் இடம்பெற்று வரும ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடரில் இலங்கையின் ஒத்துழைப்புடன் அமெரிக்கா கொண்டு வரவுள்ள புதிய தீர்மானத்துக்கு சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளும் ஆதரவளிக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அமெரிக்காவின் தலைமையில்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா குழுவினர் இலங்கை வருவர்!

(கொழும்பு)


பலவந்தமாக அல்லது விருப்பத்துக்கு மாறாக காணாமல் போனோர் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்கள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

நவம்பர் 9-ம் திகதி முதல் 18-ம் திகதி வரை இவர்கள் இலங்கையில் தங்கியிருக்கவுள்ளதாகவும் ஜெனிவாவில் இடம்பெறும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு அமர்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ஆதரவு திரட்ட தீவிர கவனம்!

### ஜெனிவா செல்கிறார் தூதுவர்



(கொழும்பு)

இலங்கை தொடர்பாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கொண்டுவரவுள்ள தீர்மானத்துக்கு அங்கத்துவ நாடுகளின் ஆதரவைத் திரட்டிக் கொள்வதில் வாசிங்டன் தீவிர கவனம் செலுத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், இது தொடர்பான பணிகளைக் கவனிக்க இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் ஜெனிவாவுக்கு சென்றுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பின் பெண் போராளி ஒருவரை கொலை செய்தது இராணுவம்

### மருத்துவர் தமிழ்வாணி சாட்சியம்

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் போது இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாமுக்கு வந்த அன்றே இராணுவத்தினர் பெண் போராளி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலை செய்து அவரது உடலை முகாமில் போட்டனர்.

இவ்வாறு அகதி முகாமில் மருத்துவப் பிரிவில் பணியாற்றிய தமிழ் யுவதியான தமிழ்வாணி முகாமில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விபரித்துள்ளார்.

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த சமயம் 2009 இல் இறுதி யுத்தத்தில் சிக்குண்டு வவுனியா நலன்புரி முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

அந்தவேளை இராணுவத்தினர் நடந்து கொண்ட விதம் குறித்து ஐக்

24ஆம் பக்கம் பார்க்க....

## சூடான உருளைக்கிழங்கு நடவடிக்கை ஐ.நாவால் அரசிடம் கையளிப்பு!

### கொழும்பு ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பிலான ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கை, சூடான உருளைக்கிழங்கு நடவடிக்கை என்ற பெயரில் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கை அதிகாரபூர்வமாக வெளியிடப்படுவதற்கு முன்னர் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேனும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் தொடர்ச்சியாக தொடர்பில் இருந்து வந்தனர்.

இந்த தொடர்பாடல்களின் போது இலங்கை தொடர்பான இந்த அறிக்கையை அதிகாரபூர்வமாக வெளியிடுவதற்கு முன்பாக, அதன் உள்ளடக்கங்கள் பற்றிய இரகசியம் கடுமையாக பாதுகாக்கப்பட வேண்டும் என ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் சூடான உருளைக் கிழங்கு நடவடிக்கை என்ற பெயரில் இந்த அறிக்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை கடந்த 11 ஆம் திகதி பெற்றுக் கொண்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இந்த அறிக்கையின் மூன்றாவது பகுதியில் குறிப்பிடப்பட்டிருந்த இலங்கை தொடர்பான விசாரணையின் பிரதான கண்டறிவுகள் தொடர்பிலான பகுதியை வாசித்தார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனையை ஏற்கத் தயார்

### ஐ.நா விசாரணை குறித்து பொன்சேகா விளக்கம்

(கொழும்பு)

இலங்கையில் நடந்த இறுதி கட்ட போரின் போது இராணுவத்தின் மீது போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அது குறித்த எந்த விசாரணையையும் எதிர்கொள்ள தயாராக இருக்கிறேன் என முன்னாள் இராணுவத் தளபதி சரத பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நம்பத்தகுந்த ஆதாரங்களுடன் விசாரணை நடத்தப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனையை ஏற்க தயார் எனவும் அவர் கூறியுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....



நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இராணுவ வேலியில் மின்சாரம் குடும்பப் பெண் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா அடப்பங்குளம் அதிரடிப்படை முகாமை அகற்றக்கோரி அந்தப் பகுதி மக்கள்மக்கள் நேற்று போராட்டம் நடத்தியுள்ளனர்.

வவுனியா செட்டிகுளத்திற்கு அருகில் அடப்பங்குளத்தில் உள்ள அதிரடிப்படை முகாம் காணியின் முட்கம்பி வேலியில் படையினரால் பாய்ச்சப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்ற மின்சாரம் தாக்கியதில் 55 வயதுடைய கந்தசாமி ராஜேஸ்வரி என்ற பெண் மரணமானார்.




அதிரடிப்படையினர் நிலைகொண்டுள்ள காணிக்கு, அடுத்ததாக உள்ள காணியில் வசித்து வருகின்ற இந்தப் பெண்மணி,இரு காணிகளை பிரிக்கும் முட்கம்பி வேலியின் மறுபக்கத்தில் இருக்கும் வேப்பமரக் கன்றில், வேப்பங்கொழுந்தைப் பறிப்பதற்காக வேலியின் முட்கம்பியில் சாய்ந்தபோது, அந்தக் கம்பியில் பாய்ச்சப்பட்டிருந்த மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தையடுத்து, அந்த அதிரடிப்படை முகாமை அகற்ற வேண்டும் எனக் கோரி அடப்பங்குளம் உள்ளிட்ட செட்டிகுளம் பிரதேச மக்கள் நேற்று அமைதியான கவனயீர்ப்பு பேரணி ஒன்றை நடத்தினர்.

மரண வீட்டிற்கு வருகை தந்திருந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிமலன் மற்றும் வடமாகாண சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கம் ஆகியோரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை பேரணியில் கலந்து கொண்டிருந்தவர்கள் கையளித்துள்ளனர்.

அடப்பங்குளம் பகுதியில் செட்டிகுளம் பிரதான வீதியில் நடத்தப்பட்ட இந்தப் பேரணியில் கலந்து கொண்டிருந்தவர்கள், அடப்பங்குளம் அதிரடிப்படை முகாமுக்கு எதிரில் வைத்து மகஜர்களைக் கையளித்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அடப்பங்குளம் அதிடிப்படை முகாம் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. செட்டிகுளம் பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (எ-12)

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பையா சிவக்கொழுந்து



கைவேலி புதுக்குடியிருப்பை வசிப்பிடமாக கொண்ட

திருமதி தம்பையா சிவக்கொழுந்து

*அவர்கள் 20.09.2015 நேற்று ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.*

*இவர் இராஜரட்ணம் (ஒய்வு பெற்ற அதிபர் வெள்ளவத்தை), இராசம்மா-கைவேலி புதுக்குடியிருப்பு, புற்பநாதன்-கரவெட்டி, கந்தையா (முல்லைத்தீவு சமாச ஒய்வு பெற்ற பணியாளர்), ஜெகதீஸ்வரி-கனடா ஸ்ரீறஞ்சினி-விசுவமடு, பவானி -கனடா, காலம்சென்ற தயாபரன், பிரதீபராஜ் ஆகியோரின் தாயாரும்,*

*இந்திரா (ஓய்வுபெற்ற அதிபர்), துரைசிங்கம் (கோபாலு), துளசி, அமுதா, பகீர் (கனடா) கிருஸ்ணராஜா(கனடா), தெய்வராசா(அதிபர் தர்மபுரம்) ஆகியோரின் மாமியாரும்,*

*கார்த்திகா (லண்டன்), அபி (அவுஸ்ரேலியா), கண்ணதாசன் (லண்டன்), சசி(யாழ்ப்பாணம்), அகிலன்(புதுக்குடியிருப்பு), நஜி (அமெரிக்கா), டிலானி, தாட்சாயினி,நிச்சு,கிஷாலினி, துஷாந்தன், லக்சன், டிலானி, பவித்திரன்(கனடா), சபிதா(கனடா), சாதுஜா, நிதர்சனா, டினோசன், கோபிசன்(கனடா), லதுசன்(கனடா), விதுஷன் ஆகியோரின் பேர்த்தியாரும் மதுஷா, டினுஷன், நிதுசன், நிருந்தன், கபினா, அக்ஷயா ஆகியோரின் பூட்டியும் காலம் சென்ற நடராசா, தியாகராசா, தங்கம்மா(கனடா), செல்வராசா, ஆனந்தராசா ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (21-09-2015), திங்கட்கிழமை பி.பகல் 2 மணிக்கு புதுக்குடியிருப்பு இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

(C-2262)

கைவேலி
புதுக்குடியிருப்பு

தகவல் :
குடும்பத்தினர்.

## தமிழகத்தில் இன்று ரயில் மறியல் போர்

(கொழும்பு)

இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் நாளை தமிழகம் முழுவதும் மாபெரும் ரயில் மறியல் போராட்டம் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும போர் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும், இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், தமிழீழத்துக்கான பொதுவாக்கெடுப்பை உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் நடத்த வேண்டும என்கிற தமிழக சட்டமன்றத் தீர்மானங்களை இந்திய அரசு நிறைவேற்றக் கோரியும், ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்திய அரசு தாக்கல் செய்ய வலியுறுத்தியும், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

காலை 10.00 மணியளவில் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. அத்துடன் ரயில் நிலையங்கள் இல்லாத பகுதிகளில் உள்ள மத்திய அரசின் வங்கிகள், தபால் நிலையங்கள் உள்ளிட்ட அலுவலகங்களை முற்றுகையிட்டு போராட்டம் நடைபெற உள்ளது என தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் பண்ருட்டி தி.வேல்முருகன் தெரிவித்துள்ளார். (எ-12)

## சிறுமிக்கு வந்த நேர்முகக் கடிதம்

(கொழும்பு)

கம்பஹா, கொட்டதெனிய 5வயது சிறுமி கொலை தொடர்பில் கைதான ஒருவரிடம் இருந்து மீட்கப்பட்ட மடிக்கணணி இயந்திரம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸார், இந்த மடிக்கணணியில் இருந்து ஆபாசக் காட்சிகள் கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்து அதனை கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு ஆய்வுக்காக அனுப்பியுள்ளனர்.

இந்தநிலையில் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட 17வயது மாணவரும் மற்றவரும் தொடர்ந்தும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்

இதற்கிடையில் கொலை செய்யப்பட்ட சிறுமியின் பெயருக்கு நேற்று கடிதம் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

5 வயதான அவரை முதலாம் ஆண்டுக்காக பாடசாலையில் சேர்ப்பதற்காக மினுவாங்கொட ரோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில் பெற்றோருக்கு நேற்று சேயா சதெவ்மினி என்ற அந்த சிறுமியை நேர்முக தேர்வுக்கு அழைத்து வருமாறு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. (எ-12)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
14 - 11 - 1981

ஆண்டவன் அடியில்
21 - 09 - 2008

### சண்முகலிங்கம் நமேஸ்

4ம் வட்டாரம்
முள்ளியவளை

கலைகளில் சிகரம் நீ
கடமையில் கண்ணியம் நீ
கனிந்திடும் உள்ளம் நீ
கலையாத நினைவு நீ
கலங்கி நிற்கும் எங்களுக்கு காவல் தெய்வம் நீ
ஏழாண்டு கடந்தாலும் என்றும் எம் மனதில் நீ

(C-2263)

உமை எண்ணி ஏங்கி நிற்கும் பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர்
முள்ளியவளை.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் 31-ம் நாள் நினைவஞ்சலியும்

### செல்வி பசுபதி சாந்தீஸ்வரி

**(கொக்குவில் இந்துக் கல்லூரி எழுதுவினைஞர்)**



கடந்த 22.08.2015 அன்று இறைபதமடைந்த **செல்வி பசுபதி சாந்தீஸ்வரி** அவர்களது இறுதிச்சடங்கு நிகழ்வில் கலந்து கொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 21.09.2015 திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(1847)

பாலாவோடை
இணுவில்.

தகவல்
ப.ஜெயபதி
(சகோதரர்)

## சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பு; சிறுவர் பாதுகாப்புச் சபை கவலை

(கொழும்பு)

இலங்கையில் சிறார் மீதான துஷ்பிரயோகம் அதிகரித்துவருவது குறித்து நாட்டின் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கவலையும் கண்டனமும் வெளியிட்டுள்ளது.

இந்த வருடம் செப்டெம்பர வரையிலான காலப் பகுதிக்குள் சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பாக 6 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான புகார்கள் கிடைத்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் நடாஷா பாலேந்திரா தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இதுபோல 8 ஆயிரம் புகார்கள் வந்ததாகத் தெரிவித்த, நடாஷா பாலேந்திரா புகார்களை மாத்திரம் வைத்துக்கொண்டு இந்த ஆண்டு குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளது என்ற முடிவிற்குவர முடியாது எனவும் கூறினார்.

இம்மாதிரியான சம்பவங்களில் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கு சராசரியாக 8 வருடங்கள் வரை காத்திருக்க வேண்டியுள்ளதால் பெரிய அளவில் வழக்குகள் நீதிமன்றத்தில் தேங்கிக் கிடப்பதாகவும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, இவ்வாறான வழக்குகள் மீது விரைவாக விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கும் கட்டமைப்பு ஒன்றை பரிந்துரை செய்துள்ளதாகவும் நடாஷா பாலேந்திரா தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக சிறுவர்களை அவர்களது சமுதாயமே பாதுகாக்கும் வகையில் சமுதாய மட்டத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையிலும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்தார். (இ-7)

## 5 வயதுச் சிறுமி படுகொலை இருவருக்கு விளக்கமறியல்

வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கழுத்துநெரித்து கொலை செய்யப்பட்ட 5 வயதான செயா சந்தவமியின் படு கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்களான கெலும் அத்தநாயக்க (வயது 33) மற்றும் 18 வயதான பாடசாலை மாணவன் ஆகிய இருவருமே எதிர்வரும் 28 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு மினுவாங்கொடை நீதவான் டி.ஏ.ருவன் பத்திரண உத்தரவிட்டுள்ளார். கம்பஹா, கொட்டதெனியாவ, அகரங்கஹ பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த வேளை காணாமற போன 5 வயது சிறுமி கடந்த 12 ஆம் திகதி காலை சடலமாக மீட்கப்பட்டார்.

கொட்டதெனியாவ பகுதியல் சடலமாக மீட்கப்பட்ட ஐந்து வயது சிறுமி, பாலியல் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டு பட்டியொன்றினால் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளமை பிரேத பரிசோதனை யில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அடுத்த வரவு - செலவுத் திட்டத்திற்கு முன்னர் பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடி ஒளிபரப்பு

(கொழும்பு)

அடுத்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் பாராளுமன்ற விவாத நடவடிக்கைகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

அதன் முதற்கட்டமாக பாராளுமன்ற அமர்வு இடம்பெறும் தினங்களில் இரண்டு மணித்தியாலங்கள் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து நேரடி ஒளிபரப்பு 4 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்படவுள்ளதாகவும் பிரதி சபாநாயகர் தெரிவித்தார். (இ-7)

## ஐ.நாவின் அறிக்கை ஒரு போலிஅறிக்கை

### சிங்கள ஊடகம் காட்டம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தின் அறிக்கை 15 மில்லியன் டொலர் செலவில் உருவாக்கப்பட்ட ஒரு போலி அறிக்கை என்று திவயின பத்திரிகை காட்டமாக விமர்சித்துள்ளது.

திவயின வார இதழின் பாதுகாப்பு நிலவரம் தொடர்பான கட்டுரையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தின் ஜெனிவா அறிக்கை தாறுமாறாக விமர்சனம் செய்யப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் முக்கிய அம்சங்களாவன, ஜெனிவா அறிக்கை அடிப்படையில் எதுவிதமான ஆதாரங்களும் அற்றது. விடுதலைப் புலி ஆதரவாளர்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்களின் தகவல்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதற்காக புலி ஆதரவாளர்களால் 15 மில்லியன் டொலர்கள் செலவழிக்கப்பட்டுள்ளது.இந்த அறிக்கைக்கு ஆதாரங்களைத் திரட்டிக் கொள்ள முடியாமற்போன நிலையில் கெலம் மக்ரேவின் ஆவணத்திரைப்படத்தைக் கூட ஒரு ஆதாரமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

அதேநேரம் பக்கச்சார்பற்ற விசாரணை ஒன்று நடைபெறாமலே இந்த அறிக்கையில் இலங்கை அரசாங்கம் மற்றும் படையினர் தொடர்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் அறிக்கையின் உள்ளடக்கம் குறித்து முன்னதாகவே தமிழீழ ஆதரவாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அவர்களின் பங்களிப்புடன் இந்த அறிக்கை போலியான ஆதாரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் திவயின பத்திரிகை மேலும் காட்டமாக விமர்சித்துள்ளது. (இ-7)

# போர்க்குற்றங்கள் புரிய ஆணையிட்டவர்களை நாம் கண்டறிவோம்




### மங்கள சமரவீர திட்டவட்டம்

**(கொழும்பு)**

**விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத்தினரை விட அவர்களுக்கு கட்டளையிட்டவர்களை கண்டறிவதற்கே முக்கியத்துவம் அளிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள மங்கள சமரவீர,

இலங்கையில் கலப்பு நீதிமன்ற கட்டமைப்பு போன்ற நீதிமன்றங்கள் இதற்கு முன்னரும் செயற்பட்டுள்ளன. 1970 களில் கதிர்காம அழகி பிரேமவதி மனம்பேரியின் மரணம் தொடர்பான விசேட நீதிமன்றம் அதற்கான எடுத்துக்காட்டாகும்.

இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களின் உரிமைகளை புறக்கணித்து, தொடர்ந்தும் அவர்களை ஒடுக்கி வைத்திருக்க முடியாது.

போர்க்குற்றங்கள் தொடர்பான கலப்பு நீதிமன்றத்துக்கு நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் இலங்கை அரசாங்கத்துக்கே உள்ளது.எனினும் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களை மட்டுமே அதற்கு நியமிக்க வேண்டும்.

இதன்போது சர்வதேச மட்டத்தில் அங்கீகாரத்தைப் பெற்றுள்ள இலங்கையர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

இந்த நீதிமன்றத்தின் நோக்கம் போர்க்குற்றங்களில் ஈடுபட்ட சிப்பாய்களைக் கண்டறிந்து தண்டனை அளிப்பதல்ல. அவர்களுக்கு கட்டளையிட்டவர்களைக் கண்டறிவதே கலப்பு நீதிமன்றத்தின் நோக்கம்.

அவ்வாறானவர்களைத் தண்டிப்பதன் ஊடாக மட்டுமே இதுபோன்ற கீழ்த்தரமான செயல்கள் இனிவரும் காலங்களில் நடைபெறாமல் தடுக்க முடியும் என்றும் அமைச்சர் மங்கள சமரவீர தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (இ-7)

## கவிஞர் வைரமுத்துவின் கள்ளிக்காட்டு இதிகாசம் 23 மொழிகளில்

கவிப்பேரரசு கவிஞர் வைரமுத்துவின் "கள்ளிக்காட்டு இதிகாசம்" நாவல் 23 மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்படவுள்ளது. ஆங்கிலம் உட்பட 23 மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் இந்நூல் உலகம் முழுவதும் விற்பனை செய்யப்படவுள்ளதுடன் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கவிஞர் வைரமுத்து எழுதிய புகழ்மிக்க நாவல் கள்ளிக்காட்டு இதிகாசம் வைகை அணை கட்டப்பட்ட போது அதன் நீர்தேங்கும் பரப்புக்காக காலி செய்யப்பட்ட 14 கிராமங்களின் பூர்வீகக் கதைதான் கள்ளிக்காட்டு இதிகாசம். மண்சார்ந்த மக்கள் மண்ணோடும் வாழ்வோடும் நடத்திய போராட்டங்களை சிறப்பாக எடுத்தியம்பும் படைப்பு இது. வட்டார வழக்கோடு எழுதப்பட்ட உலகத்தன்மை கொண்ட இந்நாவல் 2003 ஆம் ஆண்டுக்கான இந்திய சாகித்திய அகடமி விருது பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்கும் குழுவிற்கு கட்டுப்பாடுகளை விதித்த ஜனாதிபதி

எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட பிரதிநிதிகள் அமெரிக்காவிற்கு விஜயம் செய்யவுள்ளனர். அமெரிக்க விஜயத்தின் போது ஜனாதிபதி, தம்மோடு பயணிக்கும் பிரதிநிதிகளுக்கு சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக இந்த விஜயம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அமெரிக்க விஜயத்தின் போது ஜனாதிபதி, தம்மோடு பயணிக்கும் பிரதிநிதிகளுக்கு சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்.

கடந்த காலங்களில் பெரும் எண்ணிக்கையிலான பிரதிநிதிகள் குழுவொன்று அமெரிக்காவிற்கு விஜயம் செய்வது வழமையானதாகும்.

இம்முறை சொற்ப அளவிலான பிரதிநிதிகளே ஜனாதிபதியுடன் இணைந்து அமெரிக்கா பயணம் செய்யவுள்ளனர்.

மேலும், அமெரிக்க விஜயம் தொடர்பிலான ஏற்பாடுகளை தமது உத்தரவுகளுக்கு அமைய மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவருக்கு கடுமையான ஆலோசனை வழங்கியுள்ளார்.

தாம் உள்ளிட்ட பிரதிநிதிகள் தங்குவதற்கு பாரிய பொருட் செலவில் நட்சத்திர ஹோட்டல்களை ஒதுக்கீடு செய்ய வேண்டாம்.

ஹோட்டல் அறைகளில் மதுபானம் இருக்கக் கூடாது. பயணங்களுக்காக பல இலட்சம் ரூபா செலவிட்டு லிமோசின் கார்கள் தேவையில்லை.

விருந்தினர் தங்கும் அறைகளில் வயது வந்தவர்களுக்கு பார்வையிடக் கூடிய படங்களை பார்க்க முடியாது என ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் பயண ஏற்பாடுகளை செய்யுமாறு கோரியுள்ளார்.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்திற்கு பெரும் எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் பங்கேற்றதுடன் அதற்கான அனைத்து செலவுகளையும் அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## அரச நிர்வாக சேவையில் புதிதாக 218 பேரை இணைக்கத்தீர்மானம்

அரச நிர்வாக சேவையில்புதிதாக 218 பேரை இணைத்துக் கொள்வதற்கு அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த வருடத்தில் இடம்பெற்ற போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக புதிய உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே தெரிவித்தார்.

இதேவேளை, திறந்தபரீட்சையினூடாக 172 பேர் அரச நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அரச நிர்வாக சேவையில் இணைத்துக்கொள்ளப்படும் புதிய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் தொழிற்கல்வி கோவைக்கு அமைய செயற்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பயிற்சிகளின் பின்னர் வெற்றிடங்கள் காணப்படும் பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும் அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## சங்கக்காரவின் போராட்டம் வீண்

# சர்ரேயை வீழ்த்தி சம்பியனானது குளோசெஸ்ரர்ஷெயர்

இலங்கையின் முன்னாள் ஜாம்பவான் குமார் சங்கக்கார சிறப்பாக துடுப்பெடுத்தாடி 60 ஓட்டங்கள் எடுத்து வெற்றிக்காக போராடிய போதிலும்,

றோயல் லண்டன் கிண்ண ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டியில் சர்ரே அணியை குளோசெஸ்ரர்ஷெயர் அணி 6 ஓட்டங்களால் வீழ்த்தி திரில் வெற்றி பெற்றது.

லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த றோயல் லண்டன் கிண்ண ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டியில் சர்ரே - குளோசெஸ்டர்ஷெயர் அணிகள் மோதின.

இதில் நாணயச்சுழற்சியில் வென்ற சர்ரே அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய குளோசெஸ்டர்ஷெயர் அணி தொடக்கம் முதலே தடுமாற்றத்துடன் விளையாடி ஓட்டங்களை சேர்க்க ஆரம்பித்தது.

இருப்பினும் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் விழுந்ததால் அந்த அணி 47.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து




220 ஓட்டங்கள் எடுத்து சுருண்டது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக ஜோன்ஸ் (50) அரைசதம் எடுத்தார்.

சர்ரே அணி சார்பில் மிரட்டலாக பந்துவீசிய டெரன்பேச் 8.4 ஓவர்களில் 35 ஓட்டங்களுக்க 6 விக்கெட்டுகளை அள்ளினார்.

எளிய இலக்குடன் களமிறங்கிய சர்ரே அணிக்கு தொடக்கமே மோசமாக அமைந்தது. தொடக்க வீரர்கள் ரோய் (11), டேவிஸ் (13) சொற்ப ஓட்டங்களில் நடையை கட்டினர்.

இதன் பின்னர் ஜோடி சேர்ந்த சங்கக்கார (60), பேர்ன்ஸ் (56) சிறப்பாக விளையாடி அரைசதம் எடுத்தனர். இருப்பினும் பின்னர் வந்தவர்கள் ஜொலிக்கவில்லை.

கடைசி ஓவரில் 3 பந்துகளில் 6 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் 49.3 ஓவர்களில் 214 ஓட்டங்களுக்கு சர்ரே அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

குளோசெஸ்டர்ஷெயர் அணியின் பந்துவீச்சில் ரெய்லர் 3, பெயின், புல்லர், ஸ்மித் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

6 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்ற குளோசஸ்டர்ஷியர் அணி கிண்ணத்தை கைப்பற்றியது.

போட்டியின் ஆட்டநாயகனாக பந்துவீச்சில் 3 விக்கெட்டுக்களையும், துடுப்பாட்டத்தில் 35 ஓட்டங்களையும் எடுத்த குளோசெஸ்டர்ஷெயர் அணியின் ரெய்லர் தெரிவு செய்யப்பட்டார். (க)

# தென்னாபிரிக்க தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு

## குர்கீராட் சிங் ஒரு நாள் அணியிலும், அரவிந்த் ரி20 அணியிலும் இணைப்பு

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நடைபெறவுள்ள ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளில் விளையாடும் இந்திய வீரர்கள் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து மூன்று ரி20, ஐந்து ஒருநாள் மற்றும் 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட நீண்ட தொடரில் விளையாடுகிறது.

இவ்விரு அணிகள் மோதும் இந்த தொடருக்கு மகாத்மா காந்தி - நெல்சன் மண்டேலா தொடர் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்தத் தொடருக்கான தென்னாபிரிக்க அணி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ரி20 மற்றும் முதல் 3 ஒருநாள் போட்டிகளுக்கான 15 வீரர்கள் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.



குர்கீராட்

இதில் நீண்ட காலமாக அணியில் இடம்பெற்றிருந்த ஜடேஜா இரு அணிகளில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

அதே சமயம் வேகப்பந்து வீச்சாளர் அரவிந்த் ரி20 தொடருக்கான அணியிலும், சகலதுறை வீரர் குர்கீரட் சிங் ஒருநாள் தொடருக்கான அணியிலும் இடம் பெற்றுள்ளனர்.

**ரி20 போட்டிக்கான இந்திய அணி:-**

தோனி (தலைவர்), தவான்,



அரவிந்த்

ரோஹித், ஹோலி, ரெய்னா, ரஹானே, ராயுடு, பின்னி, அக்ஷர் படேல், அஸ்வின், ஹர்பஜன், மோகித் சர்மா, மிஸ்ரா, ஸ்ரீநாத் அரவிந்த், புவனேஷ்வர் குமார்.

**ஒருநாள் போட்டிக்கான இந்திய அணி:-**

தோனி (தலைவர்), தவான், ரோஹித், ஹோலி, ராயுடு, ரெய்னா, ரஹானே, பின்னி, அஸ்வின், அக்ஷர் படேல், குருகீரட், மிஸ்ரா, புவனேஷ்வர் குமார், மோகித், உமேஷ் யாதவ்.

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வட்டுவாகல் கிராம முன்னேற்றச் சங்கம், உதய சூரியன் விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து நடத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டி-2015, நாளை 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது.

ஆரம்ப போட்டிகளாக மரதன் ஓட்டம், துவிச்சக்கர வண்டி ஓட்டம், தெப்பம் வலித்தல், படகோட்டப் போட்டி என்பன இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி இறுதிப் போட்டிகளாக கரபந்தாட்டம், உதைபந்தாட்டம் என்பனவும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-12)

# றெய்னா சதம்; பங்களாதேஷ் ஏ அணிக்கு எதிரான தொடரை வென்றது இந்திய ஏ அணி

றெய்னாவின் சதமும் (104), சாம்சனின் அரைச்சதமும் (90) கைகொடுக்க பங்களாதேஷ் ஏ அணிக்கு எதிரான உத்தியோகபற்றற்ற ஒரு நாள் தொடரின் 3ஆவதும் இறுதியுமான போட்டியில் டக்வேர்த் லூயிஸ் முறையில் 75 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இந்திய ஏ அணி தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றி கிண்ணத்தை சுவீகரித்தது.

இந்திய - பங்களாதேஷ் ஏ அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இந்தியாவில் நடைபெற்றது.

தொடரின் முதல் போட்டியில் இந்திய ஏ அணியும், 2ஆவது போட்டியில் பங்களாதேஷ் ஏ அணியும் வெற்றி பெற்றிருந்த நிலையில்,

தொடரை தீர்மானிக்கும் முக்கியத்துவம் வாய்ந்த 3ஆவது போட்டி நேற்று பெங்களூரில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய ஏ அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

தொடக்க வீரர்களாக அகர்வால், அணித் தலைவர் உன்முக்த சந்த் ஆகியோர் களம் இறங்கினார். அகர்வால் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து சாம்சன் களம் இறங்கி உன்முக்த் சந்துடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். சந்த் 41 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

3ஆவது விக்கெட்டுக்கு சாம்சனுடன் ரெய்னா ஜோடி சேர்ந்தார். முதல் இரண்டு போட்டிகளிலும் சோபிக்காத ரெய்னா இந்த போட்டியில் சிறப்பாக விளையாடினார். இந்த ஜோடி அரை சதத்தை கடந்து விளையாடியது.

சிறப்பாக விளையாடிய சாம்சன் 99 பந்துகளில் 90 ஓட்டங்களுடனும், ரெய்னா 94 பந்துகளில் 104 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ரிஷி தவான் அதிரடியாக விளையாடி 15 பந்துகளில் 26 ஓட்டங்கள் எடுக்க இந்திய ஏ அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 297 ஓட்டங்கள் எடுத்தது.

பங்களாதேஷ் ஏ அணி சார்பில் ஷபியுல் இஸ்லாம் 2, அல்-அமின்




வெற்றிக் கிண்ணத்துடன் இந்திய ஏ அணித்தலைவர் சந்த்

ஹொசைன், ரூபெல் ஹொசைன், அராபத் ஷனி, நசீர் ஹொசைன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

298 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் ஏ அணிக்கு சௌமியா சர்கார், ரோனி தலுக்தர் ஆகியோர் ஆரம்பம் வழங்கினர்.

சர்காரை ஒரு ஓட்டத்துடன் போல்டாக்கி குல்கர்னி வெளியேற்றினார். தலுக்தர் (9), அனாமுல் ஹக் ஆகியோரை அரவிந்த் அடுத்தடுத்து வெளியேற்ற பங்களாதேஷ் ஏ அணி 24 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுக்களை இழந்து தவித்தது.

அடுத்து வந்த அணித் தலைவர் மொமினுல் ஹக் 37, லித்தோன் தாஸ் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். கடந்த போட்டியில் சதம் அடித்த நசீர் ஹொசைன் 22 ஓட்டங்களில் வெளியேறினார். இதற்கிடையே மழை குறுக்கிட்டதால் போட்டி 46 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

பின்னர் மீண்டும் மழை குறுக்கிடவே போட்டி 32 ஓவர்களாக மாற்றப்பட்டது. பங்களாதேஷ் ஏ அணி 32 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 141 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதனால் இந்திய ஏ அணி டக்வோர்த் லூயிஸ் விதிப்படி 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா ஏ அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 2:1 என கைப்பற்றியது.

சமீபத்தில் இந்திய, அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க ஏ அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒரு நாள் தொடரை இந்திய ஏ அணி கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

உலக கிண்ண றக்பி 2015, வேல்ஸ் - உருகுவே அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின்போது...



# காணி அமைச்சின் சட்ட அலுவலகர் பதவிக்கு விண்ணப்பங்கள்கோரல்

(கொழும்பு)

காணி அமைச்சின் சட்ட அலுவலர் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் மூலம் சட்ட மாணிப் பட்டம் பெற்றிருத்தல் அல்லது உயர்நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம்செய்து கொண்டதன் பின்னர் 3 வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியாக தொழில்சார் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

செயலாளர், காணி அமைச்சு, மிஹிகத்த மெதுர, காணிச் செயலகம் இல. 1200/6, இரஜ மல்வத்தை வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு எதிர்வரும் ஒக்டோபர் 19 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக பதிவுத் தபாலில் கிடைக்கக் கூடியதாக அனுப் புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை கடந்த வெள்ளிக்கிழமை வெளி யான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

# திருடர்களின் கூட்டணியே தேசிய அரசாங்கம்- பிமல்

தற்போதைய அரசாங்கத்தை தேசிய அரசாங்கம் என்பதற்குப் பதிலாக திருடர்களின் கூட்டணி அரசாங்கம் என்றே அழைக்க வேண் டியுள்ளதாக ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க விமர்சித்துள்ளார்.

இன்றைய அரசியல் நிலவரம் தொடர்பாக திவயின வார இதழ் ஜே.வி.பியின் நிலைப்பாடு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவிடம் கருத்து கோரியிருந்தது.

அதற்குப் பதிலளித்துள்ள பிமல் ரத்நாயக்க தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கும்போது, இன்றைய அரசாங்கம் பெயரளவுக்குத்தான் தேசிய அரசாங்கம் மற்றபடி இது திருடர்களின கூட்டணி அரசாங்கம். திருடர்களைப் பாதுகாப்பதற்காக கூட்டணி அமைத்துக் கொண்டு செயற்படுகின்றவர்களே அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களாக இருக்கின்றனர்.

மத்திய வங்கி முறைகேடு, அவன்கார்ட் மிதக்கும் ஆயுதக்க ளஞ்சிய முறைகேடு என்பன போன்ற பாரிய முறைகேட்டுச் சம்பவங்கள் இருதரப்பின் இணக்கப்பாட்டுடன் மூடிமறைக்கப்பட்டுள்ளன.

எனினும் நாங்கள் இது போன்ற முறைகேடுகளை மூடிமறைக்க இடமளிக்கமாட்டோம். எதிர்வரும் நாட்களில் பாரிய முறைகேடுகள் தொடர்பில் குரல் எழுப்பவும், பொது மக்களை தெளிவுபடுத்தவும் நடவடிக்கை மேற்கொண டுள்ளோம்.

நல்லாட்சி குறித்த எதிர்பார்ப்புடன் வாக்களித்த மக்களுக்கு ஆளும் கூட்டணி துரோகம் செய்தாலும் நாங்கள் அந்த நிலைப்பாட்டில் இருந்து மாறாமல், பொது மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய கடுமையான போராட்டங்களை முன்னெடுப்போம் என்றும் பிமல் ரத்நாயக்க தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (இ-7)






# ராசி பலன்

21.09.2015
(புரட்டாதி 04, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
அட்டமி முன்னிரவு 9.37 மணிவரை
மூலம் பின்னிரவு 3.56 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
சர்வதேச சமாதான தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரோகினி<br>கீழ் நோக்கு நாள் | | சுக் |
| | | | குரு<br>செவ்<br>புத |
| சந் | சனி | | ராகு<br>சூரி |

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்கள் மரியாதை உயரும், வள்ளல்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** வழிபாட்டில் ஆனந்தம் காண வேண்டிய நாள், பிள்ளைகள் வழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, மனச்சோர்வுண்டு.

**மிதுனம்** நண்பர்களால் ஒரு சில நன்மைகள் ஏற்படலாம், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்குவீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், தனவரவைப் பெருக்க தகுந்த முயற்சிகள் செய்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், சமயோசித புத்தியால் அனைவரையும் கவர்வீர்கள்.

**கடகம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், பழைய கடன்களை அடைக்க புதியவழிகளைக் கையாள்வீர்கள், பகைவிலகி பாசம்கூடும்நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும்.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சுப விரயங்கள் கூடும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய நபர்களின் சந்திப்பு இடம் பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**தனுசு** சொன்ன சொல்லைக் காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணத்தால் உங்கள் பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், திடீர்ப் பயணங்கள் தித்திக்க வைக்கும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம்.

**துலாம்** இளைய சகோதரர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பழைய பாக்கிகள் திடீரென வசூலாகலாம், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கன்னி** இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு, வாகனப் பழுதுச் செலவுகள் குறையும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

# தற்கொலை; அறியாமையால் ஏற்படும் விளைவு

## வைத்திய நிபுணர் சிவயோகன் சுட்டிக்காட்டு

தமது பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்கு வேறு மார்க்கம் தெரியாதவர்களே தற்கொலைக்கு செல்கின்றனர். இது அவர்களின் கோழைத்தனத்தையும் அறியாமையினையும் எடுத்துக்காட்டுகின்றது என உளநல வைத்திய நிபுணர் எஸ். சிவயோகன் தெரிவித்தார்.

வடக்கில் இளம் பராயத்தினரிடையே அதிகரித்து வருகின்ற தற்கொலை குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தற்கொலை செய்பவர்கள் தமக்குத்தாமே தீங்கினை ஏற்படுத்திக் கொள்பவர்கள் என வகைப்படுத்த முடியும்.

இவர்கள் தமது அன்றாட வாழ்வில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை வெளிக்கொணர அல்லது தீர்வு காண முடியாதவர்களாகவே பெரும்பாலும் உள்ளனர். இவ்வாறு தமது பிரச்சினைகளை வெளிக்கொணர அல்லது தீர்வு காண தெரியாதவர்கள் அதனை வெளிக்கொணர்வதற்கு தற்கொலையினை ஒரு வழியாக கையிலெடுக் கின்றனர்.

குறிப்பாக காதலில் ஈடுபடுவோர் தன்து காதலை நிரூபிப்பதற்கு தற்கொலை செய்து காட்டுதல் என்ற பரிதாப நிலையும் காணப்படுகின்றது. இவ்வாறான பிரச்சினைகளுக்காக தற்கொலை செய்பவர்களுக்கு அவர்களுக்குஅவர்களுடையபிரச்சினைகளுக்கு இலகுவான தீர்வுகளும் உள்ளன.

தற்பொழுதுள்ள இளைஞர் சமுதாயம் தற்கொலைக்குள் தள்ளப்படுவது வேதனைக்குரியதொன்றாகும். இவர்கள் துணிச்சலான முடிவுகளை எடுக்காமல் மிகவும் கோழைத்தனமான முடிவுகளை கையிலெடுக்கின்றனர்.

இவ்வாறு இளைஞர்கள், யுவதிகள் தற்கொலையை ஒரு முடிவாக அல்லது தீர்வாக நாடுவதற்கு பாடசாலைகளும் பெற்றோர்களும் கல்வி நிறுவனங்களும் சரியான வழியினை காட்டாமையே காரணங்களாகின்றன.

தமது பிள்ளைகளை பாடசாலைப் பருவம் முதல் பொத்திப் பொத்தி வளர்ப்பதனால் அவர்களுக்கு வெளியுலகில் நடைபெறுகின்ற சம்பவங்கள், பிரச்சினைகள் தெரியாமல் போகின்றன.

ஒரு கட்டத்தில் பெற்றோர்களின் கண்காணிப்பிலிருந்து வெளிவருகின்ற போது அவர்கள் எதிர்நோக்கும் சிறு பிரச்சினைகளுக்குக்கூட தீர்வு தெரியாமல்போய்விடுகின்றது.

இதனால் இலகுவாக தற்கொலை எனும் முடிவினை இவர்கள் கையிலெடுக்கின்றனர். பிரச்சினைகளினை வெளிப்படையாக தனது நண்பர்களுடன் தன்னம்பிக்கைக்குரியவர்களிடம் பேசுவதன்மூலம் ஒரு தீர்வினைப் பெறமுடியும் அல்லது தொலைபேசி உரையாடல்கள் மூலமும் தனது பிரச்சினையின் கனத்தை குறைத்து அதிலிருந்து விடுபட முடியும். இதனை தற்கொலை எண்ணம் கொண்டோர் கவனத்திலெடுத்தால் இருண்ட வாழ்விலிருந்து விடுபட முடியும்.

பெற்றோர்களும் பாடசாலைகளும் தமது பிள்ளைகளை அவர்களது நாளாந்த பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து தெளிவுபடுத்த வேண்டும்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பயிற்றுவிக்கப்பட்டவர்களினால் தற்கொலை எண்ணம் கொண்டவர்களை அதிலிருந்து விடுபடுவதற்கான தொலைபேசி உரையாடலொன்று மேற்கொள்ளப்படுகின்றது.

021 222 6666 என்ற இந்தத் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு தமது பிரச்சினைகளை பேசி தீர்வுகளை பெறமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)




# இந்திய மீனவர்களை தடுத்து நிறுத்தக்கோரி அறவழிப்பேரணிக்கு ஆதரவு தாருங்கள்

(யாழ்ப்பாணம்)

**இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களையும் அடாவடித்தனங்களையும் தடுத்து நிறுத்தக் கோரி யாழில் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள மாபெரும் அறவழிப் பேரணிக்கு அனைத்து தரப்பினரையும் ஆதரவு வழங்குமாறு வடக்கு மாகாணத்திலுள்ள 3 கடற்றொழில் அமைப்புக்கள் கூட்டாக இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.**

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனம் மற்றும் யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளம் ஆகியன இணைந்து எதிர்வரும் 23 ஆம் திகதி புதன் கிழமை காலை 7 மணிக்கு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறை திணைக்களத்திலிருந்து யாழ். மாவட்டச் செய லகம் வரை மாபெரும் அறவழிப் பேரலை ஒன்று நடத்த விருப்பதாக அறிவித்துள்ளார்.

அனைத்து மக்களும், அரசியல் பிரமுகர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தொண்டு நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் , போக்கு வரத்து சங்கங்கள், மீன் வியாபாரிகள், கடை முதலாளிகள், பிரதேச சபை, பிரதேச மற்றும் மாவட்ட செயலக ஊழியர்கள் உத்தியோகத்தர்கள், யாழ்.மாவட்ட கூட்டுறவு சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மதத்தலைவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் யாழ்.மாவட்டத்திலுள்ள கடைகள், கூட்டுறவுச் சங்கங்கள், நிறுவனங்கள், மீனவர் சங்க சமாசங்கள், மீன் கிராம அமைப்புக்கள், போக்குவரத்துக் கழகங்கள், ஆட்டோ உரிமையாளர்கள்ஆகிய அனைவரும் அன்றையதினம் கறுப்புக் கொடி கட்டி உங்களது ஆதரவை வழங்கும் படி அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் கடற்றொழிலாளர்கள் எவரும் 17.09.2015 கூட்டத்தில் எடுத்த தீர்மானத்திற்கு அமைய 22. 09. 2015 இரவு தொடக்கம் மறு நாள் 23. 09.2015 வழமையான காலப்பகுதிகளில் கடலில் இறங்கக் கூடாது. என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# வடக்குமாகாண வேலையற்ற பட்டதாரிகளை கைதடியில் நாளை ஒன்றுகூடுமாறு அழைப்பு

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் (உள்வாரி, வெளிவாரி தேசிய உயர் தொழில்நுட்பக் கல்லூரி) அனைவரையும் நாளை செவ்வாய்க்கிழமை 22ஆம் திகதி காலை 8 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபைக்கு முன்னால் ஒன்றுகூடுமாறு வடக்குமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த 07.09.2015 அன்று யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் எம்மால் மேற்கொள்ளப்பட்ட கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது பட்டதாரிகளை வேலைவாய்ப்புக்களுக்குள் உள்ளீர்ப்புச் செய்யுமாறு கோரிய மகஜர் வடக்குமாகாண ஆளுநர், வடக்குமாகாணமுதலமைச்சர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன. இரண்டு வார அவகாசம் வழங்கப்பட்டும் சாதகமான பதில்கள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என் பது குறிப்பிடத்தக்கது.

குறித்த ஒன்றுகூடலில் வடமாகாண அமைச்சுக்களின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய ஆளணி வெற்றிடங்களுக்கான அனுமதியைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாகவும் வேலையற்ற பட்டதாரிகளாகிய நாம் எதிர் கொள்கின்ற பிரச்சினைகளை உரியவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாகவும் கோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளன. வடமாகாணப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய வருகின்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான குழுவிடம் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் அனைவரினதும் கையெழுத்துக்களுடன் கூடிய மகஜர் கையளிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ



பாரிஸ் ஸ்ரார் சிறியால் தயாரித்து இசையமைக்கப்பட்ட திருக்குறள் முப்பாலும் (1330) மூலமும் உரையும் இறுவெட்டு வெளியீட்டு விழாவும் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டு பேரவையின அனுசரணையுடன் கடந்த வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி மண்டபத்தில் நடைபெற்றது.

# ஆதனவரியைச் செலுத்தாத 24பேருக்கு எதிராக வழக்கு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் உடுப்பிட்டி உப அலுவலகத்திற்குட்பட்ட 24 ஆதன வரியிறுப்பாளர்கள் தமது ஆதன வரியை உரிய காலத்தில் செலுத்தத் தவறியதனால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

வரியிறுப்பாளர்கள் அனைவரும் நீதிமன்றத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை வரவழைக்கப்பட்டு ஆதன வரியைச் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வரியிறுப்பாளர்கள் தாம் ஆதன வரியை செலுத்துவதாக ஒப்புக் கொண்டதையடுத்து வரியிறுப்பாளர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு வாபஸ் பெறப்பட்டது. (இ-3-60)

# சர்வதேச அஹிம்சை நாள் ஒக்டோபர் 2ம் திகதி யாழில்

யாழ். மாவட்டத்தில் முதன்முறையாக சர்வதேச அஹிம்சைநாள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளதாக யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் கடந்த 2007 ஆம் ஆண்டு மகாத்மா காந்தியின் பிறந்த தினமான ஒக்டோபர் 2ஆம் திகதி சர்வதேச அஹிம்சை நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது.

அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் அனைத்து நாடுகளிலும் உள்ள இந்தியத் தூதரகங்கள் இந்த நாளைக் கொண்டாடி வருகின்றன.

அந்த வகையில் எதிர்வரும் ஒக்டோபர் 2ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் இத்தினத்தைக் கொண்டாடுவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தர் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் பிரபல்யமானவர்களின் கருத்துரைகளும் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# தமிழரை கீழ்நிலை சமூகமாக மாற்றவே திட்டமிட்ட சதிவேலைகள் அரங்கேற்றம்

## வடக்கு முதலமைச்சர் கவலை



(யாழ்ப்பாணம்)

**தமிழரை கீழ்நிலைச் சமூகமாக மாற்றுவதற்கு திட்டமிட்ட அரசியல் சதிவேலைகள் எம்முன்னே கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அதிலிருந்து தப்புவதற்கு எம்பிள்ளைகளை நாம் மீட்டெடுக்க வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கரவெட்டி கோவிற்கடவை சன சமூக நிலையத்திறப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை நடை பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகளின் ஒழுக்கப்பாடானது இன்று எம்முன்னே பரந்து விரிந்து கிடக்கின்ற ஒரு பாரிய விடயமாக உள்ளது. எமது பிள்ளைகளை அல்லது எம்மைச் சார்ந்த பிள்ளைகளை எவ்வாறு ஒழுக்கசீலர்களாக மாற்றுவது என்பது எம்முடைய கவனத்தை ஈர்க்கவேண்டும். அவர்களின் பழக்க வழக்கங்களைப் பாதிக்கக்கூடிய அடிப்படைக்காரணிகள் யாவை? போதைப்பொருட்கள் எவ்வாறு மாணவர்களின்கைகளுக்குகிடைக்கின்றன? அதற்கான பணம் எவ்வாறு கிடைக்கப்பெறுகிறது? போன்ற பல விடயங்களில் நாம் கண்ணுங்கருத்துமாக இருந்து விடைகாண வேண்டும்.

எமது சமூகத்தின் அழியாச் செல்வமாக விளங்கக்கூடிய கல்வி என்ற பெரிய சொத்தை எவ்வாறாவது அதன் மூலவேருடன் தகர்த்தெறிந்து எம்மைக் கையாலாகதவர்களாக மாற்றி அடிமைச்சீவியம் நடத்தக்கூடிய கீழ் நிலைச் சமூகமாக மாற்றுவதற்கு திட்டமிட்ட அரசியல் சதிவேலைகள் எம்முன்னே கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதோ என்று எண்ண இடமுண்டு. இதிலிருந்து நாம் தப்புவதற்கு, எமது பிள்ளைகளை மீட்டெடுப்பதற்கு நாம் ஆவன செய்யவேண்டும்.

இன்றுபத்திரிகைகளைபுரட்டினால் கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம் எனப் பக்கம் பக்கமாகச் செய்திகள் காணப்படுகின்றன. மிகவும் பண்பட்ட சமுதாயமாக சிறந்த பழக்கவழக்கங்களுடன் கல்வியிலும் சிறந்து விளங்கிய இந்தச் சமூகம் சீர்கெட்டுப்போவதைவேண்டும்என்றே திட்டமிட்டு அழிக்கப்படுவதை நாம் பார்த்துக்கொண்டு வாழாதிருக்க முடியாது. இவ்வாறான செயல்களை கண்காணிக்கக்கூடிய அல்லது தடுக்கக்கூடிய சக்தி இவ்வாறான சன சமூக நிலையங்களுக்கு உண்டு என்பதை நீங்கள் மறந்துவிடலாகாது.

இதன்காரணமாகவே பொலிஸாருடன் பொதுமக்கள் சேர்ந்து எடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராய்ந்து அதற்கான குழு அமைக்க வேண்டியவற்றைச் செய்து வருகின்றோம். விரைவில் மேல் மட்ட, நடுத்தர, கீழ்மட்ட குழுக்கள் செயற்பட இருக்கின்றன. மேல்மட்டக் குழு பிரதிப்பொலிஸ்மா அதிபர் அமைச்சர்கள் மட்டத்தில் ஆராயும். மத்திய அல்லது நடுத்தர மட்டக்குழு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்- நியமிக்கப்பட்ட மாகாணசபை உறுப்பினர் மட்டத்தில் ஆராயும். மக்களிடையே கீழ் மட்டத்தில் செயற்பட இருக்கும் குழுக்களில் சனசமூக நிலைய அலுவலர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

எனவே அன்பார்ந்த பிள்ளைகளே! உங்கள் நண்பர்கள், உறவினர்கள், தெரிந்தவர்கள் இவ்வாறான போதைப்பழக்கவழக்கங்களுக்கும் களவு, கொள்ளை, சூது போன்றவற்றிற்கும் ஆளாவதாகக் தெரிய வந்தால் அவர்களுக்கு அன்பாக எடுத்துச் சொல்லப் பாருங்கள். அவர்களை அவ்வாறான பழக்கங்களிலிருந்து விடுபட்டுச் செல்வதற்கு பாடுபடுங்கள். இல்லையென்றால் எங்கள் குழுக்களிடம் உங்கள் கல்லூரிகள் மூலமாக எடுத்துச் சொல்லுங்கள். முயற்சித்தால் ஆகாதது ஒன்றுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60-9)

## சிவபூமி பாடசாலை மாணவர்களுக்கு இசைக்கருவிகள் வழங்கி வைக்கப்பட்டன



யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தால் சிவபூமி பாடசாலை மாணவர்களுக்கு இசைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளதாக சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

சிவபூமி பாடசாலை மாணவர்கள் இசைமீது அதிக ஆர்வம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுடைய ஆர்வத்தை மென்மேலும் விருத்தி செய்யும் நோக்குடன் மிருதங்கம், தபேலா, நாதஸ்வரம், தவில், வீணை ஆகிய மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## கடலில் காணாமற் போயிருந்த 19 வயது இளைஞனின் சடலம் கடற்கரையில் மீட்பு

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை கடலில் நீராடிக் கொண்டிருந்த பொழுது காணாமற்போன 19 வயது இளைஞன் ஒருவர் நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாலுசந்தி அல்வாய் கிழக்கைச் சேர்ந்த புஸ்பராஜா துவாரகன் (வயது 19) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் மாலை 4மணியளவில் கடலில் குளிப்பதற்காக மேலும் மூன்று இளைஞர்களுடன் பிரஸ்தாப இளைஞர் சென்றுள்ளார். கடலில் குளித்து விட்டு இளைஞர்கள் கரையேறிய பொழுது ஒருவர் காணாமற்போயுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதுடன் பொலிஸார் இது குறித்து விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். இந்நிலையில் கடலில் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டு வந்த கடற்படையினர் நேற்றுக்காலை 7 மணியளவில் கடலில் மிதந்து வந்து கொண்டிருந்த சடலத்தை மீட்டனர். மீட்கப்பட்ட சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் மூன்று இளைஞர்களையும் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். (இ-3-12-19-60)




## சிறுவர் தினவிழா

சங்கானை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் 8 ஆவது சர்வதேச சிறுவர் தினவிழா எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (இ-3)

## நூறாவது அகவை நிறைவுவிழா நாளை



வைத்தீஸ்வரக்குருக்களின் நூறாவது அகவை நிறைவு விழாவும் திருமுறைப் பெருமை நூல் வெளியீட்டு விழாவும் நாளை செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு ஓய்வு நிலை வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் நடைபெறும் இந்நூல் வெளியீட்டு விழாவைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜை இடம்பெறும். (இ-3)

## வாழும் கலைப்பயிற்சி

பூஜ்ஜ ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் வாழும் கலைப்பயிற்சி இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு அறிமுகவுரையுடன் ஆரம்பமாகவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை காலை 6 மணி முதல் 8 மணிவரையும் மாலை 5.30 மணிமுதல் இரவு 7.30 மணிவரையும் மேற்படி யோகா பயிற் சிகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் சட்டநாதர் கோயில் அருகில் அமைந்துள்ள திவ்விய ஜீவன சங்கத்தில் இப்பயிற்சிகள் இடம்பெறவுள்ளது. (இ-3)

## யாழில் கரையோர கிராமங்களை அபிவிருத்தி செய்ய புதிய திட்டம்

### அரச அதிபர் தகவல்

யாழ்.மாவட்டத்தில் உள்ள கரையோர கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கரையோர அபிவிருத்தித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கரையோர கிராமங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனும் அப்பகுதி கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கும் நோக்குடனும் இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

உலகவங்கியின் நிதி யுதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இத் திட்டத்தில் மீன்பிடித் துறை முகங் கள் வெளிச்ச வீடு, கடற்கரையை ஆழமாக்குதல், புனரமைத்தல் மற்றும் மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு தேவையான அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தல் போன்ற செயற்றிட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள இத்திட்டத்தின் மூலம் கரையோர கிராம மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

மல்லாவியில் இடம்பெற்ற விபத்தில்

# வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்

மல்லாவியில் கடந்த 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயம் அடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இருவரில் அன்றையதினம் இரவு குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்தும் மற்றைய இளைஞர் சிகிச்சை பெற்று வந்தவேளை பிரஸ்தாப நாரும் நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது. மல்லாவி நகரப் பகுதியில் இருந்து துணுக்காய் செல்லும் வீதியிலுள்ள மல்லாவி பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் மின்சார வேலையில் ஈடுபடும் தனியார் ஒப்பந்த நிறுவனம் ஒன்றின் கன்டர்ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் கடந்த 15 ஆம் திகதி மோதுண்டது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு இளைஞர்களும் படுகாயம் அடைந்த நிலையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அன்றிரவு சிகிச்சை பலனின்றி தர்மலிங்கம் பரமேஸ்வரன் (வயது34) என்ற குடும்பஸ்தர் உயிரிழந்தார். தொடர் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்த மல்லாவி மத்திய கல்லூரிக்கு அருகாமையில் வசிக்கிற சிவபாதம் சுந்தரசிவரூபன் (வயது26) என்ற இளைஞனே நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவராவார். (2-15)

## சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட வாகனங்கள் இன்று நீதிமன்றிற்கு கொண்டு செல்லப்படும்

கிளிநொச்சி, கண்டாவளை. தட்டுவன் கொட்டி ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 12 வாகனங்கள் கடந்த 16 ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் வரையான காலப்பகுதியில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி கண்டாவளை, தட்டுவன் கொட்டி. ஆனையிறவு உள்ளிட்ட பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட எட்டு டிப்பர் வாகனங்கள். நான்கு உழவு இயந்திரங்கள் என்பன கடந்த 16 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டு குறித்த வாகனங்களுக்கும் அதன் சாரதிகளுக்கும் எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வாகனங்களை இன்று திங்கட்கிழமை நீதிமன்றுக்கு கொண்டுசெல்லவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2)




## விசேட பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் சங்கத்தலைவர் இ.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் அதிபர்களின் இடமாற்றங்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சி போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலைகளின் அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் ச.பூலோகராஜா அறிவித்துள்ளார். (2-277)

# தமிழ்மொழி சுற்றாடல் முன்னோடி ஆணையாளர்களுக்கு வதிவிட செயலமர்வு

(மல்லாவி)

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏற்பாட்டில் மத்திய கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் வடக்கு, கிழக்கு, ஊவா, மற்றும் வயம்பா ஆகிய மாகாணங்களில் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கல்வி வலயங்கள், கோட்ட மட்டங்கள் ஆகியவற்றில் உள்ள தமிழ் மொழி சுற்றாடல் முன்னோடி ஆணையாளர்களுக்கான வதிவிடச் செயலமர்வு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 1,2,3ஆம் திகதிகளில் கண்டி, பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்து நிறுவனத்தில் நடைபெறுமென மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் எம்.ஜே.ஜே. பெர்னாந்து அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது.

மத்திய கல்வி அமைச்சின் பூரண ஒத்துழைப்புடன் மத்திய சுற்றாடல் அதிகார சபை மூலம் நடைமுறைப்படுத்தப்படும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை, அடுத்த ஐந்து வருடங்களுக்கு (2015 - 2019) நாடு தழுவிய ரீதியில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இதற்கமைய இந்நிகழ்ச்சி திட்டத்தை பாடசாலை மட்டத்தில் மேலும் சக்திமிக்கதாக முனனேற்றுவதற்காக சுற்றாடல் முன்னோடி ஆணையாளர்களுக்கான பயிற்சி நெறியும் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டுக்கான சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கலந்துரையாடலும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இதற்கு இணங்கவே வடக்கு, கிழக்கு ஊவா மற்றும் வயம்பா மாகாணங்களில் உள்ள தமிழ்மூல ஆணையாளர்களுக்கு வதிவிட செயலமர்வு நடைபெறவுள்ளது.

வதிவிட செயலமர்விற்கு வருகை தருபவர்களுக்கு மேலதிக தகவல்கள் தேவைப்படின் நா.திருலோகசந்திரன், சுற்றாடல் உத்தியோகத்தர், 011 287 2278, 011 287 3447, 077 345 0956 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# விவசாயிகள் அடகு வைத்த நகைகளை மீளப்பெறுவதற்கு ஒரு மாதம் அவகாசம்

அடைக்கலநாதன் எம்.பியின் தலையீட்டை அடுத்து

விவசாயத்தை மேற்கொள்வதற்காக வங்கிகளில் நகைகளை அடகு வைத்து பணத்தை பெற்றுக்கொண்ட வன்னி மாவட்ட விவசாயிகளின் நகைகள் அரச வங்கி ஒன்றினால் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்பட தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த பகிரங்க ஏலம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வன்னி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் விவசாயத்தை மேற்கொள்ள பணவசதி அற்ற நிலையில் தமது மனைவி, பிள்ளைகளின் நகைகளை வங்கியில் அடகு வைத்து பணத்தை பெற்று விவசாயத்தை மேற்கொண்டுள்ளனர். ஆனால் திடீரென ஏற்பட்டிருந்த வரட்சியின் காரணமாக விவசாயிகளின் விவசாய செய்கை அதிகளவில் பாதிப்படைந்திருந்தமையினால் விவசாயிகள் பாரிய நட்டத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

இதனால் விவசாயிகள் வங்கிகளில் அடகுவைத்த நகைகளை மீளப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டனர்.

இந்த நிலையில் வங்கி நிர்வாகம் குறித்த நகைகளை பகிரங்க ஏல விற்பனையில் விடுவதற்கான அறிவித்தலை விடுத்திருந்தது.

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளின் நகைகள் இருதினங்களும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் உடனடியாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் பாராளுமன்ற உறுப்பினர், வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

அமைச்சர் விவசாயத்திற்காக நகைகளை அடகுவைத்த விவசாயிகளின் நகைகளை ஏலத்தில் விடாது தடுத்து நிறுத்தியுள்ளதோடு விவசாயிகளின் நகைகளை மீளப்பெற ஒரு மாத கால அவகாசம் குறித்த வங்கி நிர்வாகத்திடம் கேட்கப்பட்டது.

அதற்கமைவாக வங்கி நிர்வாகம் விவசாயத்திற்காக அடகு வைத்த விவசாயிகள் நகைகளை மீளப்பெற ஒரு மாதகாலம் அவகாசம் வழங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (2)

## மின்சாரம் தடைப்படும் தினங்கள்

மின்சாரத்தொகுதி பராமரிப்பு, புனரமைப்பு, கட்டுமானப் பணிகள் ஆகியவை மேற்கொள்வதற்காக கிளிநொச்சி பரிவர்த்தனை நிலையத்தின் ஊடாக மின்சாரம் விநியோகிக்கப்படும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் 25,26,29 ஆகிய தினங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதி பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை அளம்பில், செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், குமுழமுனை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும்

இதேவேளை 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணி வரை உண்ணாப்பிலவு, முல்லைத்தீவு நகரம், கள்ளப்பாடு ஆகிய இடங்களிலும்,

மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணி வரை கேப்பாப்பிலவு, வற்றாப்பளை, கனகராயன்குளம், பெரியகுளம், மன்னகுளம், புதூர், பரசன்குளம், முல்லைத்தீவு விமானப்படைத்தளம் 1,2, முல்லைத்தீவு 59 ஆவது படைப்பிரிவு ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணி வரை கற்சிலை மடு, வித்தியாபுரம், முத்துவிநாயகபுரம், தட்டையார்மலை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிவரை ஸ்கந்தபுரம், கோணாவில், ஊற்றுப்புலம், யூனியன்குளம், உருத்திரபுரம், ஜெயந்தி நகர், சிவநகர், நாவற்காடு ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என அவர் அறிவித்துள்ளார். (2-15)



மு/விசுவமடு மகா வித்தியாலய மாணவி ப.தனுஜாவின் படைப்பில் உருவான *ஒரு பூவின் மடல்* எனும் கவிதைத்தொகுப்பு வெளியீடு நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் மு/விசுவமடு மகா வித்தியாலய உள்ளக அரங்கில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினரான வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா நூலினை வெளியிட்டு வைக்க விசுவமடு ப.நோ. கூட்டுறவு சங்க முகாமையாளர் பெற்றுக் கொண்டார்.

(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# விசேட அதிரடிப்படை முகாம் முன்பாக மக்கள் போராட்டம்

## மின்சாரம் தாக்கி பெண் மரணமடைந்ததை அடுத்து






(குருமன்காடு)

வவுனியா, செட்டிக்குளம், அடம்பன்குளம் குருசை சந்தி விசேட அதிரடிப்படை முகாமை அங்கிருந்து அகற்றுமாறு கோரி அப்பகுதி மக்கள் நேற்று காலை அதிரடிப்படை முகாம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குருசை சந்தியில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம் வேலிக்கு இரவு நேரத்தில் விநியோகிக்கப்பட்ட மின்சாரம் விடியற்காலை வரையிலும் நிறுத்தப்படாது இருந்த நிலையில் அருகில் இருந்த வீட்டு குடும்பப் பெண்ணான கந்தசாமி இராஜேஸ்வரி (வயது 55) என்பவர் வேலியில் உள்ள மரங்களில் இலைகளை பறித்தபோது மின்சாரம் தாக்கி கடந்த 17 ஆம் திகதி செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பிரஸ்தாப பெண் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த 18 ஆம திகதி மரணமடைந்தார்.

இதனையடுத்து அவரது இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்ற நிலையில் அப்பகுதியில் மக்கள் திரண்டு குடியிருப்புகளுக்கு மத்தியில் உள்ள இவ்விசேட அதிரடிப் படை முகாமை உடனடியாக அகற்ற வேண்டும் எனவும் மரணத்திற்கு நீதி வழங்கப்படவேண்டும் என்றும் கோரி அதிரடிப்படை முகாம் முன்பாக சுலோகங்கள் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்விசேட அதிரடிப்படை முகாமானது எமது பகுதி நெற்களஞ்சிய சாலை கமநல சேவை நிலையம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் உள்ளிட்ட பல பொதுத் தேவைக்குரிய காணிகளை உள்ளடக்கியுள்ளது.

இதனை அகற்றுமாறு பலதடவை கோரிக்கை விடுத்தும் உரிய தீர்வு தரப்படவில்லை. தற்போது உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளது.

எனவே உடனடியாக இராணுவ முகாமை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இச்செயற்பாட்டுக்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுப்பதாக தெரிவித்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தின் போது அங்கு வருகை தந்த வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.பி.நடராஜா, இ.இந்திரராசா ஆகியோரிடம் அங்கு நின்ற மக்கள் மகஜரொன்றை கையளித்தனர்.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை செய்த வவுனியா மாவட்ட நீதிமன்றம் அதிரடிப் படை முகாம் பொறுப்பதிகாரியை எதிர்வரும் 29 ஆம் திகதி வவுனியா நீதிமன்றில் முற்படுத்துமாறு நேற்று முன்தினம் செட்டிக்குளம் பொலிசாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)




# கடற்கரை சூழலை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம் கிளி., பளையில் இன்று


(கிளிநொச்சி)

கடற்கரை சூழலை தூய்மைப் படுத்தும் தேசிய வேலைத்திட்டம் நாடு தழுவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்தில் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இன்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு துப்புரவு பணி பள்ளிக்குடாவில் ஆரம்பமாகி நாச்சிக்குடா, முழங்காவில் வரை நடைபெறவுள்ளது.

இதேவேளை பளைப்பிரதேச செயலக பிரிவில் பிரதேச செயலர் தலைமையில் இன்று காலை 7 மணிக்கு கிளாலி, அல்லிப்பளை, புலோப்பளை, கோவில் வயல், தர்மக்கேணி ஆகிய இடங்களில் துப்புரவு பணிகள் நடைபெறவுள்ளன.

இந்தத் துப்புரவுப்பணிகளில் பாதுகாப்புப்படையினர், பொலிசார், பொதுமக்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் எனப்பல தரப்பினரும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-254)



புதுக்குடியிருப்பு உலகலந்த பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரால் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற 20 குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா நிதியுதவியும் 5 பேருக்கு தண்ணீர் பம்பிகளும் அண்மையில் மேற்படி ஆலயத்தில் வைத்து வழங்கப்பட்டது. லண்டனிலுள்ள சைவ ஆலயங்கள் மற்றும் மக்களின் பிறந்த நாள் நிதி அன்பளிப்பு ஊடாக கிடைக்கப்பெற்ற நிதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

**ஜானக்க பெரேராவின்**

# கொலையுடன் சந்தேகிக்கப்படும் நபருக்கு இம்மாதம் 30ம் திகதி வரை விளக்கமறியல்

கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த அமைச்சர் ஒருவரின் அறிவுறுத்தலுக்கு அமையவே வடமத்திய மாகாண முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் மேஜர் ஜெனரல் ஜானக்க பெரேரா கொலை செய்யப்பட்டதாக வவுனியா நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி தான் அறிந்திருந்ததாகவும் தனக்கு, மனைவியின் உயிருக்கு ஏற்பட்டிருந்த ஆபத்து காரணமாகவே நீதிமன்றத்தை புறக்கணித்து வந்ததாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் திஸ்ஸங்க திஸாநாயக்க வவுனியா நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வட மத்திய மாகாண சபையின் ஐக்கிய சோசலிசக் கட்சியின் உறுப்பினராக பதவி வகித்த இலக்கம் 144, மதவாச்சி என்ற விலாசத்தில் வசிக்கும் திஸாநாயக்க முதியான் சலாகே பியதாச திஸாநாயக்கலாகே நிஸ்ஸங்க திஸாநாயக்க என்ற இந்த நபர் பகிரங்க நீதிமன்றத்தில் இதனை கூறியுள்ளார்.

நிதி மோசடி சம்பந்தமாக இவர் இரண்டு மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

பிரான்சுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி ஒருவரிடம் 5 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டு ஏமாற்றியதுடன் பணத்தை திரும்ப வழங்காதது சம்பந்தமாக முன்னாள் மாகாண சபை உறுப்பினருக்கு எதிராக வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் பொலிசார் அவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தியிருந்தனர்.

மனைவிக்கும் தனக்கும் இருந்த உயிராபத்து காரணமாகவே தான் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் புறக்கணித்து வந்ததாக நிஸ்ஸங்க திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜானக்க பெரேராவை கொலை செய்தது விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் என்ற போதிலும் அதனை நெறிப்படுத்தியவர், கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த பிரபல அமைச்சர் ஒருவர் (பெயரைக் குறிப்பிடுகிறார்) எனவும் திஸாநாயக்க கூறியுள்ளார். அவரிடம் இருந்த தமிழ் நபர் ஒருவரே (பெயரை குறிப்பிட்டுள்ளார்) கொலைக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

திஸாநாயக்க மேலும் தெரிவிக்கையில்,

நான் சகல சம்பவங்களை அறிந்திருந்தேன். இதனால் அமைச்சர், என்னையும் எனது மனைவியையும் கொலை செய்ய திட்டமிட்டிருந்தார். உயிரைப் பாதுகாத்து கொள்ளவே இது வரை காலமும் நீதிமன்றத்தை புறக்கணித்து வந்தேன் என்றார்.

எவ்வாறாயினும் இந்த சம்பவத்திற்கும் வவுனியா நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என வவுனியா இலக்கம் 1 நீதிமன்ற நீதவான் ராமகமலன் தெரிவித்துள்ளார்.

எனினும் ஜானக்க பெரேராவின் கொலை தொடர்பில் ஏதேனும் அறிந்திருந்தால் அதனை விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அல்லது குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறையிடலாம் எனவும் நீதவான் குறிப்பிட்டுள்ளார்.

சந்தேக நபரான முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நிஸ்ஸங்க திஸாநாயக்க தான் மோசடி செய்த 5 இலட்சம் ரூபாவை திரும்ப வழங்க தயாராக இருப்பதாக கூறினார்.

எனினும் பணத்தை திரும்ப செலுத்தும் வரை பிணை வழங்க முடியாது என கூறிய நீதவான் அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா தலைமையக பொலிசாரின் விசேட விசாரணைப் பிரிவினர் சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தியிருந்தனர். (2)

# கடலில் மூழ்கிய மாணவன் நேற்று சடலமாக மீட்கப்பட்டான்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு உப்புமாவெளி 4 ஆம் கட்டையடி வடக்கு துண்டாய் கடலில் நேற்று முன்தினம் குளித்துக் கொண்டிருந்த இரு மாணவர்கள் கடல் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இதில் முள்ளியவள்ளையைச் சேர்ந்த சத்தியநாதன் அனுசன் (வயது 17) என்பவரது சடலம் அன்றைய தினம் மாலை மீட்கப்பட்டது.

மற்றைய மாணவனான உடுப்புக்குளத்தைச்சேர்ந்த சரவணகுமார் பிரதீஸ் (17) என்பவரது சடலம் நேற்று முற்பகல் 11 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஐந்து நண்பர்கள் இணைந்து நேற்று முன்தினம் நாவல்பழம் பறிப்பதற்கு கடற்கரைக்குச் சென்று அங்குள்ள கடலில் குளித்த வேளை இரு மாணவர்கள் நீரில் மூழ்கிய நிலையில் மற்றைய மூன்று மாணவர்களும் கரையேறி அங்கு நின்ற கடற்றொளிலாளரின் உதவியை நாடியபோது அவர்கள் உடனடியாக கடலில் இறங்கி தேடுதல் மேற்கொண்டனர்.

இதன்போது சத்தியநாதன் அனுசன் என்பவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

மற்றைய மாணவனான சரவணகுமார் பிரதீஸ் என்பவர் கடலில் காணாமற் போன நிலையில் மீனவர்களாலும் கிராம மக்களினாலும் பகல் இரவாக தேடப்பட்டு வந்த நிலையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் அவரது சடலம் நடுக்கடலில் மிதந்து கொண்டிருந்ததை துண்டாய் மீனவர்கள் கண்டு மீட்டு கரை சேர்த்தனர்.

இந்நிலையில் தகவல் அறிந்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிசாரும் கிராம அலுவலரும் விசாரணைகள் மேற்கொண்ட நிலையில் அவ்விடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட நீதவான் சடலத்தை பார்வையிட்டதுடன் விசாரணைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறும் பணித்தார். (2-302)

# எதிர்க்கட்சித் தலைவராக என்னை நடத்துகின்றனர்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னை எதிர்க்கட்சி தலைவரை போன்று நடத்தும் முறையினை காணமுடிகின்றதென பிவிதுரு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் தான் கருத்து வெளியிடும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பிரதமர் அதற்கு பதல் வழங்குவதாக அவர் தெரிவித்தார்.

எப்படியிருப்பினும், நாடாளுமன்றில் புதியவரான உதய கம்மன்பில தனது முதலாவது உரையின் போது நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கு மாறாக கருத்து வெளியிட்டமையினால் பிரதமர் அதற்கு எதிர்ப்பினை வெளியிட்டிருந்தார்.

அவரது அனுபவமற்ற நிலைமை காரணமாக கம்மன்பில இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் உதய கம்மன்பில ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போது. பிரதமர் என்னை தொடர்ந்து இலக்கு வைத்து கொண்டுள்ளமை தெரிகின்றது. எனினும் அவரது இலக்காக இருக்க வேண்டியது எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தனே, தவிர உறுப்பினரான என்னை அல்ல.

எப்படியிருப்பினும் அவர் என்னை எதிர்க்கட்சி தலைவர் இடத்தில் வைத்து குற்றம் சுமத்துவதற்கு நான் அவருக்கு நன்றி தெரிவித்து கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# போதைப்பொருள் கடத்தப்படுவதே பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது

## ஜனாதிபதி எடுத்துரைப்பு

(கொழும்பு)

**நாட்டிற்குள் போதைப்பொருள் கடத்தப்படுவது இன்று பாரியபிரச்சினையாக மாறியுள்ளதெனவும், அதனை த்தடுப்பதற்காக நவீன தொழில்நுட்ப உபகரணங்களை தருவிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் உலக வங்கியிடம் ஜனாதிபதி கோரிக்கை முன்வைத்துள்ளார்.**

உலக வங்கியின் தெற்காசிய வலயத்திற்கான உபதலைவரை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு கோரிக்கையை முன்வைத்துள்ளார். தேசிய உணவு உற்பத்தி திட்டத்தை வலுவூட்டி, நாட்டின் விவசாயத்துறையை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள திட்டங்களுக்கும் உலகவங்கியின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டது.

வெளிநாட்டு முதலீடுகளுக்காக நாட்டிற்குள் வசதிகளை விஸ்தரிப்பதுடன். அதிக முதலீட்டாளர்களை நாட்டினுள் உள்ளீர்ப்பதற்கு புதிய அரசாங்கம் அதிகளவான திட்டங்களை வகுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ள ஜனாதிபதி. அதனூடாக ஏற்றுமதி சந்தையை விஸ்தரிப்பதற்கும் எண்ணியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் எதிர்கால அபிவிருத்தித்திட்டங்களை வெற்றிகரமாக மாற்றிக் கொள்வதற்காக உலக வங்கியின் அதிகபட்ச ஒத்துழைப்பை பெற்றுத்தருவதாக உலக வங்கியின் உபதலைவர் இதன் போது ஜனாதிபதியிடம் உறுதியளித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# இந்தியாவில் வைத்து பிரதமரிடம் வாங்கிக்கட்டிய இலங்கை அதிகாரி

(கொழும்பு)

இலங்கை அதிகாரியொருவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வசமாக வாங்கிக் கட்டிக் கொண்ட சம்பவமொன்று இந்தியாவில் நடைபெற்றுள்ளது.

இந்தியாவுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவைச் சென்றடைந்ததும் டில்லி தாஜ் பெலஸ் ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது பிரதமர் தங்கியிருந்த அறைக்கு குறித்த அதிகாரி கோப்பு (பைல்) ஒன்றையும் தூக்கிக் கொண்டு வருகை தந்திருந்தார். பிடிவாதமாக பிரதமரை நேரில் சந்தித்த அந்த அதிகாரி தன்கையில் இருந்த பைலை பிரதமரிடம் நீட்டியுள்ளார்.

சேர், நீங்கள் இந்தியப் பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி முகர்ஜியைச் சந்தித்த பின் ஊடக சந்திப்பில் உரையாற்ற வேண்டிய உரை இதில் உள்ளது! என குறித்த அதிகாரி கூறியுள்ளார்.

இதனைக்கேட்டதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முகம் கோபத்தில் சிவந்தது.

நான் ஆற்ற வேண்டிய உரையை எனக்கு யாரும் எழுதித்தரவேண்டியதில்லை! என கடிந்துள்ளார்.

எனினும் குறித்த அதிகாரி அவ்விடத்தில் இருந்து அகலாமல் அந்த உரையின் முக்கியத்துவம் குறித்து பிரதமருடன் வாதிட முற்பட்டுள்ளார். இதனையடுத்து கடும் கோபம் கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அந்த அதிகாரி கண் முன்னாலேயே அவர் தயாரித்திருந்த உரையை குப்பைக் கூடைக்குள் வீசியெறிந்துள்ளார்.

அத்துடன் இதுபற்றி அதிகாரிகள் மத்தியில் பிரஸ்தாபித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னைய அரசாங்க காலத்தில் அரச தலைவர்களை ஆட்டுவித்தது போன்று, எந்தவொரு அதிகாரியும் பிரதமரை ஆட்டுவிக்க முயற்சிக்க வேண்டாம் என்று கடுமையாக எச்சரித்துள்ளார்.

அதன் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் மோடி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி காங்கிரஸ் தலைவர் சோனியா, பொதுச் செயலாளர் ராகுல்காந்தி ஆகியோரைச் சந்தித்தபோது அதிகாரிகள் யாரும் குறுக்கீடு செய்ய முயற்சிக்கவில்லை என்று தெரியவந்துள்ளது. (இ-7)

# போர்க்குற்ற விசாரணையே பொன்சேகாவின் நிலைப்பாடு

## அனோமா பொன்சேகா கூறுகிறார்

(கொழும்பு)

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே முன்னாள் இராணுவத் தளபதிபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் திடமான நிலைப்பாடு என அவரது பாரியார் அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

குற்றம் எதனையும் செய்யா விட்டால்ஒளிந்து மறையத்தேவையில்லை. ஒளிந்து மறைய மறைய குற்றவாளிகள் என்றே அர்த்தப்பட்டுவிடும், குற்றச் சாட்டுக்கள் அடுக்கிச் செல்லப்படும்.

"நானே இராணுவத் தளபதியாக இருந்தேன். சரியான முறையில் சாட்சியமளிக்க முடியும்" என்றே சரத் பொன்சேகா கூறுகின்றார்.

அப்போதைய அரசாங்கம் அவரது கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டது. அவரது படையினர் போர்க்குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை.

கலப்பு (ஹைபிரைட்)அல்ல எந்தவொரு நீதிமன்றின் ஊடாக விசாரணை நடத்தினாலும்போலிக் குற்றச்சாட்டுக்களுக்கு சரியானவர்களைக் கொண்டு பதிலளிக்க வேண்டும்.

போர் செய்த போர்க்களத்தில் இருந்தவர்களே அந்த விடயங்கள் பற்றி நன்கு அறிவார்கள்.

சரத் பொன்சேகா விசாரணைகளை தைரியமாக ஏற்றுக்கொள்ளத் தயாராகின்றார்.



சுயலாப நோக்கில் சிந்தித்து இருந்தால் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சரத் பொன்சேகா போட்டியிட்டு இலகு வெற்றியீட்டியிருப்பார்.

எனினும் கட்சியின் நலன்களையும் கட்சியின் கட்டமைப்பையும் பாதுகாக்கவே தனித்து போட்டியிட்டார்.

இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

தேர்தலில் மக்களினால் தோற்கடிக்கப்பட்டவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இது பிழையான ஓர் நடவடிக்கை என்பதே எமது நிலைப்பாடு.

போதைப்பொருள் விற்பனை செய்வோரும் வேறு வழியில் நாடாளுமன்றம் பிரவேசித்துள்ளதாக அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பாரியாருடன் காலி கோட்டைப் பகுதியில் நடைபெற்ற சுற்றுலா தின நிகழ்வின் நேற்று முன்தினம் கலந்துகொண்ட போது...

# மகிந்தவின் ஆட்சிக்காலக் கொலைகளை மூடிமறைக்க இடமளிக்கப் போவதில்லை



## பிரதமர் ரணில் திட்டவட்டம்

**(கொழும்பு)**

**தேசிய பாதுகாப்பை முன்னிறுத்தி மகிந்த ராஜ பக்ஷவின் ஆட்சிக்காலக் கொலைகளை மூடிமறைக்க இடமளிக்கப் போவதில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

பிரதமரின் இந்தியப் பயணத்தின் வெற்றி குறித்து அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவருக்கு நெருக்கமான சில அமைச்சர்களுக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றிருந்தது.

இதன்போது கருத்து வெளியிட்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

முன்னைய ஆட்சியின் கொலைகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள முனைந்தால் தேசிய பாதுகாப்பை முன்னிறுத்தி இராணுவத்தினர் அதற்கு முட்டுக்கட்டைகள் போடுகின்றனர். ஊடகங்களும் அவர்களுககுத் துணை போகின்றன.

தமது சகாக்கள் அநியாயமான முறையில் கொல்லப்பட்டதைக் கூட மறந்து. அவர்களை துரோகிகளாக சித்தரித்து மகிந்தவையும் சகாக்களையும் பாதுகாக்கும் முயற்சியில் ஊடகங்கள் முன்னிலையில் நிற்கின்றன.

2 ஊடக தர்மத்துக்கும் கௌரவத்துக்கும் இது பாரிய இழுக்காகும்.

ஆனால் யார் என்ன கூறினாலும். தேசியப் பாதுகாப்பை முன்னிறுத்தி தடைபோட முயன்றாலும் மகிந்த அரசின கொலைகள் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப் படும். அதில் சிறு மாற்றத்திற்கும் இடமில்லை.

அதற்கு ஏதுவாகவே பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் மாற்றப்பட்டு. புதிய ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கும். அநியாயங்களுக்கு உள்ளான சிறுபான்மையினருக்கும் நீதியைப்பெற்றுக் கொடுப்பதில் தனது அரசாங்கம் எவ்வகையான நெருக்கடிகளையும் சமாளிக்கத் தயாராக இருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

**கே.பி. மற்றும் அவன் கார்ட் விசாரணைகளை மூடி மறைக்க இடமளிக்கப்படாது.**

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் குறித்த வழக்கு மற்றும் அவன்கார்ட் விசாரணைகளை மூடி மறைக்க இடமளிக்கப்படாது.

எந்தக் காரணத்திற்காகவும் இந்த விசாரணைகளை கிடப்பில் போட இடமளிக்க மாட்டேன்.

குமரன் பத்மநாதன் தொடர்பில் மீளவும் விசாரணைகளை நடத்துமாறு நான் கோரியுள்ளேன்.

அவன்கார்ட் தொடர்பிலும் நான் சட்டமா அதிபருடன் மீளவும் பேசுகின்றேன்.

குமரன் பத்மநாதன் மற்றும் அவன்கார்ட் வழக்குகள் தொடர்பில் இதுவரையில் நடைபெற்ற விசாரணைகளின் அடிப்படையிலேயே சட்டமா அதிபர் நீதிமன்றில் கருத்து வெளியிட்டுள்ளார்.

விசாரணைகளின் போது குமரன் பத்மநாதன் குற்றவாளி என ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்.

அதேபோன்றே அவன் கார்ட் சம்பவம் தொடர்பிலும் வழக்குத் தொடரப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இறைவரித் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் தொழில் நுட்பமல்லாத தொகுதி - 2 சேவை வகுதியின் தரம் III முன்மேசை அலுவலர் பதவிக்காகப் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் ளன.

க.பொ.த. (சா/த.) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழி. ஆங்கில மொழி. கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் அத்துடன் க.பொ.த. (உ/த.) பரீட்சையில ஆகக்குறைந்தது சாதாரண பொதுப் பரீட்சை தவிர ஒரு பாடத்தினாவது சித்தியடைந்திருத்தல்.

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம். உள்நாட்டு இறைவரித் திணைக்களம். இல. 155. சேர் சிற்றம்பலம் ஏ.காடினர் மாவத்தை கொழும்பு 2 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் ஒக்டோபர் 19ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.மேலதிக தகவல்களை கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

## தச்சுத் தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆரம்ப நிலை ஊழியர்கள் வகுதி (PL2-2006) தச்சுத் தொழிலாளர் பதவிக்கான ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

க.பொ.த. (சா/த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் வீண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம். உள்நாட்டு இறைவரித் திணைக்களம். இல.155. சேர்.சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு 2 எனும் முகவரிக்கு எதிர் வரும் ஒக்டோபர் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக பதிவுத் தபாலில் கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா:20சூரிசெவ் 2 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/4961

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 40
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/அரச தொழில்
தொ.இ: B/4962

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 48
உயரம்: 175cm
தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்
தொ.இ: B/4963

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 25
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:MSC IT/லண்டன்
தொ.இ: B/4966

**மணமகன் தேவை**

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 53செவ் 1 இல்
தகைமை/தொழில்:கணக்காளர்
தொ.இ: G/2110

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 58 செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/2124

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 16
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்
தொ.இ: G/2128

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 25
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:CIMA
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/2147

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



**பதவி வெற்றிடம்**

**பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளது**

★ அலுவலகச் செய்தியாளர்கள்
(இருபாலாரும்- உள்ளகம், வெளியகம்)
★ கணனி இயக்குநர்கள் மற்றும் பக்கவடிவமைப்பாளர்கள்
(பெண்கள்)
★ ஒப்புநோக்குநர் (பெண்கள்)
★ பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர்
(இருபாலாரும்- மும்மொழி அறிவு)

வயது எல்லை 21-45. தகைமையும் அனுபவமுள்ள பொருத்தமானவர்கள் 24.09.2015 வியாழக்கிழமை அன்று முற்பகல் 10 மணிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.
(அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

பொது முகாமையாளர்.
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

# அரசியல் சாசனத்திற்கு எதிராக ஜப்பானின் பாதுகாப்பு நகர்வு

## குற்றஞ்சாட்டுகிறது சீனா



**(பீஜிங்)**

**அனைத்து பிரச்சினைகளும் போர் அல்லது வன்முறையின்றி தீர்க்கப்பட வேண்டும் என்று கோரும் தமது அரசியல் சாசனத்தை மீறும் வகையில் ஜப்பான் புதிய பாதுகாப்புச் சட்டங்களை முன்னெடுத்துள்ளது என்று சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.**

ஜப்பான் இப்போது கொண்டு வந்துள்ள புதிய பாதுகாப்புச் சட்டங்களை அடுத்து, இரண்டாம் உலகப் போருக்கு பிறகு முதல் முறையாக வெளிநாட்டில் போர் நடவடிக்கைகளை முன்னெடுக்க ஜப்பானியத் துருப்புக்களுக்கு அனுமதி கிடைக்கிறது.

ஆழமான பாடங்களை ஜப்பான் வரலாறுகளிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என, சீனாவின் பாதுகாப்பு அமைச்சகம் ஜப்பானை வலியுறுத்தியுள்ளது.

அதுமட்டுமன்றி தமது அண்டை நாடுகளின் பாதுகாப்பு கவலைகளை ஜப்பான் கருத்தில் எடுக்க வேண்டும் எனவும் சீனா கோரியுள்ளது.

எனினும் அமெரிக்கா, பிரிட்டன மற்றும் அவுஸ்திரேலியா ஆகியவை ஜப்பான் கொண்டுவந்துள்ள புதிய பாதுகாப்புச் சட்டத்தை வரவேற்றுள்ளன.

இச்சட்டத்தின் மூலம் சர்வதேசளவில் அமைதிகாக்கும் நடவடிக்கைகளில் இனி ஜப்பான் மேலும் கூடுதலான வகையில் ஆக்கபூர்வமாக பணியாற்ற முடியும் என இந்த மூன்று நாடுகளும் தெரிவித்துள்ளன. (3-7)

# தலையில் உலோகத்துண்டுடன் பிறந்த குழந்தைக்கு சத்திரசிகிச்சை



## கருவில் இருக்கும் போதே ஏவுகணைத் தாக்குதல்

உலகின் எந்த மூலையில் போர் நடந்தாலும், அதில் அதிகபட்ச வன்முறைக்கு ஆளாவது பெண்களும் குழந்தைகளும் தான்.

அதற்கு சிரியாவைச் சேர்ந்த இந்த தாயும் அவரது குட்டி தேவதை மட்டும் விதிவிலக்கல்ல.

சிரியாவில் அரசுப் படையினரும் குர்து கிளர்ச்சி படையினரும் நீண்ட காலமாகவே போரிட்டு வருகின்றனர்.

இவர்களின் தாக்குதலுக்கு இத்தனை பேர் பலி என்று அடிக்கடி வரும் செய்திகள் பெரும்பாலும் இயல்பாகக் கடந்து போய்விடுகின்றன.

ஆனால் இந்த தாய்க்கு நிகழ்ந்த கொடூரமோ, ஒரு தாக்குதலின் கோர முகத்தை அப்பட்டமாகக் வெளிக்காட்டுகிறது.

சிரியாவின் அலப்போ நகரில் நடந்த ஏவுகணை தாக்குதலில் இந்த கர்ப்பிணித்தாய் படுகாயமடைந்தார்.

தாக்குதலுக்கு உபயோகப்படுத்தப்பட்ட வெடிகுண்டில் இருக்கும் ஒரு சிறிய உலோகத்துண்டு அவரது வயிற்றில் தைத்தது.

வலியில் துடித்த அவருக்கு உடனடியாக சத்திர சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

அடி வயிற்றைக் கிழித்து இந்த பூமிக்கு கொண்டு வரப்பட்ட அந்த குட்டி தேவதையைப் பார்த்த மருத்துவர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர்.

குழந்தையின் நெற்றியில் ஏவுகணையில் பயன்படுத்தப்பட்ட உலோகத்துண்டு ஒன்று சிக்கியிருந்தது.

நீண்ட போராட்டத்திற்கு பின் மருத்துவர்கள் அதை வெற்றிகரமாக சத்திரசிகிச்சை செய்து வெளியே எடுத்தனர். அதன் பிறகே குழந்தை இயல்பாக மூச்சு விடத் தொடங்கியது.

தற்போது தாய் மற்றும் சேயின் உடல் நலம் தேறி வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (3-7)

# சிங்கப்பூர் கடற்படை அதிகாரி ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவு


சிரியா மற்றும் ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக பல நாடுகள் போரிட்டு வருகின்றன.

இது ஒரு புறமிருந்தாலும், இந்த அமைப்புக்கு ஆதரவாக சில நாடுகளில் ஆட்சேர்ப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் சிங்கப்பூரிலும் இந்த தீவிரவாதிகளுக்கு பரவலான ஆதரவு காணப்படுகிறது. ஐ.எஸ். தீவிரவாத அனுதாபிகள் நாடு முழுவதும் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

அங்குள்ள கடற்படை அதிகாரி ஒருவர் தனது செல்போனில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் முத்திரை உள்ளிட்ட பல்வேறு ஆதரவான வாசகங்களை வைத்திருந்தது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

27 வயதான அந்த அதிகாரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த வழக்கின் விசாரணை அடுத்த ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (3-7)



# சிரிய பல்மைரா நகரில் 26 பேர் கொன்று குவிப்பு

சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ். தீவிரவாதிகள், அந்த நாட்டின் தலைநகரான டமாஸ்கஸுக்கு வட கிழக்கில் அமைந்துள்ள உலகின் மிகப்பழைமையான நகரமான பல்மைராவை கடந்த மே மாதம் கைப்பற்றினர்.

இந்த பல்மைராவில், முதல் நூற்றாண்டில் இருந்து 2ஆவது நூற்றாண்டு வரையில் கட்டப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கலை, கலாசார சின்னங்கள் சிதைவடைந்த நிலையில் உள்ளன. இந்த நகரின் பழைமையான கட்டடங்களை பாரம்பரிய சின்னங்களாக ஐ.நா. சபையின் அங்கமான யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

இந்த பல்மைராவில் பெருமை வாய்ந்த கலைப்பொக்கிஷங்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் தரை மட்டமாக்கி விடுவார்கள் என்ற அச்சம் நிலவி வருகிறது. அந்த நகரில் தொல்பொருள் ஆராய்ச்சி வல்லுநரான 82 வயது கலீல் ஆசாத்தை அவர்கள் கடத்தி, தலையை துண்டித்து கொடூரமாக படுகொலை செய்தது உலகமெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

பல்மைராவில் நிலை கொண்டுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டி, அந்த நகரை மீண்டும் கைப்பற்றுவதற்கு சிரியாவின் அரசுப்படைகள் தக்க தருணத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றன. இந்த நிலையில் நேற்று சிரியாவின் படைகள், ஐ.எஸ். தீவிரவாதிகளை குறிவைத்து, பல்மைராவில் வான்தாக்குதல்கள் நடத்தின. இந்த தாக்குதல்களில் 26 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 12 பேர் தீவிரவாதிகள் என தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்கிடையே இத்லிப் மாகாணத்தின் அபு அல் துகுர் விமானப் படை தளத்தில் சிரிய படை வீரர்கள் 56 பேரை அல்கொய்தா ஆதரவு பெற்ற நுஸ்ரா முன்னணி தீவிரவாதிகள் சுட்டுக்கொன்று விட்டதாக சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது. இந்த கொடூர சம்பவம், சில தினங்களுக்கு முன்பாக நடந்துள்ளது. ஆனால் இப்போது தான் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

இதுபற்றி சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இயக்குநர் அப்துல்ரகுமான் கூறுகையில், "சிரிய படை வீரர்கள் 56 பேரை தீவிரவாதிகள் மொத்தமாக சுட்டுக்கொன்ற சம்பவம், இப்போது தான் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நேரில் பார்த்தவர்கள் மற்றும் பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் இந்த சம்பவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என குறிப்பிட்டார். (3-7)

# ஐ.நாவின் 70-வது கூட்டம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது

## பிரதமர் மோடி தெரிவிப்பு

(நியூயோர்க்)

**தீவிரவாதத்துக்கு எதிராக கடுமையான செய்தியை வெளியிடுவதற்கு, வரலாற்று சிறப்பு மிக்க 70-வது ஐ.நா. பொதுக்குழு கூட்டத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.**



இது தொடர்பாக அவர் கடந்த ஜூலை 4-ம் திகதி ஐ.நா. பொதுச் செயலர் பான் கி மூனுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதம் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் விநியோகிக்கப்பட்டது. அதில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது,

தீவிரவாதத்தை துளி கூட பொறுத்துக் கொள்ள முடியாத நமது நிலையை, தீவிரவாதத்துக்கு எதிராக கடுமையான செய்தியை நாம் தெளிவாக அறிவிக்க வேண்டும்.

அதற்கு 70-வது ஐ.நா. கூட்டத்தை பயன்படுத்திக் கொள்ள வேணடும்.

அரசு சாரா சிலர் ஆயுதங்களை ஏந்தி உலகுக்கு அச்சுறுத்தலாக விளங்குகின்றனர்.

அவர்களுக்கு கடுமையான தகவலை நாம் அனுப்ப வேண்டும். இந்த பிரச்சினையில் ஐ.நா. கூடுதல் முயற்சி மேற்கொண்டு பாதுகாப்புக்கு உள்ள புதிய சவால்களை கையாள வேண்டும்.

இரண்டாம் உலகப் போரின் சாம்பலில் இருந்துதான் ஐ.நா. சபை உருவாக்கப்பட்டது.

இப்போது அரசு சாரா சர்வாதிகாரிகள் பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். மேலும் ஐ.நா. மாநாட்டில் சர்வதேச தீவிரவாதத்துக்கு எதிராக விரிவான தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

முன்பெல்லாம் தீவிரவாதம், வன்முறை பேபன்றவை இல்லை.

இப்போது தீவிரவாதம் பல பரிமாணங்களை கொண்டுள்ளது. அதை ஒடுக்க உலகளாவிய அளவில் திறமையான திட்டங்களை கொண்டு வர வேண்டும்.

அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் நாளுக்கு நாள் சிக்கலாகிக் கொண்டே செல்கின்றன. எதிர்பார்க்க முடியாத வகையில், தெளிவாக விளக்கம் அளிக்க முடியாத வகையில் அச்சுறுத்தல்கள் நிலவுகின்றன.

இவ்வாறு அக்கடிதத்தில் மோடி தெரிவித்துள்ளார. இந்த மாத இறுதியில் ஐ.நா சபையின் 70 ஆவது ஆண்டு நிறைவுக் கூட்டம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-7)

### இந்திய இராணுவத்தின் தாக்குதலுக்குள்ளான

# சீன கண்காணிப்பு கோபுர பகுதிக்கு மத்திய உள்துறை அமைச்சர் விஜயம்

இந்திய-பாகிஸ்தான், இந்திய-சீன எல்லைகளுக்கு நேரடியாக சென்று 3 நாட்கள் பார்வையிடுகிறார் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்.

இந்த நிகழ்வின் போது சாம்பாவில் உள்ள இந்தோ- திபெத் எல்லை பாதுகாப்புப்படை முகாமில் புதிய அலுவலகம் ஒன்றை ஆரம்பித்து வைக்கிறார்.

அதே பகுதியில் அவ்வபோது தாக்குதல் நடத்தப்பட்டு வரும் பகுதிகளையும் பார்வையிடுகிறார்.

காஷ்மீர் எல்லையிலுள்ள சீன இராணுவத்தின் கண்காணிப்பு கோபுர தகர்ப்பு நடைபெற்ற கிழக்கு லடாக் பகுதியில் உள்ள எல்லைச் சாவடிகளையும் பார்வையிடுகிறார். ஏற்கனவே, கடந்த 2 முறை ராஜ்நாத் சிங் எல்லைகளை பார்வையிடுவது இரத்து செய்யப்பட்டது. குறிப்பாக, மோசமான வானிலை காரணமாக ஒருமுறையும், சென்ற வாரம் பீகார் தேர்தல் பிரச்சாரத்திற்காகவும் இரத்து செய்யப்பட்டது. இந்நிலையில், இன்றைய தினம் எல்லைப்பகுதிகளுக்கான விஜயத்தை அமைச்சர் ஆரம்பிக்கிறார். இதே வேளை இந்திய- சீன எல்லையில் தாக்குதலுக்குள்ளான சீன கண்காணிப்பு கோபுரம் அமைந்திருந்த பகுதிக்கும் அவர் விஜயம் செய்கிறார். (3-7)

# சார்க் நாடுகளின் செயற்கைக்கோள் திட்டத்துக்கு இலங்கை ஒப்புதல்

## இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் தகவல்

(புதுடில்லி)

'சார்க்' நாடுகளின் பயன்பாட்டுக்காக, பிரத்யேக செயற்கை கோளை இந்தியா உருவாக்கி விண்ணில் செலுத்தும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவித்திருந்தார்.



அந்த செயற்கைகோளை புவி சுற்றுவட்டப்பாதையில் நிலை நிறுத்த உள்ள இடத்தை பதிவு செய்வதற்கு அனைத்து 'சார்க்' நாடுகளின் ஒப்புதல் கட்டாயம் தேவையாகும்.

அந்தவகையில், இந்த திட்டத்துக்கு இலங்கை ஒப்புதல் அளித்துள்ளது. இத்தகவலை இந்திய விண்வெளி ஆராய்ச்சி மைய (இஸ்ரோ) தலைவரும், விண்வெளித்துறை செயலாளருமான கிரண் குமார் நேற்று முன்தினம் டில்லியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

மேலும், 'சார்க்' செயற்கை கோளை டிசம்பர் மாதத்துக்குள் ஏவிவிடலாம் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதுபோல், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மாலைத்தீவு, நேபாளம், வங்காளதேசம், பூட்டான் ஆகிய 'சார்க்' நாடுகளின் ஒப்புதலுக்காக இந்தியா காத்திருக்கிறது. (3-7)

# இந்திய சுதந்திர விடுதலைப் போராட்ட வீரன் சுபாஷ் சந்திரபோஸுக்கு நடந்தது என்ன?

## அனைத்து விபரங்களையும் மத்திய அரசு வெளியிடும்

(ஐதராபாத்)

இந்திய சுதந்திர விடுதலைப் பேராட்ட வீரர் சுபாஷ் சந்திரபோஸ் தொடர்பான அனைத்து அம்சங்களையும் ஆராய்ந்து, கோப்புகளை வெளியிடுவது குறித்து மத்திய அரசு முடிவு எடுக்கும் என பாராளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் வெங்கையா நாயுடு கூறினார்.

நேதாஜி என்று நாட்டு மக்கள் அனைவராலும் அன்புடனும், நேசத்துடனும் அழைக்கப்படுகிறவர் சுபாஷ் சந்திரபோஸ்.

அவர் ஜப்பானின் ஆக்கிரமிப்பில் இருந்த இன்றைய தைவானில் பார்மோசா என்ற இடத்தில் 1945 ஆம் ஆண்டு, ஓகஸ்டு, 18ஆம் திகதி நடந்த விமான விபத்தில் மரணமடைந்தார் என கூறப்பட்டு வருகிறது.

ஆனால் அந்த நாளில் அப்படி ஒரு விபத்து நடக்கவே இல்லை என்று தைவான் அறிவித்தது. இதனால் அவரது மரணத்தில் இன்றளவும் சர்ச்சை நிலவி வருகிறது.

நேதாஜியின் வாழ்வு, மரணம் என இரண்டிலும் பல இரகசிய முடிச்சுகள் உள்ளன. அவை அவிழ்க்கப்படவே இல்லை.

நேதாஜி தொடர்பான 90 இரகசிய கோப்புகளில், 27 கோப்புகள் வெளியுறவுத்துறை அமைச்சகத்திடமும், மீதி கோப்புகள் பிரதமர் அலுவலகத்தில் உள்ளதாகவும், உள்துறை அமைச்சகத்திடம் இருந்து வந்த இரகசியமில்லா கோப்புகள், மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் தேசிய ஆவணக் காப்பகத்தின் பாதுகாப்பில் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

அனைத்து கோப்புகளையும் பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்று நேதாஜி குடும்பத்தினர் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால் அந்த கோப்புகளை வெளியிட்டால், வெளிநாடுகளுடனான தூதரக உறவுகள் பாதிக்கப்படும் என கூறி மத்திய அரசு வெளியிட மறுத்து வந்தது.



இந்த நிலையில் மேற்கு வங்காள அரசு தன்னிடமிருந்து வந்த நேதாஜி தொடர்பான 12 ஆயிரத்து 744 பக்கங்களைக் கொண்ட கோப்புகளை 2 தினங்களுக்கு முன் பகிரங்கமாக வெளியிட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து மத்திய அரசும் நேதாஜி தொடர்பான அனைத்து கோப்புகளையும் வெளியிட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

இதேவேளை சுபாஷ் சந்திர போஸ ரஷ்ய சிறையிலிருந்து இறந்து போனதாக கூறப்படுகிறது. (3-7)

# இந்திய சுற்றுலா பயணிகள் விரும்பும் வெளிநாடு சிங்கப்பூர்

## ஆய்வில் தகவல்

(மும்பை)

இந்திய சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் பிடித்த வெளிநாடு எது என ஹோட்டல்ஸ் பிரைஸ் இண்டெக்ஸ் என்ற ஒரு கருத்துக் கணிப்பை பிரபல சுற்றுலா இணையதளமான ஹோட்டல்ஸ்.காம் நடத்தியிருக்கிறது.

நடப்பு ஆண்டில் இதுவரை எடுக்கப்பட்ட கணக்கீடுகளின் அடிப்படையில் இந்திய சுற்றுலா பயணிகளின் விருப்பத்தில் முதலிடத்தை பிடித்துள்ளது சிங்கப்பூர்.

சென்ற ஆண்டு துபாய் இந்த இடத்தை தக்க வைத்திருந்தது. உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான ஹோட்டல்களில் முன்பதிவு செய்யப்படும் தகவல்களின் அடிப்படையில் இந்த புள்ளிவிபரம் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

துபாய்க்கு 2-வது இடமும், தாய்லாந்திற்கு 3-வது இடமும் கிடைத்துள்ளது.

வழக்கம்போல், லண்டன் 4-வது இடத்திலும், அமெரிக்காவின் நியூயார்க் 5-வது இடத்திலும் உள்ளது.

இதற்கு அடுத்தடுத்த இடங்களில் தெற்காசிய நாடுகளான ஹாங்காங், இந்தோனேசியா ஆகிய நாடுகள் உள்ளன.

பிரான்ஸ் 8-வது இடத்தை தக்க வைத்துள்ளது.

அதேபோல், வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை பொறுத்த வரையில் இந்தியாவில் டெல்லி, மும்பை நகரங்களை முதன்மையாக தேர்வு செய்கின்றனர்.

அதற்கு அடுத்தபடியாக பெங்களூர், சென்னை, ஐதராபாத், ஜெய்ப்பூர், கொல்கத்தா, கொச்சின், திருவனந்தபுரம் ஆகிய நகரங்கள் இடம்பெறுகின்றன.

# நாம் பொய்வாக்குறுதிகள் மூலம் ஏமாற்றப்பட்டால் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்போம்

## அரசியல் கைதிகளின் விடுதலைக்கான மக்கள் அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

**சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை இம்மாத இறுதிக்குள் விடுதலை செய்து உண்மையான நல்லாட்சியை வெளிப்படுத்த தவறும் பட்சத்தில், சிறைகளில் இருக்கும் தமது உறவுகளையும் ஒன்றிணைத்து சாத்வீக ரீதியிலான தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக அரசியல் கைதிகளின் விடுதலைக்கான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது**

காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வருகின்ற ஆட்சியாளர்கள் ஆட்சிப் பீடம் ஏற முன்பு ஒரு கதையையும், அதன் பின்பு வேறுவிதமான கருத்துகளையும் தமது உறவுகளின் விடுதலை தொடர்பாக வெளியிட்டு தொடர்ந்தும் தாம் ஏமாற்றப்பட்டே வருவதாகவும், ஒவ்வொரு காலத்திலும் விசேட நீதிமன்றங்களை அமைப்பது, சிறு குழுக்களை அமைப்பது, ஆணைக்குழுக்களை நியமிப்பது, விசேட பிரதிநிதிகளை சிபாரிசு செய்வது போன்ற பல்வேறு கருத்துகளை மட்டும் வெளியிட்டு தொடர்ந்தும் தமது உறவுகளின் விடுதலைக்கான காலங்கள் இழுத்தடிக்கப்பட்டே வருவதாகவும் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான மக்கள் அமைப்பு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுதியுள்ள மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை இம்மாத இறுதிக்குள் விடுதலை செய்து உண்மையான நல்லாட்சியை வெளிப்படுத்த தவறும் பட்சத்தில், சிறைகளில் இருக்கும் தமது உறவுகளையும் ஒன்றிணைத்து சாத்வீக ரீதியிலான தொடர் உண்ணாவிரதப்போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை சிறைகளில் அரசியல் கைதிகளாக பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எமது உறவுகளின் பெற்றோர் மற்றும் மனைவி, பிள்ளைகள் ஆகிய நாம், எமது உறவுகளின் உடனடி விடுதலை வேண்டி தங்களுக்கு இந்த பகிரங்க மடலை எழுத வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளோம்.

மிக நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எமது உறவுகளின் விடுதலை தொடர்பாக இதுவரை எந்த முன் னேற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாக சிறைகளில் தடுத்து வைக் கப்பட்டிருக்கும் எமது உறவுகள் மூன்று விதமாக நோக்கப்படுகின்றனர்.

01. உயர் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு மிக நீண்ட காலமாக விளக்கமறியலில் உள்ளோர். (8 முதல் 15-20 வருடங்கள் வரை)

02.குற்றச்சாட்டுகளை பாரமெடுத்தோர் (தண்டனைக் கைதிகள்)

03.வழக்கு தாக்கல் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்.

மேற்கூறப்பட்டுள்ளவர்களுள் பெரும்பாலானோர் விசாரணை அதிகாரிகளால் சிங்கள மொழியில் எழுதப்பட்ட உண்மைக்கு மாறான குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களில் அந்த அதிகாரிகளின் வற்புறுத்தலினாலும், விடுதலை செய்வதாக கூறியும் பெறப்பட்ட ஒப்பங்களை அடிப்படையாக வைத்தே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் உயர்நீதிமன்றங்களில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் அனைத்தும் சிங்கள மொழியிலேயே இடம்பெறுவதுடன், ஒவ்வொரு வழக்கு தவணைகளும் 3 முதல் 6 மாதங்கள் வரை தவணையிடப்படுகின்றன.

1 முதல் 2 மாதங்கள் வரை தவணையிடப்படும்போது அங்கு நீதிபதி, அரச சட்டத்தரணி அல்லது சாட்சியாளர்கள் வருவதில்லை. ஆயினும் எமது உறவுகள் சட்டதரணிகளுக்கு எதுவிதமான நீதிமன்ற நடவடிக்கைகளுமின்றி பணத்தை மட்டும் தொடர்ந்தும் வழங்க வேண்டிய துன்பியல் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருககின்றன.

இந்தநிலையில் பலருடைய வழக்கு விசாரணை நடவடிக்கைகள் பல வருடங்களாக திகதியிடப்பட்டு 10 முதல் 15-18 வருடங்களையும் அண்மித்து விட்டது., எனவே இனியும் நீதிமன்றங்கள் ஊடாக எமது உறவுகளின் விடுதலையை எதிர்பார்ப்பதென்பது எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயல்முறையாகும்.

அவ்வாறே நீதிமன்றங்களின் விசாரணைகளை இனியும் எமது உறவுகள் எதிர்கொள்ள வேண்டுமாகவிருந்தால், இன்னும் பல வருடங்கள் எமது உறவுகள் சிறைகளுக்குள்ளேயே தமது வாழும் காலத்தை கழிக்க வேண்டிய அவல நிலைக்கு உள்ளாவார்கள். எனவே எமது உறவுகளின் உடனடி விடுதலைக்கான ஆக்கபூர்வமான செயல்முறையொன்று மிக விரைவாக உருவாக்கப்பட வேண்டும்.

எமது உறவுகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கான தண்டனைக்காலத்தை விடவும், மேலதிகமாக விளக்கமறியலில் தண்டனைக்காலத்தை அவர்கள் கழித்துவிட்டார்கள்.


எனவே இனியும் விசாரணைகளை தொடர்வது அல்லது அவர்கள் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை பொறுப்பேற்று தண்டனைகளை பெறுவது என்பது எதுவித நியாயமும் அற்றதாகவேயுள்ளது.

மீறி அப்படி செய்வது என்பது தொடர்ந்தும் நாம் பழிவாங்கப்படும் செயல்முறையாகவே இந்த நல்லாட்சியிலும் நாம் நோக்க வேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# துரிதமான வளர்ச்சிப் பாதையில் பால் உற்பத்தி

நம் நாட்டு மக்களின் உணவு நுகர்வில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் விலங்குணவு உற்பத்தி நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன விலங்கு உற்பத்தி மீது அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. விலங்கு உற்பத்திகளில் குறிப்பாக பால் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகளின் கேள்வியை திருப்திப்படுத்திக் கொள்வதற்காக பலவிதமான அபிவிருத்தி செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட, தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பலதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களினால் பால் உற்பத்தியில் ஒரு வினைத்திறனான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கீழ் காட்டப்பட்டுள்ள வரைபானது 2005 தொடக்கம் 2014 ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எமது நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த திரவப்பால் உற்பத்தியை எடுத்துக்காட்டுகின்றது. இங்கு 2011 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பால் உற்பத்தியானது ஒரு துரித வளர்ச்சியில் அதிகரித்துச் சென்றுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. 2014 ஆம் ஆண்டின் மொத்த திரவப்பால் உற்பத்தியானது 334 மில்லியன் லீற்றரை விட அதிகமாகும். இது மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் 2011 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இலங்கையின் மொத்த பால் தேவையின் 42% ஆகும். நம் நாட்டின் மொத்த திரவப்பால் உற்பத்தியில் அண்ணளவாக 80% மானவை கறவைப் பசுக்களில் இருந்தும் 20% மானவை கறவை எருமைகளில் இருந்தும் பெறப்படுகின்றன. மொத்த திரவப்பால் உற்பத்தியில் கிட்டத்தட்ட 33% மானவை மத்திய மாகாணத்தில் இருந்து பெறப்படுகின்றன. மத்திய மாகாணத்தில் உயர்ரக பசுக்கள் மற்றும் ஐரோப்பிய இனப்பசுக்களின் அதிகளவிலான சூழல் இயைபாக்கம் மற்றும் பசும்புற்களின் அதிகளவான கிடைப்பனவு என்பன மத்திய மாகாணத்தின் பால் உற்பத்தியில் அதிகளவு செல்வாக்கு செலுத்துகின்றது.




வரைபு 1 மொத்த பால் உற்பத்தி 2005-2014 (மூலம்: தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்)

உயர்ரக பால் உற்பத்திப் பசுக்களின் இறக்குமதி மற்றும் புதிய உற்பத்தி தொழில்நுட்பங்களின் முன்னேற்றங்கள் என்பன பால் உற்பத்தியின் அதீத வளர்ச்சியில் அதிகளவு பங்களிப்பை வகிக்கின்றன. ஆனாலும் எமது நாட்டில் காணப்படுகின்ற உயர்ரக பால் உற்பத்திப் பசுக்களின் பற்றாக்குறை, தரமான விலங்கு உணவின் பற்றாக்குறை, முகாமைத்துவ தொழில் நுட்பப் பாவனைக்குறைவு மற்றும் விரிவாக்கல் சேவையின் பற்றாக்குறை என்பன பால் உற்பத்தியின் வளர்ச்சியில் ஒரு தடையாகவே காணப்படுகின்றன. உட்கட்டமைப்பு வசதிகள், உணவு முகாமைத்துவம் மற்றும் தரமான விரிவாக்கல் சேவைகள் என்பன வற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சுயதேவையை ஓரளவு பூர்த்தி செய்யக்கூடியவாறு நமது உற்பத்தியை அதிகரித்துக் கொள்ள முடியும்.

நம் நாட்டைப் பொறுத்தவரையில் 90% மான பாற்பண்ணையாளர்கள் சிறிய அளவிலான முயற்சியாளர்களாகவே காணப்படுகின்றனர். சிறு பண்ணையாளர்களின் உற்பத்தியை பெருக்கவும் அவர்களின் வருமானத்தை அதிகரிக்கவும் ஏற்ற வகையில் அவர்களைப் பெரிய வர்த்தக ரீதியிலான பண்ணையாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த தகுந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முறையான மற்றும் விரைவான பால் சேகரிப்பு முறையானது பால் மிக விரைவாக எல்லா நுகர்வோரையும் சென்றடைய வழி செய்கின்றது. அத்தோடு பால் சேகரிப்பு முறையானது குறைந்தளவிலான வருமானத்தைப் பெறும் கிராமியமட்ட பால் உற்பத்தியாளர்களை மிகவும் வளர்ந்து வரும் பாற்சந்தையுடன் இணைப்பதற்கு உதவுகின்றது. அரச மற்றும் தனியார் கம்பனிகள் முறையான பால் சேகரிப்பு நடவடிக்கைகளுக்கு அதிகளவு பங்கு வகிக்கின்றன. கிராமிய மட்டத்திலான பால் சேகரிப்பானது பெரிய அளவிலான நவீன பால் சேகரிப்பு நிலையங்களை வந்தடைகின்றன. இதனால் பால் அதிகளவில் வீண்விரயமாதல் தடுக்கப்படுகின்றது. முறையான நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய குளிராக்கல் வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் (போக்குவரத்து வசதிகள்) என்பன முறையான பால் சேகரிப்பிற்கு ஒரு உந்துதலாகக் காணப்படுகின்றன.

பால் உற்பத்திப் பொருட்களின் இறக்குமதியைப் பொறுத்தவரையில் எமது நாட்டின் இறக்குமதி வர்த்தகத்தில் செல்வாக்கு செலுத்துகின்ற ஒரு முக்கிய காரணியாக பால்மா இறக்குமதி காணப்படுகின்றது.

உள்ளூர் பாலிற்கான கேள்விக்கும் அதன் உற்பத்திக்கும் இடையிலான இடைவெளியானது இறக்குமதி செய்யப்படுகின்ற பால் உற்பத்திப் பொருட்களின் மூலம் நிவர்த்தி செய்யப்படுகின்றது. உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கும் அவர்களின் உற்பத்திக்கு ஒரு கேள்வியை ஏற்படுத்திக் கொள்வதற்குமாக பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் இறக்குமதி தொடர்பிலும் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

உள்ளூர் பால் உற்பத்தியின் அபரிமித வளர்ச்சி மற்றும் பால் உற்பத்திப் பொருட்களின் சர்வதேச விலை அதிகரிப்பு என்பன காரணமாக இறக்குமதியில் வீழ்ச்சி ஏற்பட் டுள்ளது.

உயர் ரக பசுக்களின் இறக்குமதி, கால்நடை வளர்ப்போருக்கான கடன் வசதிகள், குளிரூட்டல் வசதிகள், திரவப்பால் நுகர்வின் அதிகரிப்பு மற்றும் பாலிற்கான நிர்ணய விலை அதிகரிப்பு காரணமாக பால் உற்பத்தியாளர்களின் ஆர்வம் அதிகரித்துள்ளது. இதனால் பால் உற்பத்தியானது துரித வளர்ச்சியில் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது.

எனவே விரைவில் பால் உற்பத்தியில் நாம் ஒரு ஸ்திரத் தன்மையை அடை வோம் என்பது கண்கூடு.

சுகந்தி. வைரமுத்து (M.Sc)
அபிவிருத்தி உத்தியோகத்தர்.
சமூக சேவைகள் நலன்புரி மற்றும் கால்நடைவள அபிவிருத்தி அமைச்சு

# பொருளாதார வளர்ச்சி வேகத்தை உயர்த்துவதே அரசின் எதிர்பார்ப்பு

## ஜனாதிபதி தெரிவிப்பு



**(கொழும்பு)**

**இலங்கையின் தற்போதைய 6 வீதி பொருளாதார வளர்ச்சி வேகத்தை 10 வீதம் வரை உயரத்துவதே புதிய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

உலகவங்கியின் தெற்காசிய வலயத்திற்கான உபதலைவர் எனெட் டிக்ஸனை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே ஜனாதிபதி இந்தவிடயத்தைக் கூறியு ள்ளார்.

இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக உலக வங்கி இதுவரை வழங்கியுள்ள ஒத்துழைப் புகளுக்கு இதன் போது ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

அத்துடன், புதிய அரசாங்கத்தின் எதிர்கால அபிவிருத்தி வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் உலக வங்கியின் அதிகபட்ச ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.

புதியஅரசாங்கம் என்ற வகையில், புதிதாக பலமாற்றங்களை நாட்டினுள் ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும், மக்களின் வறுமை நிலையைஒழித்தல், வருமான மட்டத்தை அதிகரித்தல் என்பன அவற்றுள்முக்கியத்துவம் பெறுவதாகவும் உலகவங்கியின் உபதலைவரிடம் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# நாடாளுமன்றத்தில் இரு எதிர்க்கட்சிகள்

நாடாளுமன்றத்தில் ஐக்கிய சுதந்திர முன்னணியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 47 பேர் எதிர்க்கட்சி வரிசையில் அமர தீர்மானித்துள்ளதால், நாடாளுமன்றத்தில் நாளை கடும் நெருக்கடியான நிலைமை ஏற்படும் என அந்த முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், நாடாளுமன்றத்தில் இரண்டு எதிர்க்கட்சிகள் செயற்பட உள்ளதாகவும் சம்பந்தன் தலைமையிலான எதிர்க்கட்சியை விட உண்மையான எதிர்க்கட்சியாக 47 பேரை கொண்ட தமது அணி செயற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் 47 பேரை கொண்ட தமது அணி சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்க்கட்சியாக ஏற்காது என்றும் தமிழர் என்பதற்காகவோ, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்பதற்காகவோ நாம் இதனை கூறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியாக சபாநாயகர் ஏற்றுக்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட 47 பேரை கொண்ட எதிரணியுள்ளது. மகிந்த ராஜபக்ஷ, தினேஷ் குணவர்தன, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் எமது அணியிலுள்ளனர்.

இதனை தவிர அரசாங்கத்தில் அமைச்சர் பதவியை வகிக்கும் நிமால் சிறிபால டி சில்வாவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவராக நியமித்தமையும் சிக்கலான நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. இந்த சிக்கல் எதிரகாலத்தில் தீர்க்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெற்றுக்கொள்வதற்காக 47 பேர் கொண்ட அணி எதிர்வரும் 2 ஆம் திகதியில் இருந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும். நாடாளுமன்றத்தில் தாம் உரை யாற்ற ஆளும் கட்சியே நேரத்தை ஒதுக்கி தர வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் ரஞ்சித் சொய்சா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மனித உரிமை ஆணையரின் கருத்துக்களோடு ஜனாதிபதியின் கருத்துக்கள் முரண்படுகின்றன

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட்ராட் அல் ஹுசைனின் கருத்துக்கும் இலங்கை ஜனாதிபதியின் கருத்துக்கும் இடையில் முரண்பாடு காணப்படுவதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வாரம் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கருத்துக்களை வெளியிட்டிருந்தார். இது தொடர்பாக பல வேறு விமர்சனங்களும், ஊடகங்களாலும், சிவில் சமூகத்தினராலும், அரசியல்வாதிகளாலும் வெளியிடப்படுகின்ற வேளையில்,

இந்நிலையில், மனித உரிமை பேரவையின் ஆணையாளரின் இலங்கை தொடர்பான போர்க்குற்ற அறிக்கையில், குற்றம் சுமத்தப்பட்டவர்களின் பெயர்கள் எவையும் குறிப்பிடப்படவில்லை.

போர்க்குற்றம் தொடர்பில் விரிவான ஆதாரங்களை கண்டுகொள்வதற்காகவே அறிக்கையில் குற்றம் செய்தோரின் பெயர்களை குறிப்பிடவில்லை என்று செய்ட் ஹுசைன் அறிக்கையை வெளியிடும்போது தெரிவித்திருந்தார்.

எனினும் குறித்த பெயர்களை வெளியிடுவதை தடுப்பதில் இலங்கை அரசாங்கத்துக்கு முழுந்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்திருந்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இருந்திருந்தால் அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டவர்களின் பெயர்களும் வெளியாகியிருக்கும் என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இதுவே பெரும் முரண்பாட்டுக்கான கருத்தாக அமைந்துள்ளது என்றும் அவ் ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையினை ஊடகங்கள் தவறான முறையில் பிரசாரம் செய்வதாகவும், இது வருத்தமளிப்பதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொன்சேகாவுக்கு நிகழ்ந்த அநீதி இனிமேல் யாருக்கும் நிகழாதாம்

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலர் வாக்குறுதி

மகிந்த அரசாங்கத்தின் காலத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றினால் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு நிகழ்ந்த அநீதி இனி யாருக்கும் நிகழாது என்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டிசில்வா தெரிவித்துள்ளார்.

முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்க காலத்தில நடைபெற்ற பாரிய முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளை முனனெடுக்கும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ரக்னா லங்கா ஆயுதப் பரிமாற் விவகாரம்' தொடர்பில் கருத்து வெளியிட்ட லெசில் டி சில்வா, ரக்னா லங்கா நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஆயுதங்களில் பெரும்பாலானவை சட்டவிரோத முறையில் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்வரும் வாரம் ஆணைக்குழு அதிரடி நடவடிக்கை ஒன்றை எடுக்கப் போவதாக தெரிவித்துள்ள லெசில் டி சில்வா, எவ்வாறெனினும் கடந்த அரசாங்கத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றினால் சரத் பொன்சேகாவுக்கு இழைக்கப்பட்ட அநீதி போன்று யாருக்கும் அநீதி இழைக்கப்படாது என்றும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே ரக்னா லங்கா ஆயுதப் பரிமாற்றம் தொடர்பில் எதிர்வரும் வாரமளவில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கைது செய்யப்படலாம் என்றும் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## செயலில் வேண்டும் கவனம்!

புத்திசாலிகள்...நாளைய வேலையை இன்றைக்கே செய்கிறார்கள். சராசரிகள். இன்றைய வேலையை இன்றைக்குச் செய்கிறார்கள் மூடர்கள்.

நேற்றைய வேலையை இன்றைக்கு செய்கிறார்கள். ஆனால் இந்தியரில் பலர்... சென்ற ஜென்மத்து வேலையை இந்த ஜென்மத்தில் செய்துகொண்டிருக்கிறார்கள்!

இத்தனைக்கும் இந்த இந்தியனின் பாரம்பரியம் எப்படிப்பட்டது? ஜனன காலத்திலேயே மரண காலத்தைப் பற்றி யோசித்து வாழ்க்கையை முன்கூட்டியே வகுத்துக் கொள்ளும் உத்வேகத்துடன் 'அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்' என்ற ஆழ்வாரின் ஆன்ம வாரிசுகள் நாம்.

இப்பிறவிதப்பிடில் எப்பிறவி வாய்க்குமோ? ஏது வருமோ என்ற (தாயுமானவர்) முன்யாக்கிரதை முனிவர்களின் வம்சா வழிகள் நாம். நாம் ஏன் இப்படி ஆனோம்?

அந்நியப் படையெடுப்புக்கள் நம்மைச் சுரண்டிய போது நமது நம்பிக்கையும் வாழ்க்கை முறையும் சுரண்டப்பட்டு விட்டனவா?

எது எப்படியோ... போனது போகட்டும். கீதை ஒருவனை இப்பிறவிக்கும் வரும் பிறவிக்கும் (வந்தால்)தயார் செய்கிறது! ஆம்...யோக வாழ்வில்,அப்பியாசம் (பயிற்சி... திரும்பத் திரும்ப பயிற்சி) கீதையில் வலியுறுத்தப்படுகிறது.

இப்பயிற்சியில் தவறு நேர்ந்தாலும்,பாதியில் சறுக்கி விழுந்தாலும், மரணம் அதற்குள் மனிதனைத் தழுவினாலும் கவலை வேண்டாம். அடுத்த பிறவியின் ஆரம்ப கட்டத்திலேயே இந்த அப்பியாசம் கைகொடுக்கும் என்கின்றான் கீதாசார்யன்.

"ஒருமையுள் தாம் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து" என்கிறது உலகப் பொதுமறை திருக்குறள்.

எனவே யோகம் பயில்வது வாழ்க்கையை விளக்கும் முதல் வழி.

யோகம் பயிலுவோர் விழிகளை மூடியும் மூடாமலும் நாசியைப் பார்த்தபடி இருக்கச் சொல்கிறது கீதை. ஏன் விழிகளை முழுவதும் மூடிவிட்டால், தூக்கம் வந்துவிடும். முழுவதும் திறந்து வைத்தால் உலக விஷயங்களில் ஈடுபட்டு விடுவோம். மூடியும் மூடாமலும் இருந்தால் விழிப்பும் அமைதியும் கைகூடும். நாள்தோறும் இப்படி காலையும் மாலையும் தியானம் செய்வது அவசியம் என்கிறார் ஆசார்ய வினோபா பாவே.

ஆனால் ஒன்று. இப்படி யோகம் பயில்வது வலது மூக்கையும் மாறிமாறி பிடித்துக் கொண்டே இருக்கத்தானா? இல்லை...இல்லை...இல்லவே இல்லை. உடலை வலுப்படுத்தி, காற்றை நெறிப்படுத்தி,மனதை வசமாக்கிக் கொண்டால் அற்புதப் பணிகள் ஆயிரம் செய்யலாம்! வசமான மனது கடிவாளமிட்டமுரட்டுக் குதிரை போல...இந்த யோகக் குதிரைகளின் பலமும் பணியும் அபாரமானவை. யோகம் கைவரப் பெற்றவர் எண்ணங்கள் நேரானவை. செயல்கள் சீரானவை. மனது சீரான மனிதர்களின் செயல்கள் மகத்தானவை.

மனது சீரான மனிதர்கள் ஒருபோதும் செயலை விடுவதே இல்லை. செயலில் பயனை மட்டுமே துறக்கிறார்கள். ஒரு செயலின் பயனைத் துறப்பவன் கர்மயோ செயலைத் துறப்பவன் தேசத்துரோகி! செயலின் பயனைத் துறப்பவர்கள், செயலை முழுமையாகச் செய்வதால் செயற்கரிய செய்கிறார்கள்.

ஆனால் செயலைப் பற்றிய அக்கறை நமக்கு இருக்கிறதா? செயலின் பயனாகிய பணம் சம்பாதித்தல் என்பது மட்டும் சமூகத்தின் எல்லாப் பக்கங்களிலும் ஜாம் ஜாம் என்று ஜக ஜோதியாக நடக்கிறது. இது தவறல்லவா?

எல்லோருக்கும் சம்பளத்திலும் சன்மானத்திலும் இருக்கும் அதே அளவு ஆர்வம்,பணியிலும் செயலிலும் இருந்திருந்தால் ,இன்றைக்கு எங்கள் நாடு இப்படி இருந்திருக்குமா? உலக நாடுகளின் தலைமையகம் அல்லவா இருந்திருக்கும்! வாருங்கள்... செயலில் அக்கறை காட்டுவோம்.செயலின் பயனைப் பற்றிய கவலையை ஒதுக்கி வைப்போம்.

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 18.09.2015~17.10.2015

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## சனிபகவானை வழிபாட்டால் சகல பாக்கியமும் கிடைக்கும்



**சனி பகவானை வழிபட்டால் சகல பாக்கியமும் கிடைக்கும்! மற்றவர்களின் மனதைப் புரிந்து கொண்டு அதன்படி செயற்படும் சிம்ம இராசி நேயர்களே!**

புரட்டாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, குருமங்கள யோகம் இருப்பதால் குடும்பத்தில் சுபகாரிய நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மீண்டும் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் வந்துவிட்டதால் அசௌகரியங்களும், ஆரோக்கியப் பாதிப்புகளும் வரத்தான் செய்யும். இருப்பினும் தன்னம்பிக்கையும், தளராத மனமும் பெற்ற உங்களுக்கு எந்த நாளையும் இனிய நாளாக மாற்றிக் கொள்ளும் ஆற்றல் உண்டு.

தனஸ்தானத்தில் சூரியனோடு ராகு இணைந்திருப்பதால்ஒரு தொகை செலவழிந்த பின்னரே அடுத்த தொகை கரங்களில் புரளும். புதன் வக்ரம் பெற்றிருப்பது அவ்வளவு நல்லதல்ல. தனலாபாதிபதியான புதன் வக்ரம் பெறும்பொழுது, சில சமயங்களில் கடன் வாங்கும் சூழ்நிலையும், ஒரு சில சமயங்களில் கடன் கொடுக்கும் சூழ்நிலையும் உருவாகும். ஜாதகப் பலன்களை சாதகமாய் அமைத்துக் கொள்ள ஆன்மிகப் பயணங்களை மேற்கொள்வீர்கள். ஒருசிலருக்கு கோவில் விழாக்களை முன்னின்று நடத்தும் வாய்ப்பு உருவாகலாம்.

டிசம்பர் 2014 இல் நான்காமிடத்திற்கு வந்த சனி பகவான் மீண்டும் மூன்றாமிடத்திற்கு வந்து சிலமாதங்கள் இருந்து இப்பொழுது மறுபடியும் அர்த்தாஷ்டமச் சனியாகச் சஞ்சரிக்கிறார்கள். பழைய அளவிற்கு கெடு பலன்கள் ஏற்படாது என்றாலும், ஆரோக்கியத் தொல்லை மட்டும் தலைகாட்டும். ரத்த அழுத்தம், நீரிழிவு நோய், எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் ஒரு சிலருக்கு பாதிப்புகள் உருவாகலாம். அவர்கள் மாற்று மருத்துவத்தை மேற்கொள்வதோடு, சுயஜாதக ரீதியாக பலன்களை அறிந்து பரிகாரம் செய்தால் மனநிம்மதியும், மகிழ்ச்சியான வாழ்க்கையும் அமையும்.

பொதுவாக சனி பலம்பெறும் இந்த நேரத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து சனி பகவானையும், அனுமனையும் வழிபட்டு வருவது நல்லது. மேலும் அன்னதானங்களில் ஈடுபட்டால் எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும்.

**புதனின் வக்ர நிவர்த்தியும், பெயர்ச்சியும்!**

செப்டம்பர் 25 ஆம் திகதி புதன் வக்ர நிவர்த்தியாகிறார். தன லாபாதிபதியான புதன் வக்ர நிவர்த்தியாவதால் பொருளாதார நிலை உயரும். தொழிலில் எதிர்பார்த்த படியே லாபம் கிடைக்கும்.




தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். நல்லவர்களின் சினேகத்தால் நலம் காண்பீர்கள். கூட்டுக் குடும்பத்தில் இருந்த தகராறுகள் அகலும். குல தெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். அக்டோபர் 4 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் உச்சம் பெறப் போகிறார். இக்காலம் ஒரு பொற் காலமாகும். வள்ளல்களின் ஒத்துழைப்பும், வங்கிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கும். நூதனப் பொருள்சேர்க்கை உண்டு. குழந்தைகளின் முன்னேற்றம் கருதி செலவிட்டு மகிழ்வீர்கள்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 28 ஆம் திகதி சிம்ம ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 3, 10இற்கு அதிபதி உங்கள் ராசியில் சஞ்சரிக்கும் பொழுது விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டே இருக்கும். பெண் வழிப்பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். தொழிலில் புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்வீர்கள். வீடு வாங்க எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொதுவாக சுக்ர பலம் மேலோங்கி இருக்கும் இந்த நேரத்தில் யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும். இம்மாதம் சனி பகவான் வழிபாடு சஞ்சலம் தீர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய மாதமாகும். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் மீண்டும் தொடங்குகிறது. வாங்கல்- கொடுக்கல்களில் கவனம் தேவை. கணவன்- மனைவிக்குள் அனுசரித்து செல்வது நல்லது. விரயங்களைக் குறைத்துக் கொள்ள விழிப்புணர்ச்சி தேவை. சங்கடஹர சதுர்த்தி விரதம் சங்கடங்களைத் தீர்க்கும். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளை ஏற்கும் சூழ்நிலை அமையும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

## பொறுமையாக இருந்தால் பெருமை வந்து சேரும்!



**பொறுமையாக இருந்தால் பெருமை வந்து சேரும்! எல்லோருக்கும் நல்லவராக நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்பும் கன்னி இராசி நேயர்களே!**

புரட்டாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் புதன் வக்ரத்தில் இருக்கிறார். ராசிநாதனின் வக்ர இயக்க காலத்தில் வளர்ச்சியைக் காட்டிலும் தளர்ச்சியே கூடுதலாக இருக்கும்.

குடும்பச் சுமை கூடுகிறதே என்று கவலைப்படுவீர்கள். கொடுக்கல், வாங்கல்களில் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடும். கடுமையாக முயற்சித்தும் காரியங்கள் கடைசி நேரத்திலேயே கைகூடும்.

தன ஸ்தானத்தில் லாபாதிபதி சந்திரன் வீற்றிருக்கிறார். எனவே, பொருளாதார பற்றாக்குறையை எப்படியாவது சமாளித்து விடுவீர்கள். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். அன்பு நண்பர்கள் ஆதரவுக் கரம் நீட்ட முன்வருவர். அதே நேரத்தில் அடிமைத் தொழில் சுயதொழிலாக மாறும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து போட்டிக்கடை விரிக்காமல் பார்த்துக் கொள்வர்.

ஜென்ம ராசியில் சூரியன் ராகு சேர்க்கை இருப்பது அவ்வளவு நல்லதல்ல. உலகத்தை இருள் மயமாக்கும் பாம்பு கிரகங்கள் உங்கள் ராசியில் சஞ்சரிக்கும் பொழுது ஒளிமயமான எதிர்காலத்தை நீங்கள் அமைத்துக்கொள்ள அதற்குரிய பரிகாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக சர்ப்ப சாந்தி செய்வது நல்லது. அப்பொழுதுதான் தடைகள் அகலும். தனவரவு தாராளமாக வந்து சேரும். இடம், பூமியால் ஏற்பட்ட பிரச்சினைகள் மாறும்.

யோகபலம் பெற்ற நாளில் அனுகூலம் தரும் கிரக ஆதிக்கம் நிறைந்த கோவில்களில் முறையாக வழிபாடுகளை மேற்கொண்டால் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க இயலும்.

இம்மாதம் விரய ஸ்தானம் பலம் பெற்றிருப்பதாலும், விரயாதிபதி சூரியன் உங்கள் ராசியிலேயே சஞ்சரிப்பதாலும் இல்லத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வது நல்லது. பழைய நகைகளைக் கொடுத்துவிட்டுப் புதிய நகைகளை வாங்கிப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

பழைய இடங்களைக் கொடுத்து விட்டுப் புதிய இடங்களை வாங்கி வீடு கட்ட வேண்டும் என்று ஆர்வம் காட்டுவீர்கள். மூன்றில் சனி இருப்பதால் சகோதர சச்சரவுகள் வராமல் பார்த்துக் கொள்வது நல்லது.

வழக்கு களில் திசைதிருப்பம் ஏற்படும். சப்தம கேதுவால் வாழ்க்கைத் துணைவழியே அப் போதைக்கப் போது பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். எனவே பொறுமையைக் கடைப்பிடித்தால் பெருமை வந்து சேரும்.

**புதனின் வக்ர நிவர்த்தியும், பெயர்ச்சியும்!**

உங்கள் ராசிநாதனான புதன், செப்டம்பர் 25 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். இது நன்மை என்றாலும் கூட விரய ஸ்தானத்தில் அல்லவா இருக்கிறார். எனவே விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். நிலபுலன்கள் வாங்குவதிலும், விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதிலும் பணத்தைச் செலவிட முன்வருவீர்கள். குறிப்பாக ஆடை, ஆபரணங்கள், வீட்டிற்குத் தேவையான மின்சாதனப் பொருட்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும்.

பாதியில் நின்ற கட்டடப் பணியை மீதியும் தொடரலாம். வீட்டை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். அக்டோபர் 4 ஆம் திகதி உங்கள் ராசியிலேயே புதன் உச்சம் பெறப் போகிறார். இக்காலம் ஒரு பொற்காலம் ஆகும்.




தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படு த்தும்.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 28 ஆம் திகதி சுக்ரன் சிம்மத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதி 12 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல.

பெற்றோர்களின் விரோதங்களுக்கு ஆளாக நேரிடலாம்.

பாகப்பிரிவினைகளில் முறையான பங்கீடு கிடைப்பது அரிது. குடும்பச்சுமை கூடுதலாகவே இருக்கும். கண், காது போன்றவற்றில் ஏற்பட்ட நோய்கள் அகலும்.

ஜென்ம ராகுவும், சப்தம கேதுவும் பலம் பெற்று விளங்கும் இந்த நேரத்தில் எதைச் செய்தாலும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. இம்மாதம் சர்ப்ப கிரக வழிபாடு சந்தோஷத்தை வழங்கும். புதன்தோறும் பெருமாள் வழிபாட்டில் ஈடுபாடு செலுத்துவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வரவும், செலவும் சமமாகும். உங்கள் பெயரிலேயே சொத்துக்களை வாங்க குடும்ப உறுப்பினர்கள் முன்வருவர்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இட மாற்றம், இலாகா மாற்றம் ஏற்படலாம். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை குறைவாக இருந்தாலும் நண்பர்களை வரவழைத்துக் கொள்ள இயலும்.

குழந்தைகளுக்கு தேவையான ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் செலுத்துவீர்கள். அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

புதன்கிழமை விரதமிருந்து பொன்னான குலம் படைத்த ராமபிரான் வழிபாட்டையும் மேற்கொண்டால் எந்நாளும் நன்மை கிட்டும்.

(தொடரும்)

# கதிர்காமரை பின்பற்றி நடந்தால் சம்பந்தனின் பதவிக்கு மரியாதை

## பிரசன்ன ரணதுங்க அட்வைஸ்

(கொழும்பு)

**முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் வழியைப் பின்பற்றி நடந்தால் அனைத்துத் தரப்பினரும் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு மரியாதை அளிப்பார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்**



திவயின வார இதழின் அரசியல் பத்தியொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலில் மேல்மாகாண முன்னாள் முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க,

கடந்த பொதுத் தேர்தலின் போது வாக்களித்த மககள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்றி, அதனூடாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை.

பொதுத் தேர்தலில் மகிந்த மட்டுமன்றி ரணில் விக்கிரமசிங்கவின் அணியும் தோல்வியடைந்தது.

வெற்றி பெற்றது மைத்திரிபால மட்டும் தான். அதன் காரணமாகவே அவர் இரு கட்சிகளையும் இணைத்துக் கொண்டு அரசாங்கத்தை அமைத்துக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு உதவியதன் நன்றிக்கடனாகவே அவர் சுதந்திரக் கட்சியைப் புறக்கணித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கியுள்ளார். அதன் காரணமாகவே ஜே.வி.பிக்கும் எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் செயற்படும் கட்சியின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். இனியும் அவர் அவ்வாறு செயற்பட முடியாது.

தவிரவும் அவரது கட்சி மற்றும் அக்கட்சி முக்கியஸ்தர்கள் போன்று பிரிவினைவாதம், சமஷ்டிக் கோரிக்கை எதுவும் முன்வைக்கவும் முடியாது. இனி அவர் முழு நாட்டினதும் பொதுவான அரசியல்வாதியாக செயற்பட வேண்டும்.

மறைந்த முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட்டால் சம்பந்தனுக்கு அனைத்துத் தரப்பினரதும் ஆதரவு கிடைக்கும். நாங்களும் வேற்றுமைகளை மறந்து அவரின் தலைமைப் பதவியின் கீழ் எதிர்க்கட்சியில் செயற்படத் தயார் என்றும் பிரசன்ன ரணதுங்க தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 180 | 120 |
| தக்காளி | 80 | 100 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 70 | 80 | 80 | 60 |
| கரட் | 120 | 120 | 80 | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 110 | 120 |
| பாகற்காய் | 90 | 80 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 60 | 60 | 70 | 70 |
| லீக்ஸ் | 70 | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 40 | 40 |
| கறிமிளகாய் | 90 | 120 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 120 | 120 |
| போஞ்சி | 160 | 160 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | — | 70 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 160 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40-45 | 50 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — |
| வெங்காயப்பூ | — | 200 | 180 | 140 |
| முள்ளங்கி | 60 | 80 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 495

Search for people, places and things — Nagendram Home


அரவித்தன் அரவி




சங்கர் நிறோ




கண்ணன் பிருந்தா




சதீஸ் சோபா




நல ரசிகன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தனது ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்துவதற்கு இந்தியாவின் உதவி இலங்கைக்குத் தேவை

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உதவியுடன் இலங்கையில் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை அமைப்பதற்கு அமெரிக்கா உடன்பட்டுள்ளது. இது தொடர்பில் தனது ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்துவதற்கு இந்தியாவின் உதவி இலங்கைக்குத் தேவைப்படுகிறது.

**இவ்வாறு dailyo ஊடகத்தில் கேணல் ஹரிகரன் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.**

இலங்கையின் பிரதமர் ரணில விக்கிரமசிங்க, புதுடில்லி அரசியல் வட்டாரத்திற்கு அந்நியமானவரோ அல்லது இந்திய அரசாங்கத்தின் மத்தியில் பரீச்சயமற்ற ஒருவரோ அல்லர். எனினும், கடந்த ஓராண்டாக, ரணில் விக்கிரமசிங்க இந்திய அரசியலில் வரவேற்கப்படுகின்ற ஒருவராகக் காணப்படுகிறார்.

இலங்கையின் தற்போதைய பிரதமர் அரசியலில் பெற்றுக் கொண்ட வெற்றிகளை விட இவர் சந்தித்த தோல்விகளே அதிகம். ஆனாலும் இவர் வெற்றிகரமாக தனது நாட்டில் இடம்பெறவிருந்த அரசியல் சதியை முறியடித்திருந்தார். இதனால் இவர் தற்போது பெரிதும் வரவேற்கப்படுகின்ற ஒரு அரசியற் தலைவராக இடம்பிடித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உதவியுடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இரண்டு தடவைக்கும் மேலும் ஜனாதிபதியாக இருக்க முடியும் என்கின்ற அரசியல் சீர்திருத்தத்தை அரசியல் சாசனத்திலிருந்து நீக்கிய பெருமை ரணில் விக்கிரமசிங்கவைச் சாரும்.

கடந்த ஜனவரியில் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ச ஏழு மாதங்களின் பின்னர் தனது விசுவாசிகளின் உதவியுடன் மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். இதன் மூலம் மீண்டும் இலங்கையின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு மகிந்த முனைந்தார். ஆனாலும் இந்த முயற்சியையும் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் மிகவும் வெற்றிகரமாக முறியடித்தனர்.

இதன் பெறுபேறாக, கடந்த ஒரு ஆண்டு காலத்தில் இரண்டு தடவைகள் இலங்கையின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார். பல்வேறு அரசியற் தடைகள் இருப்பினும், விக்கிரமசிங்க-சிறிசேன கூட்டணி மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் விதமாக சில நகர்வுகளை மேற்கொண்டுள்ளனர். நிறைவேற்று ஜனாதிபதி கொண்டிருந்த சில அதிகாரங்கள் தற்போது நாடாளுமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளமை, பிரதமருக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமை, ஊழல் மற்றும் மோசடி நிறைந்த நிர்வாகம் நிர்மூலமாக்கப்பட்டுள்ளமை உட்பட பல்வேறு அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ராஜபக்சவின் எதேச்சதிகார ஆட்சியால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் களங்கப்படுத்தப்பட்ட இலங்கையின் நல்லாட்சியானது தற்போது சிறிசேன-விக்கிரமசிங்க ஆகிய இரு தலைவர்களாலும் மீளவும் நிலைநிறுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் தேசிய அரசாங்கத்திற்குத் தலைமை தாங்குகின்றார். 1977 இன் பின்னர் தற்போது முதன் முறையாக, ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டும் இணைந்து தேசிய அரசாங்கத்தை நிறுவியுள்ளன. இதன்மூலம் நாட்டில் ஒற்றுமை, சமாதானம் மற்றும் அமைதி போன்ற சூழலில் அபிவிருத்தியை முன்னுரிமைப்படுத்தி தேசிய நிகழ்ச்சி நிரல் ஒன்றை நிறுவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்ததன் மூலம் நாட்டில் பிரபலம் பெற்றிருந்த மகிந்த ராஜபக்ச அமைதியை உருவாக்குவதில் தோல்வியடைந்துள்ளார். போருக்குப் பின்னான ஐந்து ஆண்டுகால அமைதிச் சூழலில் தனக்கான ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்துவதிலேயே மகிந்த ராஜபக்ச குறியாக இருந்தார்.

இதன் பெறுபேறாக, இலங்கையின் சமூக-அரசியல் சூழலானது கசப்புணர்வு, விரோதப் போக்கு, அவநம்பிக்கை மற்றும் இன-மத எதிர்ப்புக்கள் மற்றும் கலவரங்களால் நாசமாக்கப்பட்டது.

இலங்கையின் அரசியல் சூழலில் பரவலாக ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெற்றிருப்பினும், அரசியல் சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் ஒன்றை வரையறுப்பதற்கான வாய்ப்பை தற்போதைய அரசாங்கம் பயன்படுத்தியுள்ளது. ஆனால் இலங்கையின் பிரதமராகப் பதவியேற்ற பின்னர் தற்போது புதுடில்லிக்கான தனது சுற்றுப் பயணத்தை ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ளமையானது முன்னரை விட இவருக்கு மிக அதிகளவான நம்பிக்கையை வழங்கியுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியத் தலைவர்களுக்கிடையில் முன்னரைவிடத் தற்போது அதிகளவு தொடர்பாடல்கள் ஏற்பட்டுள்ளன. ராஜபக்ச ஆட்சியில் இருந்த போது நாட்டின் பாதுகாப்பு மூலோபாயம் மற்றும் வர்த்தகம் போன்ற துறைகளில் சீனா தனது செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. ஆனால் தற்போது விக்கிரமசிங்கவின் நிகழ்ச்சி நிரலானது சீனா நோக்கிய இலங்கையின் வெளியுறவுக் கோட்பாட்டை மாற்றியமைப்பதாக அமைந்துள்ளது.

ஆகவே சில மாதங்களுக்கு முன்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கான தனது சுற்றுப்பயணத்தை மேற்கொண்டதுடன் அதன்மூலம் இலங்கையுடன் விரிவான உறவைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட போது அதனை விக்கிரமசிங்க-சிறிசேன கூட்டணி வரவேற்றதில் எவ்வித ஆச்சரியமுமில்லை.

இவ்விரு நாடுகளுக்கும் இடையில் மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட விரிசல்களை சீர் செய்வதற்கான மோடியின் விருப்பத்திற்கு விக்கிரமசிங்க-சிறிசேன கூட்டு அரசாங்கம் ஒப்புதல் வழங்கியது. ஆகவே இலங்கையின் பிரதமர் புதுடில்லிக்கான தனது பயணத்தை மேற்கொண்டுள்ளமையானது இந்திய அரசியல் வட்டாரத்தால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது.

ஏனெனில் ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தை விடத் தற்போதுள்ள இலங்கை அரசாங்கமானது புதுடில்லியின் நம்பிக்கையை அதிகம் பெற்றுள்ளது.

இந்தியா மற்றும் அமெரிக்கா உட்பட்ட மேற்குலகின் எதிர்பார்ப்பிற்கு ஏற்பச் செயற்படுவதற்கு விக்கிரமசிங்க மற்றும் சிறிசேன ஆகியோர் தயாராக உள்ளனர். இது இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குத் துணை புரியும்.

ராஜபக்சவின் அரசாங்கத்தால் போரின் போதும் அதன் பின்னரும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்தியா மற்றும் மேற்குலகம் அழுத்தம் கொடுத்த போது, அதனை முறியடிப்பதற்காக ராஜபக்ச பல்வேறு சதித் திட்டங்களை மேற்கொண்டார். இது இந்தியா மற்றும் மேற்குலகை எரிச்சலடையச் செய்தது.





ராஜபக்ச தனது அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்காக, சிங்களத் தேசியவாதம் மற்றும் சீனாவின் தலையீட்டைப் பெரிதும் வரவேற்றார்.

இதேபோன்று, தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அரசியல் கலந்துரையாடல்களை மகிந்த ராஜபக்ச புறந்தள்ளினார்.

தமிழ் மக்களின நீண்டகால அரசியற் கோரிக் கைகளைப் பரிசீலிக்காது அதனை மகிந்த ராஜபக்ச தட்டிக்கழித்தார்.

இது இந்தியாவின் தமிழ் நாட்டு அரசியலில் அதிகம் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இது இந்திய மத்திய அரசாங்கத்திற்கு பெரும் அழுத்தமாக இருந்தது.

இலங்கையுடன் வெற்றிகரமான நட்புறவைக் கட்டியெழுப்ப வேண்டும் என்கின்ற முயற்சிகளில் இந்தியா ஈடுபட்டிருந்த போதும் இலங்கையின் முன்னாள் அரசாங்கம் தமிழ் மக்களின் கோரிக்கைகளைத் தட்டிக்கழித்தமையானது இதன் உள்நாட்டில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது.

இப் பலவீனத்தை சீனா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இலங்கைக்குள் நுழைந்து கொண்டது. **(தொடரும்)**

# மென்பொருட்கள் சேவைகள் சங்க தலைவரானார் மனோ சேகரம்



99X Technologyஇன் இணை ஸ்தாபகரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மனோ சேகரம், SLASSCOMஇன் 2015/16 பருவ காலத்துக்கான தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த வாரம இடம்பெற்ற SLASSCOM(Srilanka Association of Software and Service Companies) வருடாந்த பொது ஒன்றுகூடலின்போது இந்த நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

தகவல் தொழில்நுட்பம்/மென்பொருள் முகாமைத்துவம் ஆகியவற்றில் சேகரம் சுமார் 25 வருட கால சர்வதேச அனுபவத்தைக் கொண்டுள்ளார். அத்துடன், இவர இலங்கையின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் BPM ஆகிய துறைகளில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பிரதிநிதித் துவத்தை வழங்கியுள்ளார்.

SLASSCOM இன் தலைவராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் BPM துறை தொடர்பில் தமது எதிர்கால நோக்கங்கள் பற்றிய தெளிவுபடுத்தலை வருடாந்த பொது ஒன்று கூடலில் அவர் வழங்கியிருந்தார். இதன் போது, அறிவுசார் வருமானத்தை கட்டியெழுப்புவதற்கு தகவல் தொழில்நுட்பத்துறையின் பங்களிப்பு எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்க வேண்டும் என்பது பற்றியும், அதன் மூலமாக இலங்கையை மத்தியளவு வருமானமீட்டும் நாடாக மாற்றியமைத்துக்கொள்ளவும் உறுதுணையாக அமைந்திருக்கும் என்றார்.

கல்விமான்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வது தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து சேகரம் கருத்து தெரிவிக்கையில், "தகவல் தொடர்பாடல் தொழிலநுட்பத்துறைக்கு இலங்கை சொத்துக்களின் உரிமையாண்மையைக கொண்ட செயலணியை உருவாக்க வேண்டும், இதன் மூலமாக துறையில் கல்விமான்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதை தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். வெளிநாடுகளில் இவர்கள் எதிர்பார்த்துச் செல்லும் அதேசூழலை இலங்கையில் எம்மால் ஏற்படுத்த முடியுமாயின், அவர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதை கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும். ஒழுங்குபடுத்துநர்களுடன் கைகோர்த்து, தகவல் தொழில்நுட்பம் மற்றும் BPM துறைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கு வீடமைப்பு மற்றும் இதர நிலையான சொத்துக்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்" என்றார்.

அவர் தொடர்ந்து விளக்கமளிக்கையில், "இலங்கையின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் BPM துறையை மேல் மாகாணத்துக்கு வெளியே கொண்டு செல்ல வேண்டிய தேவை காணப்படுகிறது. இதன் மூலமாக, நாட்டில் தொழில்நுட்ப கட்டமைப்பை பரந்தளவு விஸ்தரித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். தொழில்முயற்சி அடிப்படையிலான சூழல் கட்டமைப்பையும் ஏற்படுத் தககூடியதாக இருக்கும். 2022-ம் ஆணடளவில் 1000 புதிய நிறுவனங்களை நிறுவும் செயற்பாட்டுக்கு சிறந்த அடித்தளமாக அமையும்" என்றார்.

இலங்கையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் BPM துறையின் தேசிய சம்மேளனமாக SLASSCOM திகழ்கிறது. அத்துடன், இலங்கையின் வியாபார மற்றும் வர்த்தக செயற்பாடுகளை ஊக்குவித்தல், கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தல், ஆய்வுகள் மற்றும் புத்தாக்கம் போன்றவற்றுக்கான ஊக்குவிப்புகள், தேசிய கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதற்கான உதவிகள் போன்றன வழங்கப்படுகின்றன. 2022 இல் 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான தொழிற்துறையை உருவாக்குவதை நோக்காக கொண்டுள்ளதுடன், அதனூடாக 200,000 நேரடி தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தவும், 1000 ஆரம்ப நிறுவனங்களையும் நிறுவவும் திட்டமிட்டுள்ளது

# சிறந்த தொழில் வழங்குநர் கொமர்சல் வங்கிக்கு கௌரவம்



இலங்கையின் மிகசிறந்த தொழில் வழங்குநர்களில் ஒருவர்மற்றும்மிகச சிறந்த மனித வள செயற்பாட்டாளர் என்ற கொமர்ஷல் வங்கியின் கீர்த்தி நாமம் மீண்டும் தக்கவைக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் இடம்பெற்ற 6-வது சிறந்த தொழில் வழங்குநர் விருது வழங்கும் விழாவில் 2 கீர்த்திமிக்க விருதுகளை வென்றுள்ளதன் மூலம் இந்த கௌரவம் நிலைநாட்டப்பட்டுள்ளது.

உலக மனிதவள காங்கிரஸ், ஸ்டார்ஸ் ஒப் இன்டஸ்ட்ரி குறூப் என பனவற்றின் ஒத்துழைப்போடு எம்ப்லோயர் பிறேன்டிங் இன்ஸ்டிடியூட் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த கோலாகல விழாவில் சிறந்த தொழில் வழங்குநருக்கான முத்திரை விருது மற்றும் ஆற்றல் முகாமைத் துவ விருது என 2 பிரதான விருதுகள் கொமர்ஷல் வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளன.

கொமர்ஷல் வங்கியின் மனித வள பிரிவு பிரதிபொது முகாமையாளர் இசுறு திலகவர்தன இந்த விருதுகளைப் பெற்றுக் கொண்டார்.

இந்த சிறப்புமிக்க விருதைபெற்றுக கொண்டமைக்காக வங்கியின் மனித வள பிரிவுக்கு பாராட்டு தெரிவித்த முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜெகன் துரைரட்ணம் "இலங்கையின் மிகப்பெரியமற்றும் மிகவும்உறுதியான தனியார்வங்கி என்ற வகையில் எமது நிலையை அர்ப்ப ணம் மிக்க ஒரு ஊழியர்படையும்தொழிலை நேசிக்கும் அதிஉயர் தொழிற்சார் பண்பும் கொண்ட ஒருபடையும் இன்றி நாம் அடைந்திருக்கமுடியாது.

திறமை உள்ளவர்களைக் கவருவது தொடர்ந்து அவர்களை தக்கவைத்துக் கொள்வது மற்றும் முகாமைத்துவம் செய்வது என்பன எமது வெற்றிக்கு முக்கிய விடயங்களாக உள்ளன. இந்த பிரிவுகளில எமது மனிதவள பிரிவின் அர்ப்பணம் மிக்க செயற்பாட்டுக்கு இது எடுத்துக் காட்டாக உள்ளது" என்றார்.

கொமர்ஷல் வங்கி அதன் ஊழியர்களை பயிற்றுவித்து சிரேஷ்ட பதவிகளை அவர்களுக்கு உரிய காலப் பகுதியில் வழங்கி நீண்ட காலம் அவர்கள் தம்மோடு இணைந்திரு க்க வேண்டும். என்ற கொள்கையைக் கொண்டுள்ளது.

வங்கி அதற்கே உரிய பிரத்தியேகமான ஊழியர் அபிவிருத்தி நிலையத்தைக் கொண்டுள்ளது. அது தேவையான உள்ளக பயிற்சிகளை வழங்குகின்றது. சகல மட்டங்களிலும் உள்ள ஊழியர்களுக்கு பயிற்சிகளை அளிப்பதற்காக வெளியிலிருந்து வளவாளர்களின் சேவைகளும் பெறப்படுகின்றன.

ஊழியர்கள் தமது தொழில்சார் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் தேவையான முன்னேற்றகரமான பயிற்சிகள் இங்கு வழங்கப்படுகின்றன. வங்கியில் தற்போது உள்ள சிரேஷ்ட மட்ட முகாமைத்துவ நிலை அதிகாரிகள் பாலர் பாடசாலையை விட்டு விலகிய கையோடு வங்கியில் இணைந்து கொண்டவர்கள்.




# சுற்றுலா செல்லிடமாக இலங்கை தெரிவு

பிரித்தானியர்களுக்கு அவர்களது விடுமுறையை களிப்பதற்கு உலகின் சிறந்த பகுதியாக இலங்கையை, பிரித்தானிய சஞ்சிகையான சன்டே ரைம்ஸ் அறிவித்துள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியாகியிருந்த சஞ்சிகையில் இரு ஆக்கங்கள் இலங்கையின் சுற்றுலாப்பகுதிகளை அடையாளம் காண்பித்திருந்ததுடன், இந்த குளிர் காலப்பகுதியில் தமது சுற்றுலாவை மேற்கொள்வதற்கு இலங்கையின் 10 பகுதிகளையும் குறிப்பிட்டிருந்தது.

அந்த ஆக்கத்தில் இலங்கையின் தேயிலை மற்றும் கடற்கரைகளின் சிறப்பம்சங்கள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. இலங்கையின் நகரங்களுக்கு மேலாக, பார்படோஸ், சீஷெல்ஸ், சென்.லுசியா, கோவா, மொரிஷியஸ், மெக்சிகோ, பிரேசில் மற்றும் கேப் டவுன் ஆகிய நகரங்கள் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டிருந்தன. நடப்பு முதல் 8 மாதங்களில் பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 13 சதவீத அதிகரிப்பை பதிவு செய்திருந்தது. ஓகஸ்ட் மாத நிறைவில் மொத்தமாக 111,131 பேர் சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வருகை தந்திருந்ததுடன், ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் 17,908 பேர் இலங்கைக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வர்த்தக நடவடிக்கை ஆரம்பிக்க உகந்த மையமாக இலங்கை

வியாபாரமொன்றை ஆரம்பிப்பது தொடர்பில் நீங்கள் நீண்ட திட்டங்களை கொண்டிருந்த போதிலும், அதற்கு வாய்ப்பான சூழல்கள் அமைந்துள்ளதா என்பது பற்றி சிந்தித்ததுண்டா?

அல்லது நீங்கள் ஒரு தொழிலை மேற்கொண்டு வரும் அதே வேளை, உங்களுக்கென வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்கு இதுதான் சரியான தருணம் என்பது பற்றிய தீர்மானத்தை மேற்கொள்ள முடியவில்லையா? ஊடகம் ஒன்று இலங்கையில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு இது தகுந்த தருணமா என வினவியபோது, ஏஞ்சல் முதலீட்டாளரும் Stax Inc. இன் கொழும்பு அலுவலக முகாமைத்துவ பணிப்பாளருமான ருவிந்து பீரிஸ் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார். "ஆரம்ப நிலை கட்டமைப்புகள் அனைத்தும் புதிய வியாபார முயற்சிகளுக்கு சாதகமாகவேயுள்ளன.

சந்தையில் ஒன்றிணைக்கப்பட்ட வியாபாரத் தீர்வுகளை வழங்கும் பெருமளவான சேவை வழங்குநர்கள் காணப்படுகின்றனர். குறிப்பாக, எந்தவொரு வியாபாரத்தையும் முன்னெடுத்துச் செல்வதற்கான eZ Cash போன்ற புதிய நிதிக் கொடுக்கல் வாங்கல் முறைகள் காணப்படுகின்றன.

இதுதவிர சூழலியல் சார்ந்த பொருளாதார அனுகூலங்களும் காணப்படுகின்றன. இதனால் பிராந்தியத்தில் வியாபார ஆரம்பங்களுக்கான மையமாக திகழக்கூடிய நிலையில் இலங்கை காணப்படுகின்றது"

வியாபார செயற்பாடுகளை பன்முகப்படுத்தி இலங்கை புத்தாக்கமான தொழில்நுட்ப மையமாக வளர்ச்சியடைவதற்கான நிதி மற்றும் இதர வளங்களை திரட்டுவதற்கு அரசாங்கம் மற்றும் தொழிற்துறைகள் முனைப்புடன் செயற்பட்டுவரும் அதேவேளை, இலங்கை தொடர்பிலான சர்வதேச அபிப்பிராயமும் மாற்றமடைந்த வண்ணமுள்ளது.

ஆரம்ப கட்ட சூழல்கட்டமைப்பு தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து வரும் நிலையில், இலங்கை மற்றுமொரு சிலிக்கன் பள்ளத்தாக்காக கூட மாற்றமடையக்கூடிய நிலவரம் காணப்படுகின்றது.

ருவிந்து தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

"சமாதானத்தின் அனுகூலத்தை கவனத்தில் கொள்ளும் போது, வெளிநாடுகளில் தாம் பெற்றுக் கொண்ட பெறுமதியான அனுபவத்துடன், மீளத்திரும்புவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை காணக்கூடியதாகவுள்ளது என ருவிந்து மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 137.91 | 142.79 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 213.95 | 222.98 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 156.31 | 163.62 |
| சுவிஸ் பிராங் | 142.60 | 149.58 |
| கனேடிய டொலர் | 103.94 | 109.01 |
| அவுஸ்திரேலிய டொலர் | 98.16 | 103.48 |
| சிங்கப்பூர் டொலர் | 98.17 | 102.65 |
| ஜப்பான் யென் | 1.14 | 1.19 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 38.33 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,215.11 | 7,153.49 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,957.83 | 3,914.27 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 2,740.474

**உயர்வடைந்த பங்குகள்(ரூ):** புளூ டைமன்ட்ஸ்(X)(0.60),பிசி பார்மா(0.90), சிஜஎப்எல்(0.90),பலாங்கொட(22.40),நமுனுகுல(73.50).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ):** பிசி ஹவுஸ்(0.10),ஜே.கே.எச்.(W)(17.20), களனி வேலி(60.50),கெல்சே(50.40),எல்.எம்.எப்(150.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk




# சிறுவர் அரங்கம்

1245



# "மக்கு மாடசாமி"



அந்தப் பள்ளிக்கூடத்தில் பத்தாம் வகுப்பு 'பி' பிரிவில் சுமார் 50 மாணவர்கள் இருந்தனர்.

மாடசாமியும் அந்த வகுப்புதான். அவன் எப்போதுமே கடைசி ரேங்க் வாங்கும் மாணவன்.

எல்லாப் பாடங்களிலும் குறைந்தபட்ச மதிப்பெண் பெற்றுதான் பாஸ் ஆவான். சமயங்களில் ஒன்றிரண்டு பாடங்களில் பெயில் ஆகவும் செய்வான்.

மாடசாமியின் அப்பா ஒரு விவசாயி. தனது பையனை எப்படியாவது படிக்க வைத்து வேலைக்கு அனுப்ப வேண்டும் என்று ஆசைப்பட்டுதான் இந்தப் பள்ளியில் அவனைச் சேர்த்திருந்தார்.

அவனும் கஷ்டப்பட்டுத்தான் படிக்கிறான்.

இருந்தாலும் சமயங்களில் இப்படி ஆகிவிடுகிறது.

படிப்பு சரியாக வராவிட்டாலும் மாடசாமி காலையும் மாலையும் அப்பாவுக்கு உதவி செய்ய வயலுக்குப் போவான். அவனுடன் கூடப் படிக்கும் மாணவர்களும் மாணவிகளும் அவனை 'மக்கு' மாடசாமி என்றே அழைத்தனர்.

அவன் அடிக்கடி பெயில் ஆகிவிடுவதால் அப்படிக் கேலிசெய்து மகிழ்வார்கள். மாடசாமியும் அவர்கள் இப்படிக் கேலி செய்வது குறித்து வருத்தப்பட்டதில்லை.

தான் உண்மையிலேயே ஒரு மக்குதான் என்ற எண்ணம் அவனுக்கே ஆழமாகப் பதிந்துவிட்டது.

தான் எதற்குமே லாயக்கில் லாதவன் என்று நினைத்துக் கொள்வான். தற்கொலை செய்து கொள்வோமா என்று கூட அவன் நினைத்தது உண்டு.

இருந்தாலும் அப்பாவை நினைத்து அப்படியெல்லாம் செய்யத் துணிந்தது இல்லை.

விரைவில் பள்ளிக்கூடத்தை விட்டுப் போய்விட வேண்டியதான் என்று உறுதி செய்து கொண்டான்.

அவனது வகுப்பு ஆசிரியை நித்யாவுக்கு மாடசாமி மேல் அனுதாபம் உண்டு.

அவன் மேல் ரொம்பவும் அக்கறை காட்டுவார்.

சிரத்தை எடுத்துப் படிக்கச் சொல்வார். "மாடசாமி... இரவுல வீட்டுப் பாடமெல்லாம் படிக்கிறியா ?" என்று அவ்வப்போது அன்போடு கேட்பார்.

மாடசாமி, "வீட்டுல வேலை இருந்தது டீச்சர்" என்று சொல்வான்.

(தொடரும்)

## உலக அமைதி நாள்



சர்வதேச அமைதி நாள் (International Day of Peace) ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் பிரகடனத்தின் மூலம் ஆண்டு தோறும் செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் சபையின் சகல உறுப்பு நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

அமைதி என்பதற்குப் பல பொருட்கள் தமிழில் உள்ளன. குறிப்பாக யுத்தம் பகைமை, வன்முறை என்பவற்றுக்கு எதிர்ச் சொல்லாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்காலப் பயன்பாட்டில் அமைதி என்பது, பகைமை இல்லாத ஒரு நிலையைக் குறிக்கும் ஒரு கருத்துருவாகும்.

உலகின் சகல முன்னேற்றத்திற்கும் அடிப்படையானது சமாதானமாகும். வரலாற்றில் பல யுத்தங்கள் நடைபெற்றுள்ளன. 20 ஆம் நூற்றாண்டின் இரு பெரும் உலக மகா யுத்தங்கள் கோடிக்கணக்கான உயிர்களையும் சொத்துக்களையும் பழி கொண்டுள்ளன.

2 ஆம் உலக மகா யுத்தத்தின் பின் உலக சமாதானத்திற்காக 1945 இல் நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உலக நாடுகளிடையே பூசல்களையும், போர்களையும் தடுக்க உயரிய பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்ற போதிலும்கூட துப்பாக்கிகளுக்கும் குண்டுகளுக்கும் ஓய்வு கொடுக்க முடியவில்லை.

உலகின் நிரந்தர சமாதானத்தை உருவாக்கும் பாரிய பணி யுனெஸ்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உலக சமாதான முயற்சியொன்றின் போது ஐ.நாவின் பொதுச் செயலாளர் ஹாமர்சீல்ட் விமான விபத்தில் உயிர் துறந்தமை 1961 வரலாற்றுச் சுவடாகும். அவர் உயிர் துறந்த செப்டம்பர் மூன்றாம் வாரத்தின் செவ்வாய்க் கிழமையிலாகும்.

யுனெஸ்கோவின் முகவுரை வாசகம் "மனித உள்ளங்களில் தான் போர் தோன்றுவதனால் மனித உள்ளங்களில் தான் அமைதிக்கான அரண்களும் அமைக்கப் பெறல் வேண்டும்" என்பதாகும்.

விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டீன் படைகொண்டு அமைதியை ஏற்படுத்த முடியாது. நல்லுணர்வால்தான் அதனைப் பெற முடியும்" என்றார். இந் நோக்கத்தில் யுனெஸ்கோவின் பொறுப்பும் பணியும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

யுனெஸ்கோவின் சட்ட யாப்பின் 1 ஆவது உறுப்புரை பின்வருமாறு கூறுகின்றது. உலக மக்களை இனம், பால், மொழி, அல்லது சமய பேதமின்றி ஐ.நா சாசனத்தின் உறுதி செய்யப்படுகின்ற நீதிக்கும் சட்ட ஆட்சிக்கும் மனித உரிமைகளுக்கும், அடிப்படை சுதந்திரங்களுக்கும், உலகளாவிய நன்மதிப்பினை வளர்ப்பதற்கென கல்வி, அறிவியல், பண்பாடு மூலமாக நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தி சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் பாடுபடுவதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.

அதாவது யுனெஸ்கோவின் பணி, கல்வி, அறிவியல், பண்பாட்டுத் தொடர்களின் வழியாக உலக சமாதானம், மனித இனத்தின் பொது நலன் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டும்.

ஐ.நா அமையமும், ஐ.நா சாசனமும் இக்குறிக்கோள்களின் பேரிலேயே நிறுவப் பெற்றுள்ளது. மனித உரிமைகளையும், கடமைகளையும் செயற்படுத்துவதற்கு இன்றியமையாது தேவைப்படுவது சமாதானமாகும்.

அதாவது குடிமக்கள் அனைவரும் முதன்மை பெறும் ஒருங்கிணைந்து வாழும் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் சுதந்திரமான, நியாயமான சட்ட ஆட்சியுடைய சமத்துவம், ஒருமைப்பாடு என்பதுதான் சமாதானம் ஆகும். சமாதானம், மேம்பாடு, ஜனநாயகம் போன்ற மூன்றும் ஒன்றுக்கொன்று உருதுணைபுரியும் முக்கோணங்களாகும். அவை ஒன்றையொன்று வலுப்படுத்துகின்றன.

09.2015 21

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1792 - பிரான்சில் முடியாட்சி அகற்றப்பட்டு குடியரசு நிறுவப்பட்டது.
- 1860 - இரண்டாம் ஓப்பியம் போர்: ஆங்கிலேய, பிரெஞ்சுப் படைகள் சீனப் படைகளைத் தோற்கடித்தன்னர்.
- 1896 - பிரித்தானியப் படைகள் சூடானின் டொங்கோலா நகரைக் கைப்பற்றினர்.
- 1921 - ஜேர்மனியில் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற பெரும் வெடி விபத்தில் சிக்கி ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.
- 1934 - ஜப்பானில் மேற்கு ஹொன்சூ என்ற இடத்தில் இடம்பெற்ற சூறாவளி காரணமாக 3,036 பேர் கொல்லப்பட்டனர்.
- 1938 - நியூ யோர்க்கின் லோங் தீவில் சூறாவளி காரணமாக 500 முதல் 700 வரையானோர் கொல்லப்பட்டனர்.
- 1939 - ருமேனியாவின் பிரதமர் ஆர்மண்ட் கலினெஸ்கு தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1942 - மேற்கு உக்ரைனில் 2500 யூதர்கள் நாசிகளினால் கொல்லப்பட்டனர்.
- 1964 - மோல்டா, ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1972 - பிலிப்பீன்ஸ் அதிபர் பேர்டினண்ட் மார்க்கொஸ் முழு நாட்டிலும் இராணுவ ஆட்சியைப் பிறப்பித்தார்.
- 1981 - பெலீஸ், ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1989 - இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளர் ராஜினி திரணகம யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1990 - மட்டக்களப்பு ஆரையம்பதியில் புதுக்குடியிருப்பு கிராமத்தில் 17 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1991 - ஆர்மேனியா, சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1995 - விநாயகரின் சிலைகள் பால் குடிப்பதாக வதந்தி பரப்பப்பட்டது.
- 1999 - தாய்வானில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 2,400 பேர் கொல்லப்பட்டனர்.
- 2001 - நாசாவின் டீப் ஸ்பேஸ் 1 விண்கலம் பொரெல்லி வால்வெள்ளிக்குக் கிட்டவாக 2,200 கிமீ தூரத்திற்குள் சென்றது.
- 2003 - கலிலியோ விண்கலத் திட்டம் இடைநிறுத்தப்பட்டு அது ஜுப்பிட்டர் கோளின் வளிமண்டலத்தினுள் அனுப்பப்பட்டு அதனுடன் மோத விடப்பட்டது.
- 2004 - பூர்ஜ் துபாய் கட்டிட அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1866 - எச். ஜி. வெல்ஸ், ஆங்கில எழுத்தாளர், (இ. 1946)
- 1909 - குவாமே நிக்ருமா, கானா பிரதமர் (இ. 1972)
- 1954 - சின்சோ அபே, யப்பானிய அரசியல்வாதி
- 1957 - கெவின் ரட், ஆஸ்திரேலியாவின் 26வது பிரதமர்
- 1963 - கேட்லி அம்ப்ரோஸ், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் பந்தாளர்

### இறப்புகள்

- 1971 - பெர்னார்டோ ஹூசே, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1887)
- 1989 - ராஜினி திரணகம, இலங்கையின் மனித உரிமை மற்றும் பெண் உரிமை செயற்பாட்டாளர் (1954)
- 2007 - விஜயன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்
- 2008 - டி. பி. விஜயதுங்கா, இலங்கையின் 4 ஆவது ஜனாதிபதி (பி. 1922)

### சிறப்பு நாள

- உலக அமைதி நாள்

தவறைத் திருத்திக்கொள்பவன் தரணியில் உயர்வான். - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எங்களுக்கும் ஓர் அரசு இருந்தால் நாங்களும்...

தமிழின அழிப்பு மற்றும் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கைகளை இதுவரை கொழும்பு தமிழ் அரசியல் தலைமை உலக நாடுகளிடம் வலியுறுத்தியதாகத் தெரியவில்லை.

இலங்கை அரசுடன் ஒத்துப்போவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது என்ற நிலைப்பாட்டில் கொழும்பு தமிழ் அரசியல் தலைமையின் செயற்பாடுகள் உள்ளன. ஆக, தேர்தல் காலங்களில் மட்டும் உசுப்பேத்துதல் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்பதாக நிலைமை உள்ளது.

இத்தகையதொரு சூழமைவில் ஆளும் தரப்பு இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஓடித் திரிந்து சர்வதேச விசாரணையை இல்லாமல் செய்வதில் தீவிரம் காட்டுகிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் சென்று இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்து ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கைக்கு உதவும்படி கேட்டுக்கொண்டார்.

இதேபோல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரைவில் அமெரிக்காவுக்குச் சென்று அமெரிக்க ஜனாதிபதியுடனும் உயர்மட்ட அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஆக, குற்றமிழைத்த தரப்பு இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் சென்று தங்கள் மீதான போர்க்குற்ற விசாரணையை தடுத்து நிறுத்தி தப்பித்துக் கொள்ளும் தந்திரோபாயங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்க, போரினால் பாதிக்கப்பட்ட தமிழினம் இந்தியப் பிரதமரையோ அமெரிக்க ஜனாதிபதியையோ சந்தித்து ஐயா! நாங்கள் இழந்தவர்கள்; எங்கள் இனத்தை இலங்கை ஆட்சியாளர்கள் கொன்றொழித்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போயினர். கணவனையிழந்து, குடும்பங்களைக் கொண்டு நடத்த முடியாத அபலைப் பெண்களின் வாழ்க்கை கண்ணீரும் கம்பலையுமாக உள்ளது என்று எடுத்துரைப்பதற்கு எங்களுக்கு அரசும் இல்லை; ஆட்களுமில்லை.

இந்த நிலைமையில் தமிழர்களுக்கு நடந்த கொடுமைகளை எடுத்துக் கூறி இலங்கை அரசின் முயற்சிகளை முறியடிப்பதற்கு எங்களால் இயலாமல் உள்ளது. உள்ளக விசாரணை என்று கூறி உலகை ஏமாற்ற நினைக்கும் இலங்கை அரசு, சில சந்தர்ப்பங்களில் தமது ஏமாற்று நாடகத்தைப் பகிரங்கமாகியுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மின்சார நாற்காலியிலிருந்து காப்பாற்றியுள்ளோம் என்கிறார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நான் ஜனாதிபதியானதால் இலங்கை மீதான ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நீக்கப்பட்டன என்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கையில் போர்க்குற்றம் நடந்ததாக ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் ஆணையாளரால் எந்த இடத்திலும் கூறப்படவில்லை என்கிறார்.

ஆக இவர்களின் கருத்துக்கள் அனைத்தும் பாதிக்கப்பட்ட தமிழினத்துக்கு எவ்வாறு இருக்கும் என்பதை உணர்ந்து கொள்வதற்கு இந்த உலகில் நீதியாளர்கள் எவருமே இல்லையா? என்று கேட்பதை – ஏங்குவதைத் தவிர வேறு எதைத்தான் சாதாரண தமிழ் மக்கள் செய்ய முடியும்?

தமிழினத்தை கொன்றொழித்த கொடுமை தந்த நெடுந்துயரத்தைவிட, இப்போது குற்றவாளிகளைக் காப்பாற்றி, பாதிக்கப்பட்ட தமிழினத்துக்கு மேலும் பாதகம் செய்ய இலங்கை ஆளும் வர்க்கம் செய்யும் முயற்சிகளைப் பார்க்கும் போது இதயம் வெந்து புண்ணாகிப் போகிறது. என்ன செய்வது?

நான் ஜனாதிபதியானதால் குற்றச்சாட்டுக்கள் குறைந்தன என்று மைத்திரிபால சிறிசேன கூறுவது போல, நான் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு வந்ததால் தான் சர்வதேச நீதிமன்றம் போர்க்குற்ற விசாரணையை நடத்தும் என்ற முடிபை உலகம் எடுத்ததென்று நம்மவரால் கூற முடியுமா என்ன? ஆக, எங்கள் தலைவிதி எப்படி என்பதை அழ கண்ணீரோடு இருந்து பார்ப்போம் அவ்வளவுதான்.

# அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி அமெரிக்காவுடன் உடன்படிக்கை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அங்கு கப்பல் தடாகம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு அமெரிக்க நிறுவனம் ஒன்றுடன் இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

குறித்த கப்பல் தடாகத்தை நிர்மாணிப்பதற்கு 600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களை பழுது பார்க்க மட்டுமன்றி, புதிய கப்பல்களை நிர்மாணிக்கவும் கூடியதாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

நட்டத்தில் இயங்கும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் ஏற்பாட்டில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ-12)

# 2018இல் மின்சார ரயில் சேவை சாத்தியத்தன்மை குறித்து ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையில் முதலாவது மின்சார ரயில் சேவை ஆரம்பித்தல் மற்றும் ரயில் பாதையை புனரமைப்பதற்கான ஒப்பந்தத்திற்கு இலங்கை அரசாங்கம் மற்றும் மலேசியா நிறுவனம் ஒன்று அண்மையில் கைச்சாத்திட்டது.

அதற்கமைய கொழும்பு கோட்டையில் இருந்து நீர்கொழும்பு வரை இந்நாட்டின் முதலாவது மின்சார ரயில் பாதை வலையமைப்பு நிர்மாணிக்கப் படவுள்ளது.

இதற்கு இணையான 150 ஏக்கர் அளவிலான காணி ஒன்றினை வலைக்கு பெற்றுகொண்டு அனைத்து வசதிகளும் கொண்ட நகரம் ஒன்றினை நிர்மாணிப்பதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

குறித்த திட்டத்திற்கு சாத்தியத்தன்மையான அறிக்கை தயாரிப்பதற்கு 5 மில்லியன் டொலர் பணம் முதலீடு செய்யவுள்ள நிலையில் குறித்த அறிக்கைக்கான அனுமதி அரசாங்கத்தால் கிடைத்த பின்னர் இத்திட்டம் ஆரம் பிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கமை நீர்கொழும்பில் இருந்து கொழும்பு கோட்டை வரையிலான மின்சார ரயில் பாதையின் தூரம் 42 கிலோ மீற்றராகும்.

2018ஆம் ஆண்டு நிறைவடையும் போது இத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-12)

# சரணடைந்தவர் விளக்க மறியலில்

(வவுனியா)

வவுனியாவில் புதையல் தேடிய சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் சரணடைந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் யூ.கே.திஸாநாயக்க விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரை எதிர்வரும் 23-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக தலைமறைவாகியிருந்த சந்தேகநபர் நேற்று முன்தினம் இரவு சட்டத்தரணியூடாக பொலிஸில் சரணடைந்ததாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இதன்படி இவரை கோட்டை மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தியபோது விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் 23-ம் திகதி மீண்டும் சந்தேக நபரை வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் இதன்போது நீதவான் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (எ-12)

# கர்ப்பிணிப் பெண் சடலமாக மீட்பு

(கரணவாய்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆற்றிலிருந்து கர்ப்பிணிப் பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட் கப்பட்டுள்ளது.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயும் கர்ப்பிணிப் பெண்ணுமான செல்வராஜா அரசன் சந்திரவதனா (வயது 40) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மனைவி காணாமல் போனமை தொடர்பாக கணவனால் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (3-60)

# பல்கலைக்கழகங்களுக்கு இனி 40 ஆயிரம் மாணவர்கள்

## கல்வி ராஜாங்க அமைச்சர் நடவடிக்கை

(கொழும்பு)

அரச பல்கலைக்கழகங்களுக்கு இணைத்து கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அடுத்த வருடங்களுக்குள் 100 வீதமாக உயர்த்த போவதாக பல்கலைக்கழக கல்வி ராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரு தெரிவித்துள்ளார்.


பல்கலைக்கழகங்களுக்கு தற்போது வருடாந்தம் 20 ஆயிரம் மாணவர்கள் இணைத்து கொள்ளப்படுகிறார்கள்.

இந்த எண்ணிக்கையை படிப்படியாக 40 ஆயிரம் உயர்த்த நடவடிக்கை எடுக்க போவதாகவும் அவர் கூறியுள்ளார். தொழில் வாய்ப்புகளை பெறக் கூடிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தி, மாணவர்களுக்கான பல்கலைக்கழக வாய்ப்புகள் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பாக கலைத்துறை பட்டப்படிப்புக்காக இணைத்து கொள்ளப்பட உள்ள மாணவர்களுக்கு இந்த பாடநெறிகளை அறிமுகப்படுத்த உள்ளதாகவும் ராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகங்களின் கல்வி நிலைமை மற்றும் தரத்தை நிர்ணயம் செய்ய விசேட பேரவை அல்லது சபை ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-12)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கவலை ஒழித்தல்



தவறான கணிப்பால் ஏற்படுகின்ற ஒரு மன நோய் தான் கவலை. நிகழ்ச்சிகளுடனோ அல்லது பொருள்களுடனோ எந்தத் தொடர்பும் இல்லாமல் மனதுடன் தொடர்பு கொ?ண்டுள்ளது கவலை. மனம் பிரச்சினைகளை அறிந்து கொள்ள முடியாமல் போனால், பிரச்சினைகளை முடிக்க முடியவில்லை எனில், அந்தப் பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியாவிட்டால் கவலையின் பிடியில் சிக்கிக் கொள்கின்றது. தேவைக்கும், இருப்புக்கும் இடையே இடைவெளி, எதிர்பார்ப்புக்கும் பெறுவதற்கும் இடையே இடைவெளி, தனக்கும் பிறர்க்கும் இடையே ஏற்படும் முரண்பாடு, ஆசைக்கும் திறமைக்கும் இடையே உள்ள வித்தியாசம். இவை யாவும் கவலைக்கு வித்தாகின்றன. மனதைக் கடமையில் செலுத்தி இடையறாத முயற்சியுடன், முறையான திட்டத்துடன் செயல்பட்டால் இவை அனைத்தையும் சரி செய்ய முடியும்.

ஏதாவது ஒரு நேரத்தில் ஏதாவது பிரச்சினைகள் ஒவ்வொருவருக்கும் தோன்றும். அவை வந்து கொண்டும் போய்க் கொண்டும் தான் இருக்கும். பிரச்சினைகளைக் கண்டு பயந்துவிடக் கூடாது. வாழ்க்கையின் ஒரு பகுதி தான் பிரச்சினை. கடந்த காலத்தில் உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள், அவை எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டன என்பதை எண்ணிப் பாருங்கள். அதே போன்று தற்பொழுது தோன்றியுள்ள பிரச்சினையும் காலத்தில் அவ்வாறே தீர்க்கப்பட்டு விடும்.

பிரச்சினையைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டுவிட்டுத் தைரியமாக அவற்றைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். பிரச்சனைக்குத் தீர்வு உடனே கிடைக்காவிட்டால் இயற்கைக்கு விட்டுவிடுங்கள். சிறிது காலம் பொறுத்திருங்கள். சரியான நேரத்தில் சரியான தீர்வு தானாகவே கிடைத்து விடும். இங்கு இயற்கை சட்டத்தை நீங்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் தான் எந்த ஒரு பிரச்சினையும் பெரியதாகத் தோன்றும். அதற்குத் தீர்வு அதனுள் இருக்கிறது. அது தவறாமல் கிடைத்துவிடும். இதற்கென நாம் ஓர் வழிமுறையை ஏற்படுத்திக் கொண்டு சரியாக அதைக் கடைபிடித்து வந்தால் அனைத்து பிரச்சினைகளுக்கும் எளிதில் தீர்வு பெற்று விடலாம். அதனால், மனதின் சுமையும் நீங்கிவிடும்.

# சென். அன்ரனிஸ்சை வீழ்த்தி கில்லரி அரையிறுதிக்கு தகுதி




நெற்கொழு கழுகுகள் வி.க நடத்தும் மின் ஒளியில் இடம்பெற்ற சுப்பர் 8 சுற்றின் இறுதிப் போட்டியில் மன்னார் கில்லரி வி.க எதிர்த்து அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் வி.க மோதியது.

வெற்றி பெறும் அணி அரை இறுதி போட்டிக்கு தெரிவாகும் என இடம் பெற்ற போட்டியாகையால் சுவாரஸ்யமாக அமைந்தது.

போட்டி ஆரம்பித்து 09 ஆவது நிமிடத்தில் கில்லரி வீரர் ரஞ்சன் முதலாவது கோலினை அடிக்க பதிலுக்கு 25 ஆவது நிமிடத்தில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் முன்கள வீரர் ஆமோஸ்தீபன் ஒரு கோலினை அடித்து மீண்டும் சமன் செய்தார்.

சமநிலையில் மீண்டும் ஆரம்பித்த இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளினதும் சுறுசுறுப்பான




ஆட்டம் ரசிகர்களை உற்சாகப்படுத்தியது. கில்லரியின் முன்கள வீரர் அன்ரூ டிலக்சன் 20 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பினை கோலாக மாற்ற மீண்டும் கில்லரி முன்னிலை பெற்றது.

தொடர்ந்தும் சென்.அன்ரனிஸ் அணியினது முயற்சிகளை கில்லரி பின் கள வீரர்கள் முறியடிக்க மன்னார் கில்லரி வி.க 2:1 என வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக கில்லரி ரஞ்சன் தெரிவுசெய்யப்பட்டார்.

அன்று காட்சி போட்டியாக நடைபெற்ற மன்னார் சென். அன்ரனிஸ் (B) மற்றும் வல்வை வி.க இடையிலான போட்டியிலே சென். அன்ரனிஸ் (B) அணியின் வீரர் அன்ரனி ஒரு கோலினை பெற்றதன் மூலம் மன்னார் சென். அன்ரனிஸ் (B) 1:0 என வெற்றி பெற்றது. (க)

# தேசிய ரீதியிலான காற்பந்து யாழில் ஆரம்பம்







2015ஆம் ஆண்டிற்கான அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் முதற்தடவையாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியது.

கல்வி அமைச்சுடன் இணைந்து இப்போட்டிகளின் ஒழுங்குகளை மாகாண கல்வி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் இசுறுபாய ஆகியன மேற்கொண்டுள்ளன.

15 வயது பிரிவு,17 வயது பிரிவு மற்றும் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் ஆகிய நான்கு குழுக்களாக இடம்பெறும் இப்போட்டிகள் யாழ் மாவட்டத்தின் ஆறு மைதானங்களில் இடம்பெற்று வருகின்றது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இதன் முதற்போட்டியை வட மாகாண கல்வி பணிப்பாளர் எஸ். உதயகுமார் ஆரம்பித்து வைத்தார்.

மொத்தமாக 108 அணிகள் இப்போட்டிகளில் மோதுகின்றன. தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்ற இப்போட்டிகள் இன்று 21ஆம் திகதி திங்கட்கிழமை யாழ் மத்திய கல்லூரி மைதானத்திலும் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளதாக வட மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (க)

# நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்டம்








## சென்.மேரிஸ், சென். லூசியஸ் வெற்றி




நெற்கொழு கழுகுகள் வி.க நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் லீக் முறையிலான சுப்பர் 8 சுற்று மின் ஒளியில் பிரம்மாண்டமான முறையில் இடம்பெற்று வருகின்றது. இதில் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற முதலாவது போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் வி.க எதிர்த்து பலாலி விண்மீன் வி.க மோதியது. ஆட்டம் தொடங்கி 18 ஆவது நிமிடத்திலேயே சென. மேரிஸ் அன்ரன் சாள்ஸ் முதலாவது கோலினை பெற தொடர்ந்து 23 ஆவது நிமிடத்தில் மீண்டும் சென்.மேரிஸ் வீரர் மதிவதன் இரண்டாவது கோலினை பெற்றுக்கொடுத்தார்.

ஆட்டத்தின் 38 ஆவது நிமிடத்தில் விண்மீன் வீரர் டேமியன் கிடைத்த தண்ட உதையினை கோலாக மாற்ற முதலாவ்து பாதி 2:1 ஆக காணப்பட்டது. இரண்டாவது பாதியிலும் சென். மேரிஸ் அணியினரின் ஆதிக்கம் அதிகமாக காணப்பட 11.18.30.34 ஆவது நிமிடங்களில் முறையே நிதர்சன். யூட். யுனட். நிதர்சன் ஆகியோர் கோலினை பெற ஆட்டத்தில் 6:1 என சென்.மேரிஸ் வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக மதிவதன் தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாவது போட்டியாக இடம் பெற்ற மன்னார் அந்தோனியார் புரம் எதிர் சென்.அன்ரனீஸ் வி.க இடையிலான போட்டியில் 14 ஆவது நிமிடத்தில் சென்.லூசியஸ் வீரர் பிங்கோ முதலாவது கோலினை அடித்தார். தொடர்ந்து இரண்டாவது பாதியின் 15 ஆவது நிமிடத்தில் சென்.லூசியஸ் பிராங்கிளின் இரண்டாவது கோலினை பெற்றார்.

தொடர்ந்தும் பல முயற்சிகளை மேற்கொண்ட அந்தோனியார்புரம் சென்.அன்ரனீஸ் வி.க வீரர்களினால் கோல் பெறக்கூடிய வாய்ப்புகள் இலாபகமாக முறியடிக்கப்பட 2:0 என சென்.லூசியஸ் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக பிங்கோ தெரிவு செய்யப்பட்டார். (க)

# வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பூர்வீக தாய்நிலம்

## விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் உரை

(மட்டக்களப்பு)

இலங்கைத்தீவில் இணைந்த வடக்கு கிழக்கு தமிழர்களின் பூர்வீகத் தாய்நிலம். இப்போது வடக்கை நிர்வகிப்பதற்குத் தனியாக வடக்கு மாகாணசபை,

கிழக்கை நிர்வகிப்பதற்குத் தனியாக கிழக்கு மாகாணசபை என்று இலங்கை அரசாங்கத்தால் நிர்வாக ரீதியாக இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந் தாலும் பொதுவேலைத் திட்டங்களில் நாம் ஒன்றிணைய வேண்டும் என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண விவசாய அமைச்சு கிழக்கின் எழுச்சி என்ற பெயரில் மாபெரும் விவசாயக் கண்காட்சியை வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் மூன்று நாட்கள் ஏற்பாடு செய்திருந்தது.

கண்காட்சியின் இறுதி நாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிறைவு நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி



யில் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிழக்கு மாகாணம் மூவின மக்களும் வாழுகின்ற ஒரு மாகாணம். தமிழ்மக்கள் மீது இலங்கை அரசாங்கம் நிகழ்த்திய இனப்படுகொலைக்கு, போர்க்குற்றங்களுக்குச் சர்வதேச விசாரணை தேவை என்று தீர்மானம் நிறைவேற்றிய வடக்கு மாகாணசபையின் அமைச்சர் என்றவகையில் இங்குள்ள சிங்களச் சகோதரர்கள் என்னைக் குரோத உணர்வுடன் இனவாதியாகப் பார்க்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மாகாணசபையினூடாக நாம் வழங்கும் சேவைகளில் தமிழர், சிங்களவர், இஸ்லாமியர் என்று இனரீதியாக எந்தப் பாரபட்சமும் காட்டுவது இல்லை. மூவின மக்களும் இந்தத் தீவில் நிம்மதியாகவும் அதேசமயம் அடுத்தவர் இறைமையில்மற்றவர் தலையீடு இல்லா மல் சுதந்திரமாகவும் வாழ வேண்டும் என்றுதான் நாம் விரும்புகிறோம்.

வடக்கு கிழக்கு நிர்வாகரீதியாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் நாம் உணர்வால் ஒன்றுபட்டவர்கள் என்ற அடிப்படையிலேயே கிழக்கின் விவசாய அமைச்சர் என்னை கண்காட்சிக்குப் பிரதம விருந்தினராக அழைத்துள்ளார் என்று கருதுகிறேன்.

அந்த அடிப்படையிலேயே மிகுந்த மகிழ்ச்சியுடன் நானும் இந்த விழாவில் கலந்துகொண்டிருக்கிறேன். இந்த உறவுப்பாலம், வடக்கில் எனது அமைச்சால் வருங்காலத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களில் கிழக்கை எவ்வாறு இணைத்துக்கொள்ள முடியும் என்று யோசிக்க வைத்துள்ளது.

வடக்குக்கும் கிழக்குக்கும் பொதுவான வேலைத்திட்டங்களால் நாம் ஒன்றிணைவோம். இணைந்த வடக்கு கிழக்கில் தன்னாட்சி அதிகாரம் கொண்டவர்களாக மீண்டும் நாம் நிமிர்வதற்கு ஒன்றுபட்டு உழைப்போம் என்றும் தெரிவித்துள்ளார். (எ-12)

# கொழும்பு விசேட பணியகம் ஐ.நாவின் பரிந்துரை நிராகரிப்பு

(கொழும்பு)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசேட பணியகம் ஒன்றை கொழும்பில் அமைப்பதற்கு முன்வைக்கப்பட்ட பரிந்துரையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேனால் கடந்த புதன் கிழமை ஜெனிவாவில் வெளியிட்டு வைக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையில் இலங்கையில் மனிதவுரிமை நிலைமைகளைக் கண்காணிக்கவும், அது தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசேட பணியகம் ஒன்று கொழும்பில் அமைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



ஆனால், ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொழும்பில் தற்போதுள்ள ஐ.நா பணியகத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-12)

# மகிந்த அரசின் ஒப்பந்தங்களில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன

## அமைச்சர் நிமல் தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான ஒப்பந் தங்களில் பாரிய முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக நிமல் சிறிபால டி சில்வா ஒப்புக்கொண்டுள்ளார்.

மாத்தறையிலிருந்து பெலியத்தை வரையான ரயில்பாதைகளின் நிர்மாணப்பணிகளை பார்வையிடுவதற்காக போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று மாத்தறைக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, மாத்தறையிலிருந்து பெலியத்தை வரையிலான ரயில் பாதையின் நிர்மாணப்பணிகளில் 60 வீதம் அளவுக்கு தற்போது நிறைவு பெற்றிருக்க வேண்டும்.

எனினும் தகுதியற்ற சீன நிறுவனம் ஒன்றுக்கு இதன் நிர்மாணப்பணிகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக பாதை நிர்மாணம் தொடர்பான ஆரம்ப கட்ட வேலைகள் கூட இன்னும் பூர்த்தியாக்கப்படவில்லை.



தற்போதைய நிலையில் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களை ரத்துச் செய்ய முடியாது. எனவே நிர்மாணப்பணிகளை விரைந்து முன்னெடுக்க குறித்த நிறுவனத்தை வலியுறுத்தியுள்ளோம் என்றார். (செ-12)

# சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி மரணம்

(கரணவாய்)

ஊர்காவற்றுறை நாரந்தனைப் பகுதியில் குளத்திலிருந்து இரு சிறுவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நாரந்தனை மத்தியைச் சேர்ந்த டெனிஸ்வரன் தனுசன் (வயது - 11) சுரேஸ்குமார் விதுசன் (வயது - 8) ஆகிய இருவரினதும் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன.

உதைபந்தாட்ட போட்டி பார்க்கச் செல்வதாக தாயாரிடம் கூறி சென்ற சிறுவர்களே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுவர்கள் வீடு திரும்பாத நிலையில் அச்சமடைந்த உறவினர்கள் சிறுவர்களை தேடிச் சென்றவேளை குறித்த இரு சிறுவர்களும் அப்பகுதியை இருந்த குளம் ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-12,60)

# அமெரிக்காவின் தீர்மான...

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் மேற்கொண்ட விசாரணை அறிக்கை கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

இந்நிலையில், இது தொடர்பிலான விசாரணைகளை நடத்த சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள், சட்டவாளர்களை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்ற தீர்மான வரைவு ஒன்றை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு கூட்டத்தொடரில் அமெரிக்கா கொண்டு வரவுள்ளது.

இத்தீர்மானம் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளுடன் அமெரிக்க இராஜதந்திரிகள் நடத்தவுள்ள பேச்சுக்களின் பின்னர், இந்த தீர்மான வரைவில் திருத்தங்கள் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தீர்மான வரைவு குறித்து எதிர்வரும் புதன்கிழமை ஜெனிவாவில் இடம்பெறவுள்ள இலங்கை தொடர்பான முறைசாராக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்நிலையில், இத்தீர்மான வரைவுக்கு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அங்கத்துவ நாடுகளின் ஆதரவைத் திரட்டிக் கொள்வதற்கு ஜெனிவாவில் உள்ள அமெரிக்காவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கெய்த் ஹாப்பர் தலைமையில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஐந்து பக்கங்களைக் கொண்ட இந்த ஆரம்ப தீர்மான வரைவு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளுடனும் ஏற்கெனவே பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-12)

# புதிய தீர்...

முன்னர் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களுக்கு இவ்விரு நாடுகளும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

இதன்போது, எந்தவொரு நாட்டினது உள்நாட்டு விவகாரங்களிலும் சர்வதேச நாடுகள் தலையிடக் கூடாது என இவ்விரு நாடுகளும் கூறியிருந்தன.

இந்நிலையில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் இந்தக் கூட்டத்தொடரில் இலங்கையின் ஒத்துழைப்புடன் அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்தில் சர்வதேச தலையீட்டுடனான உள்நாட்டு விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் இத்தீர்மானத்துக்கு ரஷ்யாவும், சீனாவும் ஆதரவாக வாக்களிக்கலாம் அல்லது வாக்களிப்பின் போது நடுநிலை வகிக்கலாம் என்று கருதப்படுகிறது.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா தயாரித்துள்ள புதிய வரைவுத் தீர்மானம் எதிர்வரும் வியாழக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் பின்னர் இந்த வரைவில் திருத்தங்கள் செய்யப்பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. (எ-12)

# ஐ.நா.குழு...

ஐ.நாவில் இலங்கை தொடர்பிலான விசாரணை அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேனால் சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காகவே ஐ.நா. குழு வருகைதரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ-12)

# விசாரணை அறிக்கையை...

திக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டிருந்தது.

இந்தப் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட கலப்பு நீதிமன்ற பொறிமுறை அமைக்கப்பட வேண்டும் என ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் பரிந்துரைத்திருந்தார்.

இந் நிலையில் இலங்கையில ஜனாதிபதி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அறிக்கையை ஐ.நாவுக்கு அனுப்பி வைக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# யாழ்தேவி தடம்புரண்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்தேவி ரயில் நேற்றுக் காலை தடம்புரண்டுள்ளதன் காரணமாக வடக்குக்கான ரயில் போக்குவரத்து நேற்று மாலை வரை பாதிக்கப்பட்டிருந்தது.

அநுராதபுரத்தை அண்மித்த தலாவ- சிராவஸ்திபுர ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகு தியில் நேற்றுக் காலை யாழ்தேவி ரயில் தடம்புரண்டது.

இதனைத் தொடர்ந்து தடம்புரண்ட ரயில் பெட்டிகளை அகற்றி ரயில் தண்டவாளங்களை சீரமைத்து ரயில் போக்குவரத்தை ஒழுங்கு படுத்துவற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து கொழும்பிலிருந்து யாழ். செல்லும் ரயில்கள் தலாவை வரையிலும், வடக்கிலிருந்து கொழும்பு வரும் ரயில்கள் சிராவஸ்தி வரையிலும் மட்டுப்படுத்தப்பட்டன. எனினும் பிற்பகல் 5 மணியிலிருந்து ரயில் சேவை வழமைக்கு திரும்பியுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-12,15)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-2259)


# குற்றம் நிரூபி...

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாங்கள் சட்ட பூர்வமான நடவடிக்கையை சந்திக்க தயார் நிலையில் இருக்கிறோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

போரின் போது பாலியல் பலாத்காரக் குற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை எனவும் சரத் பொன்சேகா இதன்போது குறிப்பிட்டார்.

இந்திய அமைதிப்படை 1987 ஜூலை முதல் 1990-ம் ஆண்டு மார்ச் வரை இலங்கையில் முகாமிட்டிருந்தது. அப்போது அவர்கள் மீது இதுபோன்ற புகார்கள் கூறப்பட்டன. அதேபோன்று ஈழப்போரில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்துக்கு எதிராக இது போன்ற குற்றச்சாட்டுகள் பரப்பப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ள அனைத்தையும் நான் மறுக்கவில்லை. அதே நேரத்தில் போர்க்குற்றம் குறித்து உள்நாட்டு விசாரணைக்கு அதாவது இலங்கை அரசு விசாரணைக்கு ஐ.நா. உத்தரவிட வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் கடந்த 2000-ம் ஆண்டு எட்டு தமிழர்களை சுட்டுக்கொன்ற இராணுவ வீரருக்கு கடந்த ஜூன் மாதம் கொழும்பு நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

அதுபோன்று உள்நாட்டு விசாரணை நடத்தப்பட்டால் இதுபோன்று நியாயமான தீர்ப்பு கிடைக்கும். அதே நேரத்தில் உள்நாட்டில் வெளிநாட்டு நிபுணர்கள் உதவியுடன் ஒளிவு மறைவற்ற விசாரணை நடத்தப்பட்டாலும் நியாயமான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என பொன்சேகா மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-12)

# பெண் போராளி...

கிய நாடுகள் சபைக்கு அவர் ஆதாரங்களை வழங்கியுள்ளார். இது தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

2010 இல் மீண்டும் இலங்கைக்கு வந்த நான் இராணுவத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் பலரை சந்தித்து அவர்களது சாட்சியங்களை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பியிருக்கிறேன்.

இந்த சாட்சியங்கள் தொடர்பான ஆவணங்கள் ஐக்கியநாடுகள் சபையின் விசாரணைகளின் போது சாட்சியங்களாக மட்டும் பயன்படுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-3)


BRITISH COLLEGE OF HIGHER STUDIES
வழங்கும்
After AL What Next ?
உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற
பல்கலைக் கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?
உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரே வழி
அதை மேம்படுத்துவதே எமது நோக்கு

Spoken English with Grammar 1½ Months
100% பயிற்சி
சர்வதேசத் தரம் கொண்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கி மிகவும் இலகுவான விளக்கங்களுடன் அனைவருக்கும் பயனுள்ள வகையில் கற்பிக்க வகை செய்திருக்கின்றோம். ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே இந் நெறி நடாத்தப்படுகிறது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் ஆங்கிலம் கற்க
100% வெற்றி

Diploma In English 2½ Months
ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்தில் கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கபடுகிறது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

* வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திறகமைவாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
* எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
* Excellent Teachers' Panel & Individual Attention
* கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
* ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்கட்கு தனிப்பட்ட கவனமும், கூடுதல் பயிற்சிகளும் வழங்கப்படும்

| Spoken English with Grammar | | Diploma in English | |
|---|---|---|---|
| ~~Rs.10'000~~ | Rs.7'500 | ~~Rs.14'000~~ | Rs.9'500 |

Batches Start On
22.09.2015 @ 9.00 am
23.09.2015 @ 9.00 am
24.09.2015 @ 2.00 pm
25.09.2015 @ 9.00 am
26.09.2015 @ 9.00 am

BCHS
No.15, Chirambiyady Lane (off Stanley Road), Jaffna (Near Ariyakulam & Above Sathosa SM)
Tel : 021-2224550, 0777222422, 0776555677
(C-2260)



# தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகா ஊடான யாத்திரை
நாட்கள் 16, யாத்திரிகர் 10, ஆரம்பம் 10.10.2015

மலைக்கோட்டை விநாயகர், பஞ்சபூதத் தலங்கள், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, 9 நவக்கிரக ஆலயங்கள், மேல் மருவத்தூர், பொற்கோவில், மதுரை மீனாட்சி, குருவாயூர், மைசூர் சாமுண்டீஸ்வரி, திருக்கடையூர், கன்னியாகுமரி, ஸ்ரீரெங்கம், பிரம்மா கோவில் உட்பட 65க்கும் அதிகமான ஆலயங்களைத் தரிசிக்கலாம். பெற்றுக் கொள்ளும் ரூபாய்க்கு எமது சேவை : இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை உணவு, குடிநீர், தரமான தங்குமிடம், A.C வாகன வசதி, ஏயர் போட் போக வர வாகன வசதி, 60 புகைப்படங்கள் மற்றும் ஆலய தரிசனக் கட்டணங்கள் உட்பட. மேலதிக விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு : கலாநிதி. T. ஸ்ரீரெங்கநாதன், மகன் - ராஜன்
தொ.பே : 0777 680 102, 0777 362 154
E.mail : sriranganathan2601@gmail.com - Web : www.sridevipilgrims.com
Facebook : sridevisriranganathan.thuraiappa
(C-2261)



# காசி யாத்திரை

வயதானவர்களுக்கும், குறைந்த நாட்கள் லீவு எடுப்பவர்களுக்குமான யாத்திரை. காசி யாத்திரை 9 நாட்கள்
நாட்கள் 09, யாத்திரிகர் 15, ஆரம்பம் 15.11.2015

பிராமண சமையல் ஆட்கள் சமைப்பதால் பிரமண சமூகத்தினரும் கலந்து கொள்ளலாம். செல்லுமிடங்கள் சுருக்கமாக : காசி (வாரணாசி), கயா, புத்தகயா, அலகாபாத் (கங்கா, யமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம்) சீத்தாமடி, அயோத்தி ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களை தரிசிக்கலாம். எமது சேவை : இரு வழி விமான ரிக்கட், ஏயர் போட் போக வர வாகன வசதி, சுற்றிப் பார்க்க வாகன வசதி, மூன்று வேளை சுத்தமான பிராமண சமையல் ஆட்களைக் கொண்டு உடனுக்குடன் சமைத்த சைவ உணவு ஒரு லீற்றர் மினரல் வாட்டர். இரண்டு பேருக்கு கட்டில், மெத்தை, சுடு தண்ணீருடன் இணைந்த குளியலறை உள்ள அறைகளில் தங்க வைக்கப்படுவீர்கள் விருப்பமுடையவர்கள் கடவுச்சீட்டு போட்டோப் பிரதி 01-ம், கலர் படம் 01-ம் அனுப்பி பதிவு செய்யவும்.

வாழ்க வளமுடன்
குறைந்த கட்டணம் நிறைவான தரிசனம்

கலாநிதி. T. ஸ்ரீரெங்கநாதன், மகன் - ராஜன்
Office : City Center Shopping Complex, 3rd Floor, No.59,3/6, Sea Street, Colombo - 11
Tel : 0777 680 102, 0777 362 154
E.mail : sriranganathan2601@gmail.com - Web : www.sridevipilgrims.com
Facebook : sridevisriranganathan.thuraiappa
(C-2261)



கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னாரில் Full / Part time

SPOKEN English With Grammar
முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளிவரை தினமும் 4 மணித்தியாலங்களாக நடைபெறுவதுடன் பகுதி நேரப் பாடநெறிகள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.
Full time : 3 Months Course Fee : 13250/=

75% கட்டணக் கழிவுடன் கணனி கற்கை நெறிகள்

| Courses | Duration | Offer Fee |
|---|---|---|
| MS Office | 3 Months | 2000/= |
| DCS ( Diploma ) | 4 Months | 3000/= |
| Graphics | 4 Months | 7500/= |
| Web Design | 4 Months | 7000/= |
| Com. Hardware | 2 Months | 3000/= |

Computerized Accounting
Accpack + M.Y.O.B. +Quick book + Tally
Monday to Friday 1Week
Sat. / Sunday 1 Month
Offer Fee 3250/=

AutoCAD
Monday to Friday 9am to 5pm 3Weeks
Sat. / Sunday only 9am to 5pm 3 Months

பாடநெறி முடிவில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழில் கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்

BRITISH COLLEGE OF EDUCATION
23, Kachchari nallur Rd, Jaffna. Tel : 021-4927114, 077-8927639
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041, 077-0538523
39, Convent Rd, Mannar. Tel : 023-4924124, 077-1113205
10, Vaverset Place, Wellawatta, Colombo -06.
585, Peradeniya Rd, Kandy.


# சூடான உருளைக்கிழங்கு...

இதனை படித்துப் பார்த்த மங்கள சமரவீர, இது சூடான உருளைக் கிழங்கு இல்லை. இந்த அறிக்கை பெரும் அச்சத்தை தருவதாகவோ, எவரினது பெயர்களையும் உள்ளடக்கியதாகவோ இல்லல என்று கூறினார்.

இதன்போது, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சித்ராங்கனி வகீஸ்வரா, வெளிவிவகார அமைச்சில் ஐ.நா விவகாரங்களுக்கான பணிப்பாளர் மகேஷினி கொலன்னே மற்றும் ஜெனிவாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க ஆகியோரும் அங்கிருந்தனர்.

இதையடுத்து, ஜனாதிபதியின் தலைமையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்ட உயர்மட்டக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் இலங்கை தொடர்பான ஐ.நா விசாரணை அறிக்கையின் முக் கிய விடயங்கள் குறித்து மங்கள சமரவீர அவர்களுக்கு விளக்கமளித்தார்.

இதனையடுத்து ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக மங்கள சமரவீர தலைமையிலான குழு அன்றிரவே ஜெனிவாவுக்குப் புறப்பட்டது என இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது. (எ-12)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.